உ
கடவுள் துணை.
# செந்தமிழ்.

தொகுதி-எ.] சௌமியஹு ஐப்பசிமீ [பகுதி-கஉ.

## குண்டலகேசி வரலாறு.

இப்பெயர்பெற்ற நூல் தமிழில்வழங்கும் "பஞ்சகாவியங்"களில் ஒன்றென்பது பலரும் அறிவர். இந்தக்காவியம் இப்போது அகப்பட்டிலதாயினும், வேறு நூல்களில் இதைப்பற்றி வழங்கும் கதைகள் பாடல்கள் முதலியவிஷயங்களைச் சேதுஸம்ஸ்தானவித்வான் ஸ்ரீ: ரா. இராகவையங்காரவர்கள் இப்பத்திரிகையின் முதற்றொகுதி ௩-ம் பகுதியில் "குண்டலகேசி" என்றதலைப்பின்கீழ் நன்கு எழுதியிருக்கிறார்கள். அவற்றை யெல்லாம் இங்கே குறிப்பிப்பது மிகை யாதலால் அவற்றைவிடுத்து, குண்டலகேசியின் சரித்திரசம்பந்தமான ஒருவிஷயத்தை மட்டும் ஈண்டுக்குறிப்பிடுவோம். "நீலகேசி" என்றபழைய நூலினுரையில் இக்குண்டலகேசி வரலாறாக எழுதப்பட்டவை, ஐயங்காரவர்கள் காட்டியபடி, அடியில் வருமாறு:—

"குண்டலகேசி யென்பாள் ஒருவைசிய கன்னிகை; இவள் ஒருநாள் பிராஸாதஸ்தலத்து (மாளிகைமேடை) விளையாடுகின்றாளாக, ஒரு கிதவ (தூர்த்தனாகிய) வைசியபுத்திரன் காளன் என்பான். இவன் புத்ததரிசனங்கொண்டு பல்வழியும் சோரவிருத்தி பண்ணிச் செல்வானை அரசன் 'வதிக்க' என்றேவச் சிறைப்பட்டுப் போகின்றானை முன்சொன்ன குண்டலகேசி கண்டு காமபரவசையாக, அதனையறிந்து அவளுடையபிதா ராஜாவைக்கண்டு யாதானுமோருபாயத்தால் மீட்டு இவனுக்குக் குண்டலகேசியென்னுங் கன்னிகையினை விவாகவிதியாற்கொடுத்து இனிது செல்கின்ற காலத்து ஒருநாள், பிரணயகலகத்து நர்மோக்திமுகத்தால் (பரிகாச வார்த்தையால்) 'நீ கள்வனன்றோ' என்று குண்டலகேசி சொல்லக் காளனுந் தன்னுள்

ளத்தே சினங்கொண்டு, பின்பு ஒருநாள் வித்யாஸாதன வியாஜத்தால் இவளைத் தனிக்கொண்டு ஒரு பர்வதத்தேறி "நீ இவ்வாறு என்னைச் சொல்லுதலில் யானுன்னைக் கொல்லத்துணிந்தேன்" என்ன, குண்டலகேசியும் 'தற்கொல்லியை முற்கொல்லுக' என்பதன்றே? இவனை யான் கொல்வேன் எனநினைந்து, "யான்சாகிறேனாகில் உம்மை வலங்கொண்டு சாவல்" என அதற்கியைந்த காளனை வலங்கொள்கின்றாள் வரையினின்றும்(அவனை)விழ நூக்கினாள்; நூக்க, காளனும் புத்தஸ்மரணத்தினால் மோக்ஷித்தனன். குண்டலகேசியும் பர்த்ருவிரக துக்கிதையாகித் துறப்பனென நினைந்து பரசமயங்களெல்லாம் நாவல் நட்டு ஜயித்துப் பௌத்ததரிசனங்கொண்டு முத்திபெற்றனள் (மொக்கலவாதச்சருக்கம்-உ0) எனக்காண்க.

இவ்வரலாறு குண்டலகேசிகாவியத்திற் கூறப்படும் கதைச்சுருக்கமென்று கொள்ளப்படுகிறது. இச்சரித்திரத்தினுண்மை, மற்றொருவழியாலும் நமக்கிப்போது தெரியவந்தூறுதிப்படுதல் அறிந்து மகிழத்தக்கது. 1900-ம் வருஷம் ஸெப்டம்பர் அக்டோபர் மாதங்களில் வெளிவந்த மகாபோதிசங்கத்துப் பத்திரிகையில், (Journal of the Mahabodhi Society) குண்டலகேசி என்பாளைப்பற்றியசரிதம் அடியில் வருமாறு காணப்படுகின்றது.

"பெரிய தனவைசியனொருவனுடைய புத்திரியாகிய பத்தய-குண்டலகேசியென்பாள் சகல சௌகரியங்களுடனும் தந்தையால் வளர்க்கப்பட்டுவந்தாள். அவள் தன்தந்தை மாளிகையின் மேன்மாடத்தில் வாசஞ்செய்துவரலானாள். ஒருநாள், அவள் வெளியில் நடந்துவரும் விசேடங்களைச் சாளரவழியே உற்றுநோக்கிக் கொண்டிருந்தபோது, வாலிபனொருவன் நகரக்காவலரால் கொலைக்குற்ற விசாரணையின்பொருட்டு நியாயசபைக்குக் கொண்டுபோகப்படுவதைக் கண்டாள். அவ்வாலிபன், அரசனமைச்சரிலே ஒருவரது குமாரனாயிருந்தான், அவனதுபேரழிலைக்கண்டு இவள் அதிமோகங்கொண்டு அவனே தன் கொழுநனாகவேண்டுமென்பதைத் தன்தந்தையிடம் தெரிவித்துக் கொண்டாள். தகப்பன் இவளெண்ணத்திற்குமாறாகப் பல ஆக்ஷேபங்களைக்கூறித் தடுத்தும் ஒன்றும் பயன்படவில்லை. அதனால், அவ்வாலிபனைச்சிறைமீட்பதற்கு, பெருந்தொ

கையான பொருள்களைக் காவலாளர்க்கு அவன் 'லஞ்சம்' கொடுத்தே ஆகவேண்டியதாயிற்று. இங்ஙனமாகச் சிலகாலம் அவளுக்கு அவன் கணவனாக வாழ்ந்துவந்தான். ஆனால், அவ்ன் நெடுங்காலம் பழகிவந்த கொடுந்தொழில்களில் மறுபடியும் அவன் மனங்கவிந்தது. அதனால், தன் மனைவியையே ஒரு தனித்தவிடத்திற்கு அழைத்துச் சென்று அவளாபரணங்களையெல்லாம் அபகரித்து அவளைக் கொன்றுவிட நினைத்தான். உடனே அவன் தன்மனைவியிடம் "காவலர் தன்னைச் சிறைப்படுத்தியகாலத்தில் தான் விடுவிக்கப்பட்டால் தெய்வத்துக்குப் "பலிகாம" வேள்வியை நிறைவேற்றுவதாகப் பிரார்த்தனை செய்திருந்ததைச்சொல்லி, அதற்கு அவளைச் சகலஆபரணங்களையும் உடைகளையும் தரித்துக்கொண்டு உடன்வரச்செய்து, ஒரு மலைச்சிகரத்திற்கு அழைத்துச் சென்றான். சென்றதும், மனைவியை நோக்கி, அவளை மலையுச்சியினின்றும் கீழே தள்ளிக் கொன்றுவிட்டு ஆபரணங்களையெல்லாம் அபகரிப்பதற்காகவே தானழைத்துவந்ததாகத் தன்னுள்ளக்கருத்தை அவட்கு அறிவிக்கலானான். உடனே குண்டலகேசியும், அதற்குத் தான் சித்தமாகவிருப்பதாய்க் கூறி, ஒரு சமயோசிதமான யுக்தியால் வஞ்சகமொன்று செய்து, அம்மலையுச்சியினின்றும் தன்புருஷனையே கீழே தள்ளிவிட்டாள். இங்ஙனமாக அவனிறந்துவிட்டானென்பதுதெரிந்து உலகவாழ்க்கையை வெறுத்து "நிகந்தர்" என்ற முனிவரிருப்பிடம் அடைந்து அவருடன் கலந்து காலங்கழிக்கக் கருதினாள். ஆனால் அக்கூட்டத்தாரின் விதிமுறைப்படி தன் அழகான தலைமயிரைப் பிடுங்கிக் கொள்ள வேண்டியிருந்ததால் சிலகாலத்திற்குள் அதிருப்தி மேலிட்டு, அவர்களைவிட்டு விலகி, சிராவஸ்திநகரஞ்சென்று, அங்கு மகாத்மாவின் (புத்தர்) சிஷ்யர்களைக்கண்டு அவர்களுடன்வாதஞ்செய்து முடிவில் பிக்ஷுணிவாழ்க்கையை யேற்றுப் பரிசுத்தமான அருகத்பதத்தையடைந்தாள்" எனக் காண்க.

இவ்வரலாற்றுக்கும், நீலகேசியிற்கண்டதும் முற்காட்டியதுமான வரலாற்றுக்கும் சிலபேதங்களே உள்ளனவாயினும், பெரிதும் ஒற்றுமையிருத்தல் கண்டுகொள்க. இதனால், வைசியபுராணம் என்னும் புத்தகத்தில் ௩௪-ம் அத்யாயத்துக்கண்ட குண்டலகேசி வரலாறுமுழுதும் அதற்கு சம்பந்தமில்லாதகதையேயன்றி உண்மை சிறிது முடையதன்றெனத் தெரிந்துகொள்க. பத்திராசிரியர்.

# சாங்கிய கதோபதேசம்.

சாங்கியம் என்றது வேதசம்பந்தமான தரிசன சாத்திரங்கள் ஆறனுள்ளே ஒன்று. பிரகிருதி முதலிய பதார்த்தங்களின் சங்கியை அறிவித்தலாற் சாங்கியம் எனப்பட்டது. சங்கியை - எண். தரிசன சாத்திரங்களாவன:— மீமாஞ்சை, நியாயம், வைசேடிகம், சாங்கியம், யோகம், வேதாந்தம் என்பன. தரிசனம் - பிரமஞானோபாயங் கூறும் நூல். சாங்கியநூல் செய்தவர் கபிலமுனிவர்; இந்தச் சாங்கிய நூலிலே கடவுள் இல்லையென்பதும், மூலப்பிரகிருதியே யாவற்றிற்குங் காரணம் என்பதும், மூலப்பிரகிருதியிலிருந்து மகதத்துவம் முதலியன பரம்பரையாய்த் தோன்றும் என்பதும், புருடன் முத் துக்கங்களினும் நீங்கித் தன்னையும், மூலப்பிரகிருதியையும் பகுத்துணரும் விவேகம் பெறுதலே வீடு பேறு என்பதும், பிறவும் தடைவிடைகளோடு சொல்லப்படும்.

மூலப்பிரகிருதியாவது சாத்துவிகம், இராசதம், தாமதம் என்னும் முக்குணங்களும் சமத்தன்மையுடையனவாய் நிற்கும் நிலை. மூலம் - காரணம். பிரகிருதி - பிரதானம், இயற்கை. இது பிறிதொன்றினின்றும் தோன்றாமையால் அவிகிருதி எனவும் படும். மகத்து மனம் எனவும், புத்திஎனவும் கூறப்படும். புத்தியினின்று தோன்றுவது நானென அபிமானிக்கும் அகங்கார தத்துவம். அகங்காரத்தினின்று தோன்றுவன, தன்மாத்திரைகளும், ஞானேந்திரியங்களும், கன்மேந்திரியங்களுமாம். தன்மாத்திரையிலிருந்து தோன்றுவன, பிருதிவி முதலியனவாம். இவை மனத்தோடு சேர்த்துக்கணிக்குங்கால் இருபத்தைந்தாகும். புருடன் - ஆன்மா. இவை "சுவையொளி" என்னுங் குறளுரையிலே பரிமேலழகராலுங் கூறப்பட்டுள. முத் துக்கங்களாவன:—காமம், வெகுளி, மயக்கம் என்பன. முத்துக்கங்களினின்றும் நீங்குதலே புருடார்த்தம் என்று முதற் சூத்திரத்திலும் கூறினர்.

## சூத்திரம்.

அத த்ரிவிததுஃகாத்யந்தநிவ்ருத்திரத்யந்தபுருஷார்த்தஃ ||

(இதன் மொழிபெயர்ப்பு.)

(காமம், வெகுளி, மயக்கம் என்னும்) மூவகைத் துக்கங்களினின்றும் பூரணமாக நீங்குதலே பூரணமான ஆன்மப் பிரயோசனமாகும்.

முத் துக்கங்களையும் தவிர்ந்திருத்தலே முத்தியுபாயம் என்பது இதன் கருத்து. அத என்பது வடமொழியிலே வழங்கப்படும் ஒரு மங்கலமொழி. திரிவிதம் - மூவகை. அத்தியந்தம் - மிகுதி. நிவிர்த்தி - நீக்கம். புருடார்த்தம் - ஆன்மப்பிரயோசனம். இந்தச்சூத்திரமும் "காமம் வெகுளி" என்னும் திருக்குறளும் பொருளால் ஒற்றுமையுடையன.

திருக்குறள்.

காமம் வெகுளி மயக்க மிவைமூன்றன்
நாமங் கெடக்கெடு நோய்.

சாங்கிய மதத்தவருள்ளே சிலர் பிரகிருதியே பொருள் என்றும், லர் விகிர்தியே பொருள்என்றும், சிலர் பிரகிருதியும் விகிர்தியும் பொருள் என்றும், சிலர் அவையிரண்டும் பொருளல்ல என்றும் கூறுவர் என்று சாயணமாதவாசாரியர் கூறுவர். சிவசாங்கியர் என்றும் விஷ்ணுசாங்கியர் என்றும் வகையுளவென்று வேறுசிலர் கூறுவர். அவைநிற்க; இந்தச் சாங்கியநூலிலே நாலாம்பாகத்திலே உபதேசம் முதலிய சில விடயங்கள் கதைவாயிலாக உணர்த்தப்படுகின்றன. அவற்றுள்ளே சிலசில செந்தமிழ் படிப்பார்க்கு விநோதமாயிருக்குமென்று இங்கே எழுதப்படுகின்றன.

## சூத்திரம்.

ராஜபுத்ரவத் தத்வோபதேசாத் ||

(இதன் மொழிபெயர்ப்பு.)

(இளம்பருவத்திலே வேடரோடுகூடி வளர்ந்த) ஓர் இராசபுத்திரன் மெய்யுபதேசத்தினால் இராச்சியநிலைமை அடைந்ததுபோல

(ஆன்மாவும் மெய்யுபதேசத்தினுல் உண்மையுணர்ந்து தன்னிலையை அடையும்.)

மெய்யுபதேசத்தினுலே பொய்யுணர்வு நீங்கி மெய்ந்நிலை கைகூடும் என்பது கருத்து. தத்துவோபதேசம் - மெய்யுபதேசம். சூத்திரமாதல்பற்றி வேண்டுஞ்சொற்கள்வருவித்துப் பொருள்முடிக்கப்பட்டது. உபதேசத்தினுல் ஆத்துமா மெய்ந்நிலை அடைதற்குத் திருட்டாந்தம் இராசகுமாரன் கதை.

## இராசகுமாரன்கதை.

இராசகுமாரனெருவன் இழிந்தநாளிற் பிறந்தகுற்றங் காரணமாகத் தந்தையாகிய இராசாவையும், பிறரையும், தனது நாடுநகரங்களையும் இளம்பருவத்தில் விட்டுநீங்கி, மற்றொரு தேசத்தை அடைந்தான். அவனை அத்தேசவாசியாகிய வேடனெருவன் கண்டு தழுவியணைத்து வேடசேரியிற் கொண்டுபோய்த் தன் பிள்ளைபோல அன்புடன் வளர்த்தான். வளருங்கால் அவ்விராசகுமாரனும் வேடரோடு கூடிப்பயின்றும், வேடர்க்குரிய உண்டிகளை உண்டும், உடைகளைத் தரித்தும், தொழில்களைச்செய்தும், மொழிகளைப்பேசியும் ஒரு வேடனுகவே விளங்கினன். தானும் ஒரு வேடன் என்றே கருதியிருந்தான். இராசகுமாரன் என்பதை எட்டுணையும் அறிந்திலன்.

இப்படியிருக்கும் நாள்களில் தந்தையுடைய மந்திரிமார்களுள்ளே ஒருவன் அந்த வேடசேரியிற்போய் அவனைநோக்கி "மைந்தனே! நீ வேடரோடுகூடிவளர்ந்து நின்னிலையையும் இழந்து மயங்கி இடர்ப்பட்டு வருந்தினய்; நின் செயலிருந்தவாறென்னே? வேடர்கூட்டத்தை விட்டுவிடு! நீ வேடனல்லை! ஓர் இராசகுமாரன் என்பதை உணர்ந்துகொள்!" என்று உண்மையை உபதேசித்தான். இந்த உபதேசத்தைக்கேட்ட இராஜகுமாரனும் அதிசயித்து, "அந்தோ! இழிந்த வேடரோடு கூடி இதுவரையும் உண்மைதெரியாமல் மயங்கி இடர்ப்பட்டேன்! யானே வேடனல்லேன்! இராசகுமாரனுகிய எனக்கு வேடர்சேரி இயையுமா? என்றுசொல்லி உண்மையுணர்ந்து வேடரையும் வேடர்சேரியையும் விட்டு நீங்கி அந்த மந்திரியோடு சென்று தன்பதவியை அடைந்தான்.

இந்தச் சூத்திரமும் சிவஞானபோதத்தில் வரும் "ஐம்புலவேடரின்" என்னும் எட்டாஞ்சூத்திரமும், சித்தியாரில் வரும் "மன்னவன்றன் மகன்வேடர்" என்னும்செய்யுளும் பொருளால் வேறுபாடுடையனவல்ல.

சிவஞானசித்தியார்.

மன்னவன்றன் மகன்வேட ரிடத்தே தங்கி
வளர்ந்தவனை யறியாது மயங்கிநிற்பப்
பின்னவனு மென்மகனீ யென்றவரிற் பிரித்துப்
பெருமையொடுந் தானாகப் பேணு மாபோற்
றுன்னியவைம் புலவேடர் சுழலிற் பட்டுத்
துணைவனையு மறியாது துயருறுந்தொல் லுயிரை
மன்னுமருட் குருவாகி வந்தவரி னீக்கி
மலமகற்றித் தானாக்கி மலரடிக்கீழ் வைப்பன்.

## சூத்திரம்.

𑌪𑌿𑌶𑌾𑌚𑌵𑌦𑌨𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑍋𑌪𑌦𑍇𑌶𑍇𑌽𑌪𑌿 ॥

(இதன மொழிபெயர்ப்பு.)

பிறனுக்குச்செய்யும் உபதேசத்தின் கண்ணும் பிசாசம் ஒன்றுக்குப் பயனுண்டாயவாறு போலப் பக்கத்தினின்று கேட்போருக்கும் பயனுண்டாகும்.

உபதேசிக்கும்போது பக்கத்தினின்று கேட்போரும் பயன் பெறுவர் என்பது இதன் கருத்து. பிசாசம் - பேய். அந்நியார்த்தம் - பிறன்பொருட்டு.

## பிசாசின் கதை

துரியோதனன் முதலியோரும், தருமன் முதலியோரும் யுத்தஞ்செய்யும்படி குருக்கேத்திரத்திலே போய்நின்றார்கள். அவருள்ளே அருச்சுனன் போர்புரிய நிற்பவர்கள் யாவர்யாவர் என்று பார்த்தான். பார்த்தபோது நிற்பவர்களெல்லாஞ் சுற்றத்தவர்களாய்த் தோன்றக்கண்டு கண்ணபிரானை நோக்கி "இருடீகேசா! இங்கேநிற்கும் என் சுற்றத்தவர்களைநோக்கி என்னவயுவங்கள் சோர்

கின்றன! வாயும் புலர்கின்றது! உடம்பும் நடுங்குகின்றது! உரோமமுஞ் சிலிர்க்கின்றது! காண்டீபமும் கையினின்றும் வழுவுகின்றது! மனமும் மயங்குகின்றது! இருத்தற்கும் இயலவில்லை! அபசகுனங்களையும் காண்கின்றேன்! என்சுற்றத்தவர்களை யான் கொல்லமாட்டேன்!" என்றுசொல்லிப் போர்புரிதலை மறுத்தான். அப்போது கண்ணபிரான் அவனைக்கொண்டு போர்செய்விக்க எண்ணி ஆத்மதத்துவோபதேசத்தைக் கீதைவாயிலாக உபதேசித்தார். அதனைப் பக்கத்திற் கேட்டுநின்ற ஒருபிசாசும் பிரகிருதிக்கும் ஆத்மாவுக்குமுள்ள பேதத்தை உள்ளவாறே உணர்ந்துகொண்டது.

## சூத்திரம்.

நிராஶஃ ஸுகீ பிங்களாவத் ॥

(இதன் மொழிபெயர்ப்பு.)

ஆசையில்லாதவன் பிங்கலை என்பவளைப்போலச் சுகமுடையவனவன்.

ஆசையே துக்கமுறுதற்குக் காரணம் என்பது இதன் கருத்து.

## பிங்கலை கதை.

ஓரூரிலே பிங்கலை என்னும் பெயரையுடைய கணிகை ஒருத்தி இருந்தாள். அவள் ஒரு நாயகனைப்பெறவேண்டும் என்று பலநாள் ஆசைகொண்டு பரிவுற்றலைந்தாள். அந்த நாயகனோ அவளுக்கு வாய்த்திலன். அவளுடைய ஆசையும் பயனற்றதாயிற்று. பின்னர் அவள் மனம் வருந்தி அந்தோ! இந்த ஆசை என்னை எவ்வளவோ வருத்திற்று. இந்த ஆசையினாலே யாதொரு பயனும் இல்லை என்று சொல்லி ஆசையை முற்றக்களைந்தாள். ஆசையற்றபோதே துக்கமுமற்றுச் சுகமுடையவளானாள்.

பொருள்களிற் பற்றுவைத்தலே துயருறற்குக் காரணம், "இச்சையாம் விறகுமாண்டா விடுக்கணும் வெந்தீமாளும்" என்று பிறருங் கூறுவர். இந்தச்சூத்திரமும், "அவாவில்லார்" என்னுந் திருக்குறளும் பொருளால் ஒற்றுமையுடையன.

திருக்குறள்.

அவர்வில்லார்க் கில்லாகுந் துன்ப மஃதுண்டேற்
றவாஅது மென்மேல் வரும்.

இவையன்றிச் செந்தமிழ்நூற் பொருட்சம்பந்தமுடையனவாய் இன்னும் பல வருகின்றன. இந்தச் சாங்கிய மதம் இக்காலத்திலே அநுசரிக்கப்படுவதொன்றன்று.

இங்ஙனம்,

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

---

உ

# திருக்குறட் பரிமேலழகருரை விளக்கம்.

(முற்றொடர்ச்சி.)

மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்.

இ - ள். மலர்மிசை..................வாழ்வார். எ-று.

அன்பானினைவாரது.............. ..........நினைத்தல்.

வி - ம். மலரின்கண்ணே என்றது இதயகமலத்தின்கண்ணே என்றவாறு. மலர் -- தாமரைமலர்; அஃது ஈண்டு இதயகமலத்தைக் குறிப்பானே உணர்த்திநின்றது. இவ்வாறே பிறரும் "பூதம் யாவையி னுள்ளலர் போதென" திருத்தொண்டர் புராணம், எனவும் "வானவன்காண்...........கருதுவாரிதய கமலத்தூறுந் - தேனவன் காண்" (தேவாரம்) எனவும், "செங்கமலப்போதிற் றிகழ்செல்வன்...........தமதுள்ளத் - தங்கமலத் தோடேத் திடவண்டத் தமர் வாரே" (தேவாரம்) எனவும், "ஹ்ருத்புண்டரீகம் விரஜம் விஶுத்தம் விசிந்த்யமத்யே விஶதம் விஶோகம் । அசிந்த்யமவ்யக்தமனந்தரூபம் ஶிவம் ப்ரஶாந்தமம்ருதம் ப்ரஹ்மயோநிம்"(கைவல்லியோபநிடதம்) எனவும், "தஹரம்விபாப்மம் பரவேஶ்மபூதம் யத்புண்டரீகம்புரமத்யஸம்ஸ்தம்"

*

(மகாநாராயணோபநிடதம்) எனவும், "அத யதிதமஸ்மிந் ப்ரஹ்மபுரே தஹரம் புண்டரீகம் வேஸ்ம தஹரோऽஸ்மிந்நந்தராகாஸஸ்தஸ்மிந் யதந்தஸ்ததந்வேஷ்டவ்யம் தத்வாவ விஜிஜ்ஞாஸிதவ்யம்" (சாந்தோக்கியோப நிடதம்) எனவும், இதயகமலம் ஒன்றுளதாகக் கூறுதல் காண்க. "அண்டபிண்டமவை சமமாதலால்" அண்டத்திலுள்ளனவெல்லாம் பிண்டத்துள்ளுஞ் சூக்கும ரூபமாயுண்மையின் அண்டவடிவாகிய முப்பத்தாறு தத்துவங்களும் இதயத்திற் கமலரூபமாய் விளங் கும் என்க. எங்ஙனமெனின்; நிலமுதலிய இருபத்துநான்கு தத் துவங்களும் நாபியினின்றுந்தோன்றும் எண்விரலளவைத்தாகிய நாளவடிவாகவும், வித்தியாதத்துவமேழும் சுத்தவித்தையுமாகிய எட் டும் எட்டிதழ் வடிவாகவும், அவற்றின்மேற்கருதப்பட்ட ஈசுரதத் துவமும் சதாசிவதத்துவமும் அறுபத்துநான்கு கேசரவடிவாகவும், சத்திதத்துவம் அக்கேசரங்களுக்குள்ளாகிய பொகுட்டுவடிவாகவும், சிவதத்துவம் அப்பொகுட்டினுட் காணப்படும் ஐம்பத்தொரு பீச வடிவாகவும் அமைந்து விளங்கும் என்க. இதன்வடிவைப் பிறவாறு கூறுவாருமுளர். இதன் விரிவையெல்லாம் சிவஞானபோத மாபா டியம் உ0உ-ம், உ0௩-ம் பக்கங்களிற்காண்க.

சென்றவனது என்றார், அடிசேர்ந்தாரது உள்ளக்கமலத்தின் கண் சோதிக்குட் சோதியாய் வெளிப்பட்டுத் தானே தோன்றுவனு தலின். இதனை; "நிர்க்குணனுய்.........ஆனுவறிவா யளவிறந்து தோன்றுனே - வானே முதல்களையின் வந்து" (சிவஞானபோதம்) எனவும், "இந்தனத்தினெரிபாலினெய்...........சிந்தனைசெய்தர்ச்சிக் கச் சிவனுளத்தே தோன்றித்தீ யிரும்பைச் செய்வதுபோற் சீவன் றன்னைப் - பந்தனையை யறுத்துத்தானுக்கித் தன்னுருவப் பரப்பெல் லாங் கொடுபோந்து பதிப்பனிவன் பாலே" (சிவஞானசித்தியார்) எனவும், "வானவன்காண்..............கருதுவாரிதய கமலத்துறுந்- தேனவன் காண்" (தேவாரம்) எனவும், "பாவிப்பார்மனம்பாவிக் கொண்டான்றனை" (தேவாரம்) எனவும் கூறியவாற்றானே அறிக.

மாட்சிமைப்பட்ட அடியென்றார் சேர்ந்தாருடைய பாசத்தை நீக்கிச் சர்வஞ்ஞாதி குணங்களைக்கொடுத்துப் பதித்துவமாக்கலின். அது; "சுழலார் துயர்வெயிற் சுட்டிடும் போதடித் தொண்டர்

துன்னு - நிழலாவன வென்று நீங்காப் பிறவிநிலைகெடுத்துக் - கழலா வினைகள் கழற்றுவ காலவனங் கடந்த - வழலா ரொளியன காண்கவை யாற னடித்தலமே'' (தேவாரம்) என்பதனாலும், "மதிக்குந்... ...........திருவடியென் றலைமேல் வீற்றிருப்பக் - கதிக்கும் பசுபாச மொன்றுமிலோம்......................கொண்டன்றே" (திருவாசகம்) என்பதனாலும், "ஆவா........பூவா ரடிச்சுவடென் றலைமேற் பொறித்தலுமே - தேவானவா பாடித்தெள்ளேணங்கொட்டாமோ" (திருவாசகம்) என்பதினானு மறியப்படும். (தே - கடவுட்டன்மை.)

சேர்ந்தார் என்றது ஞானக்கண்ணினாலே மெய்ப்பொருளை யறிந்து அதனோடொற்றுமைப்பட நின்று அத்துவிதமாகப் பாவனை செய்தோர் என்றவாறு. ருடுஅ-வது குறளின் விசேடவுரையில், "அதனைக் காண்கையாவது உயிர் தன்னவிச்சை கெட்டு அதனோடொற்றுமையுற இடைவிடாது பாவித்தல்" எனப்பரிமேலழகரும் கூறுதல் காண்க. "சேர்தல் இடைவிடாது நினைத்தல்" என அவர் கூறியதூஉம் இக்கருத்து நோக்கியே. இதுவே அத்தியாசிரமபாவனை எனவும், சிவோகம்பாவனை எனவும் கூறப்படும். மெய்ப்பொருள் ஞானக்கண்ணினாலேயே அறியப்படும் என்பதை, "ஊனக்கண் பாசமுணராப் பதியை - ஞானக்கண்ணினிற் சிந்தைநாடி" (சிவஞானபோதம்) எனவும், "பாசஞானத்தாலும் பசுஞானத்தாலும் பார்ப்பரிய பரம்பரனைப் பதிஞானத்தாலே - நேசமொடு முள்ளத்தேநாடி" (சிவஞானசித்தியார்) எனவும், ஶிவாக⁴மஶ்ரீயித்ரா ஸமீக்ஷ்தவீஜா ஶா । ஶிவஶக்த்யாதிஹிஸ்ஸ்மம் வஶ்யத்ரா ஜ்ஞாநசக்ஷுஷா । (சிவாகமம்) எனவும், "மைப்படிந்த...............அப்படியு மந்நிறமு மவ்வண்ணமு மவனருளே கண்ணாகக் காணினல்லா - லிப்படிய னிந்நிறத்த னிவ்வணத்த னிவனிறைவ னென்றெழுதிக் காட்டொணாதே" எனவுங் கூறுமாற்றானே அறிக. அதனோடொற்றுமைப்படநின்று அத்துவிதமாகப் பாவித்தலாவது அதுவேறு தான்வேறு என்னுந் துவித பாவனையை யொழித்து அதுவே நானென்று அத்துவிதமாகப் பாவித்தல். அது "ஶிவோऽஹமஸ்மீதி ஸதா ஸம்ஸ்தித்ஸ்ய யத்பாவத்வம் । யஸ்ஶிவோऽஹமஸ்மீதி ஸம்யக்த்யாவயேத்ஸதா" (சர்வஞானோத்தரம்) எனவும், "கண்டவிவை யல்லேனானென் றகன்று

சாணுக் கழிப்ராமு நானல்லே னெனக்கருதிக் கசிந்த - தொண்டினேடு முளத்தவன்று னின்றகலப் பாலே சோகமெனப்பாவிக்கத் தோன்று வன்வே றின்றி..................பண்டை மறைகளுமதுநா னென்று பாவிக்கச் சொல்லுவதிப் பாவகத்தைக் காணே" (சிவஞானசித்தியார்) எனவும் கூறியவற்றுனே பெறப்படும். நாயனுர் "பிறப்பென் னும் பேதைமைநீங்கச் சிறப்பென்னுஞ்-செம்பொருள்காண்பதறிவு" எனக் கூறியதூஉம் இப்பாவனையையே.

எல்லாவுலகிற்கு மேலாய வீட்டுலகென்றது "பிருதுவிசலில வாயு அந்தரிக்ஷலோக தேவலோக சந்திரலோக பிராஜாபதிலோகமென்னும் லோகமெல்லாங்கடந்த பிரமலோக" மென்றவாறு, (இதனைப் பிரமசூத்திர சைவபாடியம் உபநிடதஉபக்கிரமணிகையிற் காண்க.) "ததூர்த்வம் ப்ரஹ்மலோகாக்யம் [illegible] । [illegible] நித்யம் நிவஸதீஶ்வர꞉" என்னும், (வாயுசங்கிதை) சுலோகத்தானும், "ப்ரஹ்மலோகமபிஸம்பத்யதே" என்னும் (சாந்தோக்கியோபநிடதம்) சுலோகத்தானும், "மெய்யருளே யுடையானை விண்டவரேறுவர் மேலுலகே" என்னும் (தேவாரம்) செய்யுளானும், "துஞ்சலிலாவுலகம்" என்னும் (தேவாரம்) செய்யுளானும் கூறப்பட்டனவும் இப்பிரமலோக (சிவலோக) மே.

அழிவின்றிவாழ்வார் என்றது மீளப்பிறவியை நோக்காது நிரதிசய பிரமானந்தத்தோடு மற்றைய வேட்டபோகங்களையு மனுபவித்து வாழ்வார் என்றவாறு. பிரமலோக மெய்தினோர் மீளப்பிறவியை நோக்கா ரென்பது "ப்ரஹ்மலோகமபிஸம்பத்யதே ந ச புநராவர்த்ததே ந ச புநராவர்த்ததே" (சாந்தோக்கியோபநிடதம்) என்பதனானும், "அநாவ்ருத்தி꞉ ஶப்தாத் அநாவ்ருத்தி꞉ ஶப்தாத்" (வேதாந்த சூத்திரம்) என்பதனானும், "ததூர்த்வம் ப்ரஹ்மலோகாக்யம் ப்ராப்ய ந நிவர்த்ததே" (வாயுசங்கிதை) என்பதனானும், பிரமானந்தத் தோடு மற்றைய வேட்ட போகங்களையு மனுபவித்து வாழ்வாரென்பது "ஸோஶ்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ ப்ரஹ்மணா விபஶ்சிதா" (தைத்திரியோபநிடதம்) என்பதனானும், "நிலையுடைய பெருஞ்செல்வ நீடுலகிற் பெறலாமே" (தேவாரம்) என்பதனானும் அறியப்படும்.

அடிசேர்ந்தாரது உள்ளக் கமலத்தின்கண் இறைவன் செல்வானென்பது உரைப்பிரமாணத்தாற் றெளியப்பட்டதாதலின் தெளிவு பற்றி ஏகினனென இறந்தகாலத்தாற் கூறினரெனினு மமையும். என்னை? "வாராக் காலத்து வினைச்சொற் கிளவி - யிறப்பினு நிகழ்வினுஞ் சிறப்பத் தோன்று - மியற்கையுந் தெளிவுங் கிளக்குங்காலை" என்பதோத்தாகலின். இங்ஙனமே சிவஞானபோதச் சிற்றுரைகாரரும், "ஏகமாய் நின்றே யிணையடிக ளொன்றுணரப் - போகமாய்த் தான்விளைந்த பொற்பினான்" என்பதில் தெளிவுபற்றி விளைந்த என இறந்த காலத்தாற் கூறினர் எனக்கூறுதல் காண்க. பிறிதோர் கடவுளென்றது அருகனை; அது "பூமிசை நடந்த வாமனை வாழ்த்தி" என்பதனாலறியப்படும். இடைவிடாது நினையாதொழியின் பாசஞானம் வந்து பற்றுமென்க.

சி. கணேசையர்.

---

உ

# உபாத்தியாயர் வகையுஞ் செயலும்.

பண்டைக்காலப் பாடசாலைகளுக்கும் இப்பொழுதைப்பாடசாலைகளுக்கும் உள்ள வேறுபாடுகள் மிகப்பல; அக்காலத்திற் பாடசாலையென வேறு இடமின்றித் தேவாலயம் மடாலயம் உபாத்தியாயர் வீடு ஆகியவற்றிற் கல்வி கற்பிக்கப்பட்டு வந்தது. கற்போர் தொகையும் அங்கங்கு சொற்பஞ்சொற்பமாய் இருந்தது. ஒவ்வோர் இடத்திலுங் கற்பிப்போரும் பெரும்பான்மையும் ஒவ்வொருவரே. கற்பிக்கும் முறையும் வேறு: அம்முறையுஞ் சிறிதுதூரங் கற்றுத் தேர்ந்தவர்க்கே கற்பிக்க உரியது. "இருவென இருந்து சொல்லெனச் சொல்லி" என்றற்றொடக்கத்தன சான்றாகும். இக்காலத்திலோ அப்படியன்று. பாடசாலைக்கென்று இடங்கள் வேறாகச் சுகாதார விதிகளை அனுசரித்துக் கட்டப்படுகின்றன. அவைகளிற் கற்கும் மாணாக்கர் தொகையும் மிகப்பெரிது. ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலுங் கற்பிக்கும் ஆசிரியரும் அனேகர். அவரெல்லாம் ஒரு திறத்தி

னராகமாட்டார். பல திறத்தினராயே விளங்குவர். அவர் வகையையுஞ் செயலையும் இனி ஆராய்வாம்.

இக்காலப்பாடசாலைகளிற் கற்கும் மாணுக்கரும் வயது தேர்ச்சி முதலியவற்றாற் பல்வேறு திறத்தினரும் தொகையான் மிகப்பெரியருமாயிருத்தலின், அவரைக் கற்பிப்பதற்கும் ஒவ்வொருபள்ளிக்கூடத்திலும் உபாத்தியாயர் அனேகர் வேண்டப்படுகின்றனர். அவருள்ளும் ஒருவரே பாடசாலையை நடாத்தும் பாரத்தை வகிப்பர். அவர் அத்தியக்ஷர் என்றுந் தலைமை உபாத்தியாயர் என்றுஞ்சொல்லப்படுவர். மற்றையோர் அவர் சொற்கமைந்து நடக்கும் உதவியாசிரியரெனப்படுவர். ஒவ்வொரு பாடசாலையிலும் உதவியாசிரியர்கள் அப்பாடசாலைத் தலைமை உபாத்தியாயரது சம்மதியுடனேயே நியோகிக்கப்பட்டவராயிருத்தல் வேண்டும்; இல்லையேல் தலைமைஉபாத்தியாயருக்கும் உதவியுபாத்தியாயர்களுக்கு மிடையில் ஒற்றுமையின்மை உண்டாதல் கூடும். இளைஞர்களாயுள்ள வரையே உதவியாசிரியர்களாக நியோகித்தல் நன்று; சரீர மனமுயற்சிகணிறைந்துள்ளவராகலின்.

உதவியாசிரியர்களாற் செயற்பாலனவாய செயல்வகைகள் இரண்டு. அவற்றுள் ஒன்று ஒருவகுப்புக்குரிய எல்லாப்பாடங்களையும் ஒருவரே படிப்பிப்பது. மற்றது வகுப்பு வகுப்பாகச் சென்று சிலசிலபாடங்களை ஒவ்வொரும் படிப்பிப்பது. இவ்விருவகைகளும் வழக்கிலுள்ளன. ஒன்றே சிறந்தது என்றும் மற்றது குறைந்தது என்றுஞ் சொல்லல் பொருந்தாது. ஒவ்வொன்றும் ஒவ்வோர் இழுக்குடைத்து. ஒருவர் ஒருவிஷயத்தை மாத்திரங்கற்பிப்பவராக இருந்தால் அவர் அவ்விஷயத்துக்கும் மற்றவிஷயங்களுக்குமுள்ள தாரதம்மியத்தை மறந்து தாங்கற்பிக்கும் விஷயமே முக்கியமானதென்றெண்ணவும், பிள்ளைகள் தங்கள் மற்றைப் பாடங்களை அலக்ஷியஞ்செய்து அவ்வொரு பாடத்திலுமே கவனம் வைப்பதற்கும் ஏதுவாம். ஒவ்வொரு வகுப்புக்கு ஒவ்வொரு உபாத்தியாயராக நியமிக்கின் இக்குறை வருதல் இல்லை. என்றாலும், இதற்கும் வேறோர் குறையுண்டு. அது ஒருவன் தனக்குத் தெரியாதனவான பாடங்களையும் படிப்பிக்க வேண்டியிருத்தலே. இவ்வகைகளிரண்டுங்

கலந்திருப்பதே உத்தமம். பெரும்பான்மையுங் கீழ்வகுப்புகளொவ்வொன்றும் ஒவ்வோர் உதவியுபாத்தியாயன் பொறுப்பிலிருத்தலே அவ்வகுப்பு ஒழுக்கத்திற்குந் தேர்ச்சிக்கும் அனுகூலமாம். மேல் வகுப்புகளில் வகுப்பின் ஒழுக்கத்திற்கு ஒருவர் உத்திரவாதியாயிருப்ப மற்றவர்கள் தாந்தாம் எவ்வெவ்விஷயத்திற் பாண்டித்தியம் பெற்றிருக்கின்றனரோ அவ்வவ்விஷயத்தைக் கற்பிக்கும்படி நியமிக்கப்படல் வேண்டும்.

> "இதனையிதனாலிவன்முடிக்குமென்றாய்ந்
> ததனையவன்கண்விடல்."

என்பதனாலும் அறிக.

இனித்தலைமை யுபாத்தியாயர் செய்யவேண்டியது யாதென ஆராய்வாம். தலைமை உபாத்தியாயராவார்கடப்பாடு படிப்பித்தலும் மற்றவர்களின் வேலையை மேற்பார்வை செய்தலும் என இருவகைத்து. அவர் தந்நேரம் முழுமையையும் படிப்பித்தலிலேயே கழித்தல் வேண்டற்பாலதன்று. மற்றை உதவியுபாத்தியாயர்களின் வேலையை மேனோக்கலும் அத்தியாவசியகம். அஃதில்லாவழிவருந்தீமை பல. பாடசாலை சிறிதாயின் தலைமையுபாத்தியாயர் மேற்பார்வையோடுசில பாடங்களைப்படிப்பித்தலுஞ்செய்யலாம். அஃதன்றிப்பாடசாலை பெரிதாயின் படிப்பிக்கும் வேலையை மிகக்குறைத்து மேற்பார்வை செய்தலை அதிகமாகக் கைக்கொள்ளவேண்டும். மேலதிகாரிகளால் வரையறுக்கப்படாவழிக் கற்பிக்கவேண்டிய விஷயங்கள் இன்ன இன்னவென்றும் பாடங்கள் இன்ன முறையிற் றொடர்வனவென்றும் வரையறுத்தலும், அவைகளைக்கற்பிக்கும் நேரசூசிப்பத்திரம் வரைதலும் உதவியுபாத்தியாயர்கள் செய்யவேண்டிய வேலையை அவரவர்க்கு கூறுபடுத்துக் கொடுத்தலும், மாணாக்கர்களை அவரவர் தேர்ச்சிக்கியைந்த தரங்களில் வைத்தலுங், காலத்துக்குக் காலம் வகுப்புத்தோறுஞ்சென்று சுற்றிப்பார்த்தலும் பரீக்ஷித்தலும், இளைஞர்களும்புதியர்களுமான உதவியாசிரியர்களின் வேலையை மேற்பார்வை செய்தலும், பாடசாலையதிகாரிகளுக்குப் பாடசாலையை நடாத்தும் விதத்தில் வேண்டுந்திருத்தங்களை யெடுத்துக்காட்டுவதும் இவை போன்ற

பிறவும் தலைமை உபாத்தியாயராற் செயற்பாலதாய் கட்டுப்பாட்டுளடங்குவவாம்.

பள்ளிக்கூடத்தை நடாத்தும் பாரம் முழுதுந் தலைமையுபாத்தியாயரிடந் தங்கியிருப்பினும் அவர் தம் உதவி உபாத்தியாயர்களுடன் சூழ்ந்து அவர்களின் ஆலோசனையையும் அறிதல் மிக வேண்டற்பாலது. ஒவ்வொருவருந் தத்தங் கடனைச்செய்தலோடு மற்றவர்கள் செய்கையையும் ஒப்பநோக்கல் மிகுந்த நன்மை பயப்பதாகும். வினைசெய்யுந்திறங்களைத் தான் அறிந்துவிடத்தும் அப்பொழுது நடக்கின்ற உலகவியற்கையை அறிந்து அதனோடு பொருந்தச் செய்ய வேண்டும். ஒவ்வொரு பாடசாலையுபாத்தியாயர்களுங் காலத்துக்குக் காலந் தந் தலைமை உபாத்தியாயரின் அறையிலாதல் வேறெவ்விடத்தாதல் ஒன்றுகூடல் வேண்டும். அவ்வித கூட்டங்களில் ஒவ்வொருவருந் தாந்தாம் அவதானித்திருக்குங் குறிப்புக் களையும் உபாயங்களையும் பிள்ளைகளைப்பற்றிய அபிப்பிராயங்களையும் வெளியிட்டு ஒப்புநோக்கி மேற்செய்யவேண்டியவற்றை ஆலோசிக்கலாம். சில பாட்சாலைகளில் ஒவ்வொரு வாராந்தத்திலும் உபாத்தியாயர்கள் ஒன்றுகூடிச் சென்ற வாரத்துச்செய்யப்பட்ட வேலையின் கணுள்ள குறைவுகளை யாராய்தலும் அடுத்த வாரத்துவேலையைக் குறித்து ஆலோசித்தலுஞ் செய்வது வழக்கம். இவ்வழக்கம் மிகுந்த அனுகூலகரமென்பதிற் சிறிதும் ஐயமின்று. இவ்வித கூட்டங்கள் இல்லையேல் உபாத்தியாயர்கள் கைக்கொள்ளுஞ் சிக்ஷோபாயங்கள் தம்முள் ஒரு சிறிதும் ஒற்றுமையுறாது ஆளுக்கு ஒவ்வொரு விதமாக இருக்கும். அதுமட்டோ! தலைமையுபாத்தியாயர் தன் உதவியுபாத்தியாயர்களைத்தன்னினீங்காமல் அணைத்தற்கும் ஏற்றவழி யிதுவேயாம். தலைமை உபாத்தியாயர் மற்றை உபாத்தியாயர்களோடு தழுவி நடக்குங்கால் தன் கௌரவங்குறையாது பாதுகாத்தலும் வேண்டும்.

"கருமஞ்சிதையாமற்கண்ணோடவல்லார்க்
குரிமையுடைத்திவ்வுலகு" என்றார் நாயனாரும்.

தி. சதாசிவஐயர்.

---

# திருவாசகம்

## சில அருந்தொடர் விளக்கம்.

"மரகதக்குவாஅன்......வாணுதற்பெண்ணெனஒளித்தும்."

மேற்கண்டபாகம் திருவண்டப்பகுதியில் இருக்கின்றது. இதனை அர்த்தம் செய்வதில் அதிக கஷ்டமிருக்கிறது. திருவாசகத்திற்குப் பதவுரைசெய்திருக்கின்றவரும், ஆங்கிலேய பாஷையில் மொழிபெயர்ப்பு ஆசிரியருமான போப்பு என்பாரும் இதன்பொருளைச் சரியானபடி அறிந்திருக்கின்றனர் என்று எனக்குத்தோன்றவில்லை. இப்பாகத்தில் ஸ்ரீமாணிக்கவாசகர் அருமையானவும் உயர்வானவுமான விஷயங்களை உபதேசித்துள்ளார்.

### விஷயம்:—பக்தியின் உயர்வு.

௧. "மரகதக்குவாஅன்மாமணிபிறக்கம்" இந்த அடியைப் பின்னால் வருகின்ற ௩-ம் அடியுடன்சேர்த்து, "திசைமுகனுக்கு" அடைமொழியாக வழக்கமாய் அர்த்தம் செய்திருக்கிறார்கள்; இது சரியன்று. "தேடினர்" என்று பன்மைவினை வருகிறது. அதனால், திசைமுகனைத்தவிர வேறு ஓர் எழுவாயும் இருத்தல் வேண்டும். "மரகத........பிறக்கம்" என்பது பச்சைநிறமுள்ள விஷ்ணுவைக் குறிப்பிடுகின்றது. "பச்சைமா மலைபோல்மேனி பவளவாய் கமலச் செங்கண்." என்ற தொண்டரடிப் பொடியாழ்வார் அருளிச்செய்த தொடர் இங்குகவனிக்கத்தக்கது. ஆக முதன்மூன்று அடிகளுக்குக் குறிப்பு அர்த்தம் என்னவென்றால்,பச்சைமேனியையுடைய விஷ்ணுவும் திசைமுகனும் முறையே வராக அவதாரமாகவும் அன்னப் பறவையாகவும் பரமசிவனின் அடிமுடியைத் தேடினர்; அவர்களாற் காணமுடியவில்லை.

௨. "உறையுளி ஒற்றி முயன்றவர்க் கொளித்தும்"

உறையுளி: உறை+உள்+இ=கோசத்துக்குள்ளானவன் என்ற அர்த்தம் மிகவும் நன்றாயிருக்கிறது. தைத்தரிய உபநிஷத்தில் முத

லாம் வல்லியில் பிரணவத்தின் மஹிமையைப்பற்றிச் சொல்லுமிடத்து, "ப்ரஹ்மணஃகோசோஸி" என்ற வசனம் உள்ளது. இதன் பொருள்:...பிரஹ்மத்தின் கோசம், அதாவது உறையாக நீ (பிரணவமே) இருக்கிறாய். 'உறையுளி' என்றால், பிரஹ்மத்தின் மஹா உத்கிருஷ்டமான பிரதீகமான "ஓம்" என்றதனுள் அந்தர்கதமாகவுமுள்ளவர் என்பது பொருள். இவ்விடத்தே வாக்கியத்தின் அர்த்தம் என்னவென்றால், பரமசிவனைப் பிரணவஸ்வரூபியாக உபாசிக்கின்றவருக்கும் அவர் தம்மை ஒளித்துக்கொண்டார் என்பதாம்.

௩. "ஒற்றுமைகொண்டு......உறைப்பவர்க்கொளித்தும்"

கஷ்டத்துடனே சித்தவிருத்திகளை ஒடுக்கி, உள்ளே நோக்கி இந்நிலையில் இருக்கின்றவர்க்கும் பரமசிவன் ஒளித்துக்கொண்டார்.

௪. "இத்தந்திரத்திற்காண்டும்..........."

இது வெளிப்படையாக இருக்கின்றமையால் விவரிக்கவில்லை.

௫. "முனிவரைநோக்கி...வாணுதற்பெண்ணென ஒளித்தும்."

இது கேன உபநிஷத்தின், ௩-ம் கண்டத்தில் சொல்லியிருக்கிற கதையைப்பற்றியது. தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் நேர்ந்த சண்டையில் தேவர்கள் பக்ஷமாகப் பரமேசுவரன் இருந்து அசுரர்களை வென்றார். தேவர்கள் தாங்களே தங்களுடைய மஹிமையால் வென்றோமென இறுமாப்புக்கொண்டார்கள். அதைத் தவிர்க்கும் பொருட்டு தேவர்கள்முன் ஆகாசம் பூமி இரண்டும் அளாவிய ஒரு யக்ஷஸ் ஸ்வரூபமாகப் பரமசிவன் தோன்றினார். அவரைத்தேவர்கள் அறியமுடியவில்லை. அக்கினிபகவானை அதை இன்னதென்று அறிந்து வரும்படியாக அனுப்பினார்கள். அவர் அறியக்கூடவில்லை. பின்பு வாயுபகவானை அப்பினார்கள். அவரும் அறியக்கூடவில்லை. பின்பு இந்திரனை அதை அறிந்துவரும்படி கேட்டுக்கொண்டார்கள். இந்திரனும் உடன்பட்டு அறிய முயற்சித்தார். அந்த யக்ஷஸ் தோன்றிய விடம் சென்றார். அது திரோதானமாயிற்று. அந்தவிடத்தில் ரூபலாவண்யமுள்ள தேஜோமயமான ஒருஸ்திரீ தோன்றுவாளாயினள். இந்தக்கதையை ஸ்ரீ மாணிக்கவாசகர் இந்தப்பாசுரத்தில் சொல்லியி

ருக்கின்றார். முதலில் யக்ஷஸ் "ஆணாகத்தோன்றினார்" தேவர்களுக்கு இன்னதென்று புலப்படாமையால் அலியெனப்பின்பு மாறினார் என்றும், பின்பு அலியும் மறைந்து வாணுதல் பெண்ணுருவத்தில் பரமசிவன் தம்மை ஒளித்துக்கொண்டார் என்றும் மாணிக்கவாசகர் அருளிச்செய்திருக்கின்றார்.

ஆத்மநாதன்.

---

உ

சிவமயம்.

## ஒட்டக்கூத்தர் ஈட்டியெழுபது பாடிய வரலாறு.

"ஈட்டியெழுப"தென்பது "கவிச்சக்கரவர்த்தி" யென்று உலகம் புகழக்கீர்த்திவகித்திலங்கிய ஒட்டக்கூத்தர், தம்மரபினராகிய *"செங்குந்தர்"களின் வேண்டுகோளின்படி தலைப்பிள்ளைகள் ஆயிரத்தெண்மர் சிரங்களை ஆசனமாகப்பெற்று, அதன்மீ தெழுந்தருளித் தங்குலத்திற்குரிய ஆயுதமாகிய † ஈட்டியைச்சுட்டிப் பாடியதோர் பிரபந்தமாம். இங்ஙனம் தெய்வீகம் விளங்கப்பாடும் பேரறிவாளராகிய இப்பெருந்தகையாரது மெய்வைத்தவரலாறு இக்காலத்துப் பல்வேறுவகையான் வழங்கப்படுகின்றது. அவற்றினதுண்மை கண்டறிவது பிரயாசையாகவே முடிகின்றது. செங்குந்த மரபினர் பெருமையாதிய விசேடங்கள் அன்னார்க்குரிய சிறந்த நூல்களாம் "கந்தபுராணம்" "செங்குந்தர்புராணம்" "வீரநாராயணர் விஜயம்"முத

---

* செங்குந்தர் - பகைவரது உதிரத்தாற் சிவந்த ஈட்டியையுடையவர்.

† ஈட்டியென்னும் ஆயுதத்தை, செங்குந்தர்கள் பார்வதியாரிடத்துப் பெற்றாரென்பதை,

"சலம்பிரியாத சூட்டெச் சாவற் கேதன மெஞ்ஞான்றும்
வலம்பிரியாத செவ்வேட் குறுதுணையாக மன்னுட்
குலம்பெறவந்தா ரென்றங் கொடியுமை தந்தவீட்டி
நலம்பெறு மிந்தக் குந்தர் பரிசுபோ ஞட்டிலுண்டோ." (16)

ஈட்டியெழுபது.

எனவருவதாலுணர்க.

வியவற்றில் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன. அதனை ஆண்டுக்கண்டுணர்க. இனி ஈட்டியெழுபது பாடியவரலாறும், அதனைப்பாடினார் மேவருஞ்சிறப்பும், பாடப்பட்டவிடமும், காலமும், அதனைக்கேட்டிருந்தசோழ னின்னானென்பது மாதிய விஷயங்கள் முறையே விளக்குவாம்.

கி. பி. 10-ம் நூற்றாண்டினில், சோழதேசத்தைப் பல்லாற்றானுஞ் சிறப்பெய்த ஆட்சிபுரிந்த சோழமன்னர்பலருள், கி. பி. 1118 முதல், 1200 ஆண்டுவரை அரசுசெலுத்திய விக்கிரமன்தொடங்கி, இராசராசன் இறுதியாகக்கூறும் மூவரசர் காலத்திலேதான் ஒட்டக்கூத்தர் ஒப்புயர்வற்ற திப்பியப்புலவரென யாவரும்போற்றிப் பணிந்தேத்தத் திகழ்ந்திருந்தனர். இவர் இங்ஙனம் சிறத்தற்குக் காரணம் பலவுண்டெனினும், புலமையாற்றலே முதன்மையெனக் கொள்ள வேண்டும். இவ்வாறு கொள்வதற்குத் தம்மை அபிமானித்துக் காத்த சோழவள்ளல்களைப் பலமுறை பாமாலைகள்சூட்டி மகிழ்வித்ததேயாம். இவை ஈட்டியெழுபதென்னும் நூலில்,

> “தென்னனைச் சேரனைச் சிறுமை சொல்லவும்
> மன்னனை வளவனை மகிழ்ந்து பாடவும்”

எனவருதலால், தமிழ் மூவேந்தருட் சோழனையே உயர்த்திப்பாடினாரென்பதுணரப்படும். இங்ஙனம் சோழமன்னர் அபிமானத்திற்குப் பெரிதும் உரியராகி அரசர்க்கொத்த பலவரிசைகளையும், குறைவறச் சிறக்கப்பெற்றுக் * கவிச்சக்கரவர்த்தியென்னும் உயரிய பட்டத்தையும் அடைந்துவிளங்கினர். இவ்வாறு தமிழகம்புகழ விளங்கியபுலவர் சிகாமணிகளுள், இவரினும்மேம்பட்டு அவ்வரசர்பாற் பெருஞ் சிறப்பெய்தினார், வேறொருவருமிலர்; இதனைப்புலவர்புராணமுடையார்,

* இவர்க்கு இப்பெயருளதென்பதை, தக்கயாகப்பரணி யிறுதிக்கண் ‘வாழி கவிச்சக்ரவர்த்தி கூத்தனே.’ ‘கூத்தன் கவிச்சக்ரவர்த்தி வாழியே’ எனவருவனவற்றானறிக. சயங்கொண்டார் கலிங்கத்துப்பரணி பாடியும், செட்டிகண்மேல் ‘இசையாயிரம்’ பாடியும், கவிச்சக்ரவர்த்தி என்று அப்பெயர் சிறப்புப்பெயர் பெற்றாற்போல, இவர் அரும்பைத் தொள்ளாயிரம் பாடியும், தக்கயாகப்பரணி பாடியும், உலா முதலியனபாடியும் விக்கிரமசோழன் முதலியோரால் அச்சிறப்புப்பெயர் புனையப்பெற்றனராவர். (செந்தமிழ்த்தொகுதி ௨. பக்கம் ௬௦௪)

"எத்தனை புலவரோமுன் னிறைவரை வயஞ்செய்தற்று
ரத்தனை பேருளாரு மருந்தமி ழொட்டக்கூத்த
னுெத்தவர் முடிமேல்தந்தா ளூறவைத்த தில்லையில்லை
யித்தனை யதிட்டமன்னோற் கிசைந்தமை யேற்றந்தானே."

என விளக்கியவாறறிக. உபயகுலோத்தமனென விளங்கியிருந்த அபயன் பேரனும், விக்கிரமசோழன் மகனும்ஆகிய, "குமாரகுலோத்துங்கன்". பட்டாபிஷேக காலத்தில் அவனுக்கு க்ஷேமமுண்டாகும்படி கூத்தர்,

* "ஆடுங் கடைமணி நாவசை யாம லகிலமெல்லா
நீடுங் குடையிற் றரித்த பிரான்"

என்று பாடத்தொடங்கி முடிக்குமுன், அச்சோழன் தமக்காசிரியர் முறையிலிருக்குங்கூத்தர் தம்மைத்துதித்தல், மரபல்லவென்றுகருதி எஞ்சிய பகுதியை,

—நித்தநவம்

"பாடுங் கவிப்பெரு மானொட்டக் கூத்தன் பதாம்புயத்தைச்
சூடுங் குலோத்துங்க சோழனென் றேயென்னைச் சொல்லுவரே,''

(தமிழ்நாவலர் சரிதை)

என்றுபாடிச் சிறப்பித்ததை முருகதாசர், தமது புலவர் புராணத்தில் எடுத்தாண்டனர் என உணர்க. இப்புலவர் காலநிர்ணயத்தையும், சிலவிசேட வரலாறுகளையும், செந்தமிழ்த்தொகுதி 2. 3ல் பக்கம் 393,439ல் பத்திராசிரியரவர்கள் "புகழேந்தியொட்டக்கூத்தர்'' என்னும் மகுடவாயில் விளக்கியிருப்பதால், மீண்டும் அதனையே இங்குவிரிப்பது மிகையாகுமென்று நிறுத்தப்பட்டது.

---

* விநோதரசமஞ்சரி, தனிப்பாடற்றிரட்டு முதலியவைகளில்,

—இந்தநீணிலத்திற்

"பாடும் புலவர் புகழொட்டக் கூத்தன் பதாம்புயத்தைச்
சூடும்..........................................சொல்லுவரே.'

எனவரும் பாடலில், தனிச்சீரும் மூன்றாமடியும், வேறாகக் காணப்படுகின்றன. கூத்தர் பாடல்களில், இதுபோன்ற பிறழ்வுகளும், புனைந்துரைகளும் பலவுள. விரிக்கிற்பெருகும்.

இனி இப்புலவர்பிரானுக்கு "ஒட்டக்கூத்தர்" எனப் பெயர்சிறந்ததானது செங்குந்தரது அற்றதலைகளாகிய சிங்காதனத்தமர்ந்து "ஈட்டியெழுப" தென்னும் நூலைப்பாடிப்பின், அற்றதலைகள் ஒட்டப்பாடியதனாலும், விக்கிரமசோழன் திருமுன்னர் இவர் முதன்முதல் எய்தியபோது அவன் இவரது "அரும்பகைத்தொள்ளாயிரத்து ஓர் செய்யுளைத் தனக்கு ஒட்டப் பாடச்சொல்லியதனானும், அங்ஙனம் பலமுறை ஒட்டப்பாடிய சிறப்பான் ஒட்டக்கூத்தர் எனப் பெயர்பெற்றனரென்ப. ஒட்டம் என்பது பந்தயம்வைத்துப் பாடுதலென ஒருபொருளுண்டென்பது யாழ்ப்பாணத்து அகராதியிற் கண்டது.

விக்கிரமசோழ னுலாப்பாடியபோது ஒருகண்ணியை யொட்டிப்பா டென்றபோது கூத்தர் பாடியது.

* கையு மலரடியுங் கண்ணுங் கனிவாயுஞ்
செய்ய கரிய திருமாலே—வைய
மளந்தா யகளங்கா வாலிலைமேற் பள்ளி
வளர்ந்தாய் தளர்ந்தாளென் மான்."

அரும்பகைத் தொள்ளாயிரம் பாடும்போது விக்கிரமசோழன் கேட்டு ஒருகவியை ஒட்டச்சொல்லென்று சொன்னபோது கூத்தர் பாடியது.

† "நடித்தது நச்சர வுச்சியி னுச்சி மதிலிலங்கை
பிடித்தது வென்ற திருபது தோள்பதி னெண்பகலே
முடித்தது பாரதம் வீரப் புலிவைப்ப மூரிச்செண்டா
லடித்தது பொற்கிரி விக்ரம சோழ வகளங்கனே."

எனத் தமிழ்நாவலர் சரிதையிற் காணப்படும் செய்யுட்களான் இவர் ஒட்டப்பாடுதலிற் சிறப்புடையாரென்பது தெளியப்படும். ஒட்டக்கூத்தர் என்று பெயர்சிறந்த காரணமிதுவாக, இதனைச் சிலர் வேறுகக் கூறுதலுமுண்டு.

---

* இதன் முதலடியிரண்டும் விக்கிரமசோழனுலா கஙஅ-வது கண்ணியிலும், அதன் இறுதிவெண்பாவிலும் காணப்படுகிறது. 'தளர்ந்தாளிம்மான்' எனவும் பாடம்.

† இது முத்தொள்ளாயிரம், வச்சத்தொள்ளாயிரம், சயங்கொண்டார் செட்டிகண்மேற் பாடிய இசையாயிரம் என்பன போல்வதொன்றும். இலக்கண விளக்கப்பாட்டியல் அஅ-ஞ் சூத்திர உரைக்கண் 'அரும்பைத் தொள்ளாயிரம்' என ஒருநூல் காட்டப்பட்டது. இதுவேபோலும். (செந்தமிழ்த் தொகுதி உ. பக்கம் நகூஅ.)

இனிக், கலைமகள் அருள்பெற்ற வரகவியாகிய ஒட்டக்கூத்தர், ஒரு சமயத்துத் "திருபுவனம்" என்னும் ஊரின்கணுள்ள தமதுபெருநண்பினரான "சோமன்" என்பவனைக் காணவேண்டிச் சென்றிருந்தாரென அறியப்படுகிறது. அங்ஙனம் சோமன்மனைக்குச் சென்ற சமயம் இது போழ்தென அறியக் கூடவில்லை. சோமன் மனைக்கண், இவரிருந்த போது, ஆலூர்ச் செங்குந்தர்கள், கூத்தர்பால் பாடல் பெற வேண்டுமென்னும் ஆவலுடன் புலவர் பெருமானைத் தக்கவாறு சென்று கண்டு கொண்டனர். கூத்தரும் அவர்கள் வரவிற்கு ஆனந்தங் கொண்டு அவர்களுடன் அளவளாவியிருந்தனர். இங்ஙனமிருக்குமிடையில், செங்குந்தர்கள் கூத்தரை நோக்கிப் புலவரேறே! வேளாளர்க்கு *ஏரெழுபதும், வன்னியர்க்குச் †சிலையெழுபதும், செட்டிகட்கு ‡ இசையாயிரமும், அவரவர் மரபின் இயலை விளக்குவதாயிருக்கின்றது. அதுபோல் நம்மரபினர்க்கும் நீவிர் ஒரு நூல்செய்து நமது குலவளத்தைச் சிறப்பிக்கவேண்டும் என்று வேண்ட புலவர் அவர்களை நோக்கி ஐயன்மீர்! இயல்பிற்றானே பல சிறப்போடுங்கூடி விளங்கும் நமது குலவண்மையைப்பற்றிப் பாடுவிக்கவேண்டில், நம்மினுமுயர்ந்த வருணத்த னொருவனால் பாடுவித்தலழகு. நம்மிற்றாழ்ந்தோனாற் பாடுவித்துக்கொள்ளுதலழகன்று. ஆகவே நம்மை நாமே சிறக்கப்பாடிக்கொள்வது அதனினுங் குறைவன்றோ? இதனை நீங்கள் உய்த்துணர்மின்கள், எனக் கூறி அவர்களிடத்து விடைகொண்டனராகக், கருதிய கருமம் கைகூடாதொழிந்தமைக்குப் பெரிதும் வருந்திய இவர்கள் முடிவில் பெருஞ்சினம் கொண்டவராகி "இப்புலவன் நமது மரபினனாயிருந்தும், நமது மரபின் பிரபாவத்தை விளக்க வல்ல ஓர் பிரபந்தம் பாடித்தரும்படி கேட்டுக்கொண்டால், நம்மின் மேலான வருணத்தா னொருவனைக்கொண்டு பாடல்பெறும்படி கூறிவிட்டானல்லவா? இவ்வுலகிற் புன் கவிகளா யுள்ளோர் வெளிப்படின், அவர்களை எனதுவீரவாளால் பொன்றுவிப்பேனென்றோர் வெற்றிக் கொடித்தம்பம் நாட்டித் தான் கற்றுள்ள கல்வியின் மாத்திரம் அபிமானம் வைத்துள்ள இவன், தான் பிறந்துள்ள குலத்திற் சற்றும் அபிமானமில்லாதவனா யிருக்கின்றான். இத்தகையனை

---

* இது கம்பர் பாடியது. † இது கம்பர் பாடியது.
‡ இது சயங்கொண்டார் பாடியது.

நாம் இவ்வுலகிலிராதபடி கொன்றுவிடுவதே சரியென்று,, தங்களுக்குள் நிச்சயித்துக் கொண்டவர்களாய் உடனே வளை, தடி, வாள், முதலிய ஆயுதங்களேந்தி அவரிருக்குமிடத்தை நாடிவந்தார்கள். அதுகண்ட கூத்தர் திடுக்குற்று பயத்தால் சோமன் பாலோடி அடைக்கலம் புகுந்தா ரென்ப.

இவை "தமிழ் நாவலர் சரிதையில்" பழிகாரர் தொடர்ந்தபோது கூத்தர் சோமன்வாசலிலே ஓடிச்சொன்ன கவிஎன்னுந்தலைப்பின் கீழ்,

"அடையென்பார் தள்ளென்பா ரன்பொன் றிலாமற்
புடையென்பார் தங்கடைக்கே போகேல்—கொடையென்றுன்
முந்துஞ்சோ மாபுவனை முன்னவனே நின்கடைக்கீழ்
வந்துஞ்சோ மாதலான் மற்று.,,

எனக் காணப்படுகிறது.

சோமன் தன் பால் அடைக்கலம்புகுந்த புலவரைக் காத்தல் வேண்டி, தன்னொருமகனையும் பேழையுள் வைத்துத் தன்மனையைச் சூழ்ந்த அப்பழிகாரர் பால் உய்த்து, "இதன் கணுள்ள உங்கள் புலவனுகிய கூத்தனை நீங்கள் விரும்பியவாறு செய்மின்" எனக் கூறிவிடுப்ப, அப்பழிகாரர்கள் அப்பேழையைத் தனித்தவிடத்துக் கொண்டுபோய்த் திறந்து பார்த்தவளவில், தாம் கருதிய புலவரைக் காணுமற் சோமன்மகனுதல்கண்டு, சோமனது வண்மையை வியந்து அம்மகனைக் கொலைசெய்யாது விடுத்துச் சோமன் பால் எய்தி நிகழ்ந்த துரைக்கச் சோமன் பழிகாரரை நோக்கி நீங்கள் புலவன் விரும்பியபடி செய்தால் பாடாதிரார் என்றுரைத்தனர். இதனிடையில் கூத்தர், நிகழ்ந்த விஷயமுணர்ந்தவராய்ச் சோமன் பெருமித குணத்திற்கும், தம் பால் வைத்துள்ள பேரபிமானத்திற்கும், பெரிதும் வியந்து அவனைப்புழ்ந்து பாடினுரென்ப.

இவை தமிழ்ச் செய்யுட் சிந்தாமணியில்,

"தன்னுடைய தேவியர்க்குத் தார்வளவன் றுனுரைப்ப
துன்னுடைய சீர்த்தி யுயர்நலமே—துன்னுபுகழ்ச்
சோமா திரிபுவனத் தோன்றலே நின்புகழை
யாமா ருரைக்க வினி."

என வருதலானறிக. (தொடரும்.)

சி. கு. நாராயணசாமிமுதலியார்.
கோவை.

# கதாசரித் சாகரம்.

## ரு-வது சதுர்த்தாரிகாலம்பகம் க-வது தரங்கம்.

[ஸ்ரீமத்-வீராசாமி ஐயங்காரவர்கள் மொழிபெயர்த்தது.]

(முற்றொடர்ச்சி.)

---

சிவனும் தானம்வாங்கினவுடன் புரோகிதனைப்பார்த்து இதன் விஷயம் யாதொன்று மெனக்குத்தெரியாது, நீர்தானிதனையறிந் திருக்கின்றீர்; ஆதலால நீரேவைத்துக்கொள்ளுமென்று அவன்கை யிற் கொடுக்க வுடனேபுரோகிதன்யான்முன்பே யொப்புக்கொண்டிருக்கின்றேனே; உமக்கேன்கவலை இவ்விஷயத்திலென்றுகூறி அதனைப் பெற்றுக்கொண்டான். உடனே சிவன் மாதவனைநோக்கி மாதவா! உன்னிஷ்டம் நிறைவேறுமென்று ஆசீர்வதித்துவிட்டுத் தன் புது மனைவியிருக்கும் வீட்டிற்கேகினன்.

புரோகிதனும் போலிமாணிக்கக்கற்கள் நிறைந்த பெட்டியைத் தனது கோசக்கிரகத்திற் கொண்டுபோய் வைத்தான். மறுதினம் மாதவன் நோயென்னும் வியாஜத்தை மெல்ல விலக்கிவிட்டுத் தான் செய்த மகாதானத்தின் ப்ரபாவத்தினால் தனது ரோகம் முற்றிலும் நீங்கிற்றென்று பேசிக்கொண்டிருக்கும்போது தன்பக்கத்தில் புரோகிதன்வர அவனைப்பார்த்துத் தர்மகாரியத்திற்குச் சகாயமாயிருந்த வும்மாலன்றோ யானிந்த ஆபத்தினின்றும் விடுபட்டேன். உமக்கு யாது கைம்மாறு செய்யப்போகிறே னென்று புகழ்ந்துகொண்டே சிவனிடம் சென்று நமஸ்கரித்து நின்று வணக்கத்துடன் இந்த மகானுடைய பிரபாவத்தினாற்றா னிந்தச் சரீரமிருக்கின்றதென்று சொல்லி யாவருமறியும்படி கூறி வெளிப்படையாகவே சிவனோடு சிநேகித்திருந்தான். இவ்வாறு சிலநாட்கழிந்தபின் சிவன் புரோகிதனைக் குறித்து நானிவ்வித மெத்தனை நாளுமது கிரகத்திலேயே புஜித்துக் கொண்டு காலங்கழிப்பது. ஆதலாலாபரணங்களனைத்தையும் நீரே வைத்துக்கொண்டு அவற்றின்கிரயத்தொகையையெனக்குக்கொடுக்க

*

வேண்டும். ஆனலவை விலைமதிப்பிற்கடங்காதனவென்றால் உம்மிடத்திலிருக்கின்றபொருள்களை அவற்றின் கிரயத்தொகையாகக்கொடுத்தாலும் பெற்றுக்கொள்ளுகிறேன் என்றனன். அதைக்கேட்டுப் புரோகிதன் அவ்வாபரணங்கள் விலைமதிப்பிற் கடங்காதனவென்று கருதி இதுதான் சமயமென்று தன் கையிலுள்ள பொருள்களனைத்தையும்வற்றிற்கு விலையாகக்கொடுத்துவிட்டு இப்படிச்செய்துகொண்டதற்காக முறியொன்று வேண்டுமென்று சிவனிடத்தினின்றுமவன் ஸ்வஹஸ்தமான பத்திரமொன்று வாங்கிக்கொண்டதுடன் தானும் தன்கைப்பட ஒரு முறியெழுதிச் சிவன்கையிற்கொடுத்தபின்பு இருவரும் தனித்தனி வேறு வேறு கிரகத்தில் வசித்துவந்தனர். பின்பு சிவனும்மாதவனுஞ் சேர்ந்துகொண்டு புரோகிதன்பொருள்களைத்தங் களிஷ்டப்படி அனுபவித்துக்கொண் டவ்வூரிலேயிருந்தனர். இவ்வாறு சிலகாலங்கழிந்தபின் ஒருநாள் புரோகிதனுக்குப்பணம்வேண்டியிருந்தமையா லவ்வணிகளிலொன்றை விக்கிரயஞ் செய்வதற்காகக் கடைவீதியிற்கொண்டுசென்று இரத்தினங்களின் உண்மைதெரிந்த வணிகர்களிடம் காண்பிக்க அவர்களதனையுற்றுநோக்கியதும் ஓகோ! இஃதெவன்செய்த கிருத்திரிமம்; வேலைப்பாடு நன்றாயிருக்கின்றது. சாதாரணமான பளிங்குக் கற்கள் பற்பலவிதமான சாயங்களேற்றப் பட்டுப் பித்தளையாற் கட்டப்பட்டிருக்கின்றன. மாணிக்கமுமன்று சுவர்ணமுமன்று என்றனர்.

அதைக்கேட்டதும் புரோகிதன் வியாகூலமுற்றவனாக அப்போதேசென்று தன் வீட்டிலிருந்த வாபரணங்களனைத்தையும் கொணர்ந்து அவ்வணிகர்களிடம் காண்பித்தனன். அவர்களவற்றையும்பார்த்து முந்திப்பார்த்த நகைபோல் இவையும் கிருத்திரிமமேயன்றி வேறில்லை சந்தேகப்படவேண்டாமென்று கூறலும், உடனே வச்சிராயுதத்தினு லடிக்கப்பட்டவன்போலாகி யாதொன்றுந்தோன்றாது அறிவிலியாகிய புரோகிதன் அப்போதே சிவனிடம் சென்று உமது நகைகளை வாங்கிக்கொண்டு எனது பணத்தைக்கொடுத்துவிடுமையா வென்று சொல்லலும், அதற்குச்சிவன் என்னிடத்திற் பணமேது எவ்வளவு காலமாயிற்று எல்லாம் குடும்பத்திற் செலவாகிவிட்டதே யென்றான்.

புரோகிதன் மறுபடியும் பணத்தைக்கேட்கச் சிவன் பணங் கொடுக்கமுடியாதென்று சொல்ல, அவ்விருவரும் விவாதத்துடன் மாதவன் முதலானோர் பக்கத்திலிருக்கின்ற சமயத்தி லரசனிடத் திற்செல்ல அரசன் இவர்குறிப்பையறிந்து விசேஷம் யாதென்று வினவுதலும் புரோகிதன் அரசனைநோக்கி மகாராஜா! இவர்நன்ருய்ச் சாயமேற்றிய மண் கல்களின் துண்டுகளைப் பித்தளையாற்சேர்த்து விசித்திரமாய்க் கட்டப்பட்ட போலிநகைகளடங்கிய பெரியவொரு பெட்டியை என்னிடங்கொடுத்துவிட்டு யாதொன்றுமறியாதவெனது பொருள்கள் யாவுங்கவர்ந்து பட்சித்தனரென்ருன்.

அதற்குச்சிவன் அரசே! யான் பால்யமுதல் தபசியாகவிருந் தேன். இவரென்னிடம்வந்து மாதவரென்ற ஒரு இராஜகுமாரன் அசௌக்கியத்துடனிருக்கிருரென்றும், அவர் விலைமதிப்பற்ற இரத் தினுபரணங்களடங்கிய தன் பொருள்களைத் தானஞ்செய்யக் கருது கிருரென்றும், அதனை நீரே வாங்கிக்கொள்ளவேண்டுமென்றும், பிரா ர்த்தித்துச் சும்மாவிருந்த என்னைத் தானம் வாங்கிக்கொள்ளும்படி செய்தனர். ஆனுல் நான் அப்பொழுதே இவரிடத்தில் இரத்தினம் முதலியவற்றின் தன்மை யொன்றுமறிகின்றிலேனென்றும் அவற்றி னுண்மையை நீரே யறிந்துகொள்ளவேண்டுமென்றும் உமதுசொற் களை நம்பித்தானிதில் பிரவர்த்திக்கிறே னென்றும் சொல்ல, இவர் அதற்கு நானிருக்கின்றேன் நீரொன்றும் யோசிக்கவேண்டாமென்று கூறினர். ஆதலால் யான் தானம்வாங்கினவுடன் அப்பொருள்கள் அனைத்தையுமிவர் கையிலேயே கொடுத்துவிட்டேன். பின்பு இவ ரிஷ்டத்தின்படி அவற்றிற்கென்று கொடுத்த கிரயத்தொகையைப் பெற்றுக்கொண்டேனேயன்றி வேறில்லை. இவ்விஷயத்தில் நாங்க ளொருவர்க்கொருவர் ஸ்வஹஸ்தலிகிதமாய்ச் செய்துகொண்ட பத் திரங்களுமிருக்கின்றன. இப்பொழுது இதற்குமேற்பட்டதுணையை விஷ்ணுதானறிவார் என்று சிவன் சொல்லிமுடித்தவுடன் பக்கத்தி லிருந்த மாதவன் புரோகிதனைப்பார்த்து ஐயா, இவ்விதமுத்தரவு செய்யலாகாது தாங்களோ யாவராலும் மதிக்கத்தக்கவர்கள்; என் னிடத்தி லென்ன குற்றமிருக்கின்றது; நான் தங்களிடத்திலாவது சிவனவர்களிடத்திலாவது யாதொன்றும் பெற்றுக்கொள்ளவில்லை.

எனது பிதிரார்ஜிதமான பொருள்களை நெடுநாளாக மற்றொரிடத்தி லும் வைத்திருந்தேன்; அவற்றையே அப்போது கொண்டுவரச் செய்து இதோ நிற்கின்ற பிராம்மணோத்தமருக்குத் தானஞ்செய் தேன்; ஆனலப்பொருள்கள் உண்மையில் சுவர்ணங்களாகவும் மா ணிக்கங்களாகவும் இருந்தனவே அல்லாமல் பித்தளைகளாகவும் உபயோகமற்ற சாயக்கற்களாகவுமிருந்தால் அவற்றைத் தானஞ் செய்ததனாலுண்டாகும் பலனே எனக்குக்கிடைக்கும். ஆனால்கடக்க முடியாத வியாதியினின்றும் விடுபட்டு யாவருமறியும்படி யான் இத் தன்மையிலிருப்பதினால் கபடமற்ற மனதுடன் தானஞ்செய்தே னென்பதிலெனக்கு முற்றிலும் நம்பிக்கைதான் என்றிவ்விதம் மாத வன் தன் முகத்திற் சிறிதும் வேறுபாடுதோன்றாது சொல்லலும், மந்திரியுடன் அரசன் சிரித்துக்கொண்டவண்ணமே மாதவனைப் பற் றிச் சந்தோஷித்தனன்.

அச்சமயத்தில் சபையிலுள்ளோர்களும் வெளியிற்றோன்றா துள்ளுக்குட் சிரித்துக்கொண்டு மாதவனுடைய அநியாயத்தினாலா வது சிவனுடைய அநியாயத்தினாலாவது ஒன்றும் நடந்ததாகத்தோன் றவில்லையென்று சொல்லப் புரோகிதன் தன் பொருள்முழுதும் பறி கொடுத்துவிட்டு வெட்கத்துடன்கூடியவனாக வீட்டிற்குச் சென் றான். ஆனால் பேராசையினால் மதிகெட்டால் எந்த விபத்திற்குத் தான் ஹேதுவாகாது.

பின்பு சிவன் மாதவனென்ற விரண்டுசூதாடிகளும் அவ்வூரிலே யே அரசன் சந்தோஷிக்கும்படி அவனது அனுக்கிரகத்தினால் சுக முற்று நெடுநாளிருந்தனர். இவ்விதமுலகத்தில் ஜாலத்தினால் ஜீவ னஞ்செய்கின்ற சூதர்கள் ஓடுகின்றநீரில் செம்படவர் வலைகளைவீசி மீன்களைக் கவர்தல்போலத் தமது நாவாகிய வலைகளை உடன்படிக் கை யென்னும் பற்பலவிதமான கயிறுகளால் விஸ்தரித்து ஜனங்களை வஞ்சிக்கின்றனர். ஆதலால், ஏ பிதா! இப்பார்ப்பானும் கனகபுரி யைப் பார்த்ததுபோல் பொய்யுரைகூறி யும்மை வஞ்சித்து என்னை அடையக்கருதுகின்றனன். ஆகையாலிப்பொழுது நீர் என் விவாக விஷயத்தில் விரைதல் செய்யவேண்டாம். யான் கன்னிகையாகவே யிருக்கின்றேன்; இதில்தா னென்ன நடக்கப்போகின்ற தென்பதைப்

பார்ப்போமென்று கனகரேகையென்பவள் தன் பிதாவிடம் சொல்ல லும் அப்பொழுதந்தப் பரோபகாரியென்ற வரசன் தன் புத்திரியைப் பார்த்து ஹே பெண்ணே, யௌவன திசையில் விவாஹமாகாது கன்னிகைத் தன்மையோடு நெடுநாளிருப்பது ஒழுங்கன்று; ஏனெனில், உலகத்தில் பிறர்நன்மைகளிற் பொறுமையுடைய துர்ஜனர்கள் பொய்யான தோஷத்தையாரோபித்துச் சொல்லுவார்கள்; அதிலுமுயர்ந்தோர்களிடத்தில் விசேஷமா யபவாதத்தையுண்டுபண்ணுவார்கள். இதற்குதாரணமாய் ஒரு கதை சொல்கின்றேன் கேள்.

கங்காநதிக்குச் சமீபத்தில் குசுமபுரமென்று பிரசித்திபெற்றதொரு நகரமிருக்கின்றது. அதில் ஹரஸ்வாமியென்று பெயருடைய தீர்த்தவாசியான பிராம்மண தபஸ்வி யொருவரிருந்தனர். அவரக் கங்கைக்கரையில் சிறுகுடிசையமைத்து அதில் வசித்துக்கொண்டு பிக்ஷையெடுத்து ஜீவனஞ்செய்து தவம்புரிந்து வந்தனர். அவர் செய்கின்ற தவத்தின்மேன்மையா லுலகத்தோரால் நன்குமதித்தற் குரியராயினர். இப்படியிருக்கும் சமயத்திலொருநாள் அவர் தூரத்தில் பிக்ஷையெடுத்துக்கொண்டுசெல்கின்றபோது அவரைப்பார்த்து அவரது நற்குணங்களில் பொறுமையுடைய துஷ்டனொருவன் பல ஜனங்கள் நடுவில் நீங்களறிகின்றீர்களா? இவன் எப்படிப்பட்ட கபடக்காரனான தபஸ்வியாய்விட்டானென்பதை, இவனாலேயே யிந்நகரத்திலுள்ள குழந்தைகள் பலவு மிராக்காலங்களி லொருவருமறியாதபடி கொன்றுதின்னப்படுகின்றனவென்று சொன்னான். அதைக் கேள்வியுற்றது மவனைப்போன்ற மற்றொருவனு மிஃதுண்மைதான் ஜனங்கள்சொல்ல யானும் கேட்டிருக்கின்றேன் என்றனன். அவ்விருவர்கட்கிணங்க மற்றொருவனும் இவர்கள் சொல்கின்றபடி அது இவ்வண்ணமே நடந்துவருகின்றதென்று முடிவாய்ப்பேசினன்.

ஆனால் அதமர்களாலியற்றப்படும் சம்வாதமென்னுஞ் சங்கிலியானது பூஜ்யர்களான மேலானோர்களைப்பற்றிய அபவாதமென்னும் யானையை வேறிடத்திற் செல்லாது பிணிக்கின்றது. அவர்கள்கூறியபடியே அவ்வூர் முழுதும் கர்ணபரம்பரையாக அந்த அபவாதம் மிகுதியாய்ப் பரவிற்று. அப்பொழுது அந்நகரத்திலுள்ள யாவரும் ஹரஸ்வாமியென்பவர் குழந்தைகளனைத்தையு மழைத்துச் சென்று

கொன்று தின்றுவிடுகிருரென்று குழந்தைகளைத் தங்கள் தங்கள் வீட்டைவிட்டு வெளியேருமலிருக்கும்படி செய்தனர். பின்பவ்வூரிலுள்ள பிராம்மணர்கள் தங்கள் சந்ததிக்கே ஹாநி வந்துவிடுமென்று பயந்தவர்களாய் ஒன்றுசேர்ந்து ஹரஸ்வாமியை இந்நகரத்தினின்றும் வெளியேற்றவேண்டுமென்று இரகசியமாய்ப்பேசி முடிவுசெய்து கொண்டு நாம் நேரிற்சென்று அவரிடமிதனைச்சொன்னுல் கோபத்தினுல் நம்மையும் விழுங்கிவிடுவாரென்று பயந்து சிலதூதரையனுப்பினர். இப்படிப்பட்ட தைரியசாலிகளான பிராம்மணர்களின் வல்லமையையென்சொல்வது. அந்தத்தூதர்கள் சென்று தூரத்திலிருந்தே ஹரஸ்வாமியை நோக்கி, உம்மை யிவ்வூரினின்று வேளியேறிப் போகவேண்டுமென்று பிராம்மணர்க ளெல்லோருஞ் சொல்லுகின்றனர்; ஆதலால் நீரிவ்விடத்தி லிருக்கக்கூடாதென்றுசொல்லவும் இதைக்கேட்ட ஹரஸ்வாமியென்பவ ராச்சரியமுற்றவராய் எதற்காக நான் போகவேண்டுமென்று கேட்க, அவர்களதற்கு நீரிவ்வூரிலுள்ள குழந்தைகளைக்கொன்று தின்றுவருவதுதான் காரணமென்றனர்.

அதைச் செவியுற்ற ஹரஸ்வாமி யிதென்ன பாவமென்று மனவருத்தத்துடன்கூடியவராய் அந்தணர்கட் கறிவிக்கவேண்டுமென்று அவர்கள் சமீபஞ் செல்லுங்கா லிவரைக்கண்டு ஜனங்களெல்லோரும் பயந்தோடத்தலைப்பட்டனர். பிராம்மணர்களு மிவரைக்கண்டவுடன் பயந்து மாடங்களின்மீ தேறிக்கொண்டனர். ஆனுல் கர்ணபரம்பரையாய்ச் சொல்லிக்கொள்ளும் பேச்சைக்கேட்டு மயங்கின மனிதர்கள் பெரும்பாலும் விசாரித்துப் பாரார்கள். பின்பு ஹரஸ்வாமியென்பவர் கீழே நின்றவண்ணமே மாடத்தின்மேலே நின்றுகொண்டிருக்கின்ற பிராம்மணர்களைப் பார்த்து ஒவ்வொருவர் பெயரையும் சொல்லியழைத்து ஹே பிராம்மணர்களே! இதென்ன அறியாமை வந்ததுங்களுக்கிப்போது, நான் யாருடைய யெத்தனை குழந்தைகளை யெவ்விடத்தில் பக்ஷித்துவிட்டே னென்பதைப்பற்றி யொருவரோடொருவர் ஆலோசித்துப் பார்க்கவேண்டாமா வென்றனர்.

(தொடரும்.)

# நல்லொழுக்கம்.

## ஆறும் அதிகாரம்

[ஸ்ரீமத்-இலக்குமணப்போற்றிகள் மொழிபெயர்த்தது.]

(முற்றொடர்ச்சி.)

லக்னென்ற பட்டணத்திற்கு யுத்தஞ் செய்துகொண்டுபோகையில் ஹேவலக் (Havelock) என்பவருக்கு உதவிசெய்யும்படி பலத்த சேனையோடு அவர் அனுப்பப்பட்டபொழுது அவர் உதாரகுணத்தோடு தன்னயம் பாராட்டாமலிருந்ததை நாம் அதிகமாய்க் கவனிக்கத்தக்கதாயுமிருந்தது. அவர்மேலான உத்தியோகஸ்தராகச்சேனாதிபத்தியத்தைத்தாமேவஹிக்க உரிமைப்பட்டிருந்தார். ஆனால் ஹேவலக் (Havelock)என்பவர் முன்னமேசெய்திருந்ததை அங்கீகரித்து அருமையான பிறர்நயம்பாராட்டுங் குணத்தோடு.தனக்குப்பிந்திய உத்தியோகஸ்தருக்குள் வாலன்டியர் (volunteer) ஆக ஊழியஞ்செய்யச் சம்மதித்து அந்த யுத்தத்தை முடிக்கும்படியான மகிமையைத் தன்னிலும்குறைந்த அந்தஸ்துள்ள அவருக்குக் கொடுத்துவிட்டனர். "மேஜர்-ஜெனரல் ஔட்ரேம் (Major General Outram) என்பதாகத் தான் சம்பாதித்துக்கொண்ட கீர்த்தியோடு மற்றொருவர்களுடன் கூட்டாத மகிமையும்கண்யதையும் பங்கிட்டுக் கொள்ளக்கூடியவர். ஆனால், அதினால் அப்பேர்ப்பட்ட பரோபகார உதாரத்துடன் செய்த தன்னயம்பாராட்டாமையின் மதிப்புக்குறைவில்லை," என்று லார்ட் கிளைட் (Lord Clyde) என்பவர் சொன்னார்.

ஒருமனிதன் தன்னுடைய வாழ்நாளில் கண்யமாயும் சமாதானமாயும் இருக்கவிரும்பினால், அவன் பெரிய காரியங்களிற்போல அற்பக் காரியங்களிலும் தன்னயமறுப்பைப் பழகுவதற்கு அவசியம் கற்றுக்கொள்ளவேண்டும். மனிதர்கள் சகித்துக்கொள்ளவும் பொறுத்துக்கொள்ளவும் வேண்டுங்குணமானது பகுத்தறிவின் வசப்பட்டிருக்க வேண்டியது. துர்க்குணம், எரிச்சல், தூஷணையாகிய அற்பப்

பிசாசுகளைத் தீர்மானமாகத் தூரத்தில் வைக்கவேண்டும். அவைகள் ஒருமுறை மனதிற்பிரவேசிக்க வழிகண்டால் அவைகள் திரும்ப நுழையவும் அவ்விடத்தில் தங்களுக்குத் தாங்களே நிலைப்பான முயற்சியை ஸ்தாபித்துக்கொள்ளவும் மிகவும் தகுதியுள்ளவைகளா யிருக்கின்றன.

ஒருவன் தன்னுடைய வார்த்தைகளையும் செயல்களையும் அடக்குவதற்குப் பழகுதலானது, ஒருவனுடைய சொந்த இன்பத்திற்கு அவசியமாயிருக்கின்றது. ஏனென்றால், அடியைப்பார்க்கிலும், மிகவும் கடினமாய்ச் சாடக்கூடிய வார்த்தைகள் உண்டு. மனிதர்கள் ஈட்டிகளை உபயோகப்படுத்தாமலே ஈட்டிகளைப்போற் பாயும்படி பேசலாம்.

விஷக்கொட்டுப்போன்ற மறுமொழி உதடுவரையெழுந்து வந்து வெளியிட்டால் எதிரியைக் கலங்கும்படி செய்யத்தக்கதைச் சொல்லாமல் நிறுத்துவதற்குச் சிலகாலம் எவ்வளவு கஷ்டமாயிருக்கிறது. "வார்த்தைகளின் கெடுதியான ஆற்றலினின்றும், கடவுள் நம்மைக்காப்பாராகுக! கூர்மையுள்ள கத்திகளைவிட அதிகமாய் இருதயத்தைப் பிளக்கத்தக்க வார்த்தைகளிருக்கின்றன. வாழ்நாள் முழுதும் மனதைக் கொட்டிக்கொண்டேயிருக்கத்தக்க முனையுள்ள வார்த்தைகள் உளவாகின்றன." என்று மிஸ் பிரீமர்(Miss Bremer) தனக்குள்ளே சொல்லுகின்றனள்.

இவ்வாறு ஒழுக்கமானது ஏனையவற்றில் விளங்குவது போன்று வார்த்தையைக் கட்டுப்படுத்துவதிலும் விளங்குகின்றது. விவேகமும் சகிப்புமுள்ள மனிதன், மற்றவர்களுக்கு வருத்தம் உண்டாமாறு குயுக்தியும் கொடுமையுமான காரியத்தைச் சொல்லும் அவாவை அடக்கிக்கொள்வான். ஆனால் மூடனானவன் தான் நினைக்கிறதைப் புத்தியீனமாய்க் குழறித்தன் பரிகாசத்தைவிடத் தன் இஷ்டனை இழந்துவிடுவான். "ஓர் விவேகியினுடைய வாயானது அவனுடைய இருதயத்தில் இருக்கின்றது. ஓர் மூடனுடைய இருதயமானது அவனுடைய வாயில் இருக்கின்றது" என்று சாலமன் (Soloman) என்பவர் கூறினர்.

ஆகிலும் சிலமனிதர்கள் மூடரல்லர். சகிப்பும், தம்மையடக்கும் பொறுமையும் இன்மையால் தங்கள் வார்த்தைகளிலும் செயல்களிலும் கவனமின்றியிருக்கின்றனர். விரைவுற்ற ஆலோசனையும் கோபமூட்டுமொழிகளுடைய இலகுவான யூகமுடையோன் தற்கால உற்சாகத்தினாற் கொண்டாடப்பட்டுத் திடீரென்று நிந்தாவாக்கியத்தைச் சொல்லிவிடுகின்றனன், அது அவன் சொந்தத்திற்கே அளவற்ற நஷ்டத்தை யளிக்கின்றது. தங்களுடைய விரோதிகளுக்கு வருத்தமுண்டாகுமாறு சாதுர்யமும் பகைமையுமுள்ள காரியங்களைச் சொல்லும் இச்சையைத் தடுப்பதற்குச் சக்தியின்மையால் தவறுதல் கொண்ட இராஜதந்திர மந்திரிகளும் இருந்திருக்கின்றனர். "ஒரு வாக்கியத்தின் போக்கானது அநேக இஷ்டர்களுடையவும் எனக்குத் தெரிந்தமட்டில் அநேக இராஜ்யங்களுடையவும் முடிவைக் கண்டுவிட்டது" என்று பெண்தாம் (Bentham) என்பவர் சொல்லுகின்றனர். அப்படியே ஒரு சாமர்த்தியவாளுற் கடுமையான காரியத்தை எழுதும்படி ஒருவன் தூண்டப்பட்டபொழுது, அதை அடக்குவது கஷ்டமானபோதிலும் அதனை மைக்கூட்டில் தானே விட்டுவிடுதல் எப்பொழுதும் மிகவும் நன்மையானதாயிருக்கின்றது. "ஒரு வாத்தினுடைய இறகானது ஒருசிங்கத்தினுடைய நகத்தைவிட அதிகமான கெடுதலைப்பெரும்பாலும் செய்கின்றது." என்று ஸ்பேனிஷ் (Spanish) பழமொழியிருக்கின்றது. "தன்மனதைத்தனக்குள்ளே எவ்விதமும் அடக்கக்கூடாதவன் எவ்விதபெரியகாரியத்தையும் சாதகஞ் செய்யமுடியாது." என்று ஆலிவர் கிராம்வெல் (Oliver-Cromwell)ஐப்பற்றிப் பேசுகையில் கார்லைல் (Corlyle) என்பவர் சொல்லுகிறார். கர்வமான அல்லது விவேகமற்ற வார்த்தையானது மௌனமான உவில்லியம் (William the silent) உடைய உதட்டில் நின்றும் வெளிவந்ததை ஒருக்காலும் அறிந்ததில்லை என்று அவருடைய பெரிய சத்துருக்களில் ஒருவனுற் சொல்லப்பட்டது. அவரைப்போலவே உவாஷிங்டன் (Washington) என்பவர் எதிரியின் துர்ப்பல சமயத்தைப் பற்றிக்கொள்ளாமலும் அல்லது தர்க்கவாதத்திற் சொற்பநேரம் நிலைக்கும்படியான வெற்றியைத் தேடிக்கொள்ளாமலும், வார்த்தை உபயோகப்படுத்துவதில் விவேகத்தின் அவதாரமாயிருந்தார். கடைசியில் உலகமானது, மௌனமாயிருக்கவேண்டிய

சமயத்தையும் விதத்தையும் அறிகிற விவேகியைச் சூழ்ந்து ஆதரிக்கின்றது.

மிக்க அநுபவமுள்ள மனிதர்கள் தாங்கள் பேசிவிட்டதற்காகப் பலமுறை துக்கப்பட்டதாகவும், தங்கள் நாவை அடக்கிக்கொண்டதற்காக ஒருமுறையாவது துக்கப்பட்டிருப்பதில்லை யென்றும் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறோம். மௌனமாயிரு அல்லது மௌனத்தைவிட அதிக நன்மையான சிலவற்றைச்சொல்லு என்று பித்தாகிரஸ் (Pythagoras) என்பவர் சொல்லுகிறார்.

உசிதமாகப்பேசு அல்லது விவேகத்துடன் மௌனமாயிரு என்று ஜார்ஜ் ஹெர்பர்ட் (George Herbert) யென்பவர் சொல்லுகிறார். லீஹண்ட் (Leigh Hunt) என்பவர், ஜென்டில்மேன் ஸெண்ட் (Gentleman Saint) என்று அழைத்த ஸெண்ட்பிரான்ஸிஸ்-டி-ஸேல்ஸ் (St. Fancis-de-sales) என்பவர் உண்மையைத் துர்க்குணத்தோடு பேசுவதைவிட மௌனமாயிருப்பது மெத்த நல்லது; நேர்த்தியானபோஜனத்தட்டைக் கெட்டகுழம்பினால் நிறைப்பதாற்கெடுப்பதைக் காட்டிலும் சும்மாயிருப்பது மெத்த நல்லது என்று சொல்லுகிறார். மற்றொரு பிரான்சுக்காரரான லேக்கார்டையர் (Lacordaire) என்பவர் வாக்கு முன்னும் மௌனம் பின்னுமாக அடையாளத்தாற் குறிப்பிடுகின்றனர். வாக்கினுக்குப் பின்னர் மௌனமானது உலகத்தில் மிகவும் பேராற்றலுடையதெனக் கூறுகின்றனர். சமயத்திற் பேசிய ஒருவார்த்தையானது எவ்வளவு சக்தியுள்ளதாயிருக்கலாம். திருவருட்பேற்றினர்வாயில் பொன்போன்ற நா இருக்கிறதென்னும் உவேல்ஸ்தேசத்து முதுமொழி உளது.

டி. லியன் (De-Leon) உடைய மன அடக்கத்தைப்பற்றி ஓர் சிறந்த திருஷ்டாந்தம் உளது. அவர் பதினாறுவது நூற்றாண்டிலிருந்த கீர்த்திபெற்ற ஸ்பேனிஷ் (Spanish) கவிஞர் வேதபுஸ்தகத்தின் ஓர் பாகத்தைத் தன் சொந்தபாஷையில் மொழிபெயர்த்ததற்காக விசாரணைக்குற்றவாளிகளின் அறையில் வெளிச்சமாவது கூட்டுறவாவது இன்றி பல வருஷங்கள் கிடந்தனர்.

(தொடரும்.)

சிவமயம்.

# கல்வி.

பலபேதமான பிறவிகளுள் மனிதப்பிறவி மிகவிசேடமுடைத்து. மனிதப்பிறப்பை யெடுத்தவர்களாற் றேடற்பாலனவாகிய பொருள்கள் கல்விப்பொருள் செல்வப்பொருள் என இரண்டு.

கல்வியாவது கற்றற்குரிய நூல்களைக் கற்றலேயாம். அவை யாவன:—அறநூல், நீதிநூல், யானை, குதிரை, தேர், படைக்கலமென் றிவற்றின் நூல்களும், இவற்றிற்குக் கருவியாகிய நூல்களுமாம். கருவி நூல்களாவன நிகண்டு, இலக்கணம், கணக்கு, தருக்கம் முதலியனவாம். மற்றை நூல்களை யறிதற்குக் காரணமாயிருத்தல்பற்றி, இவைகள் கருவிநூல்களென்று சொல்லப்பட்டன. முதலிலே கருவி நூல்களைக் கற்று அவற்றை நிலைப்படுத்தினாலொழிய ஏனைய நூல்களைக் கற்றலரிது. கருவிநூல்களைக் கற்காதோர் ஏனையநூல்களைக் கற்றுக்கொள்ளமாட்டார். ஆதலிற் கருவிநூல்களே முதலிற் கற்கத்தக்கன.

செல்வப்பொருள் கள்வர் அரசர் முதலியோராற் கவரப்படும். கல்விப்பொருளோ ஒருவரானுங் கவரப்படமாட்டாது. செல்வப் பொருள் பிறர்க்குக் கொடுக்குந்தோறும் குறைந்துகொண்டேவரும். கல்விப்பொருளோ பிறர்க்குக் கொடுக்குந்தோறும் வளர்ந்துகொண்டே வரும். செல்வப்பொருள் இவ்வளவினதென்று விலைமதிக்கக் கூடியதாயிருக்கின்றது. கல்விப்பொருளோ ஒருவரானும் இவ்வளவினதென்று விலைமதித்தற்கு இலகுவானதன்று. செல்வப்பொருள் வெள்ளத்தினு லழிவெய்தும். அக்கினியாலழிவெய்தும். கல்விப் பொருளோ ஒன்றானு மழிவடையமாட்டாது. செல்வப்பொருள் பணிவுடைமையை யடைவிக்கமாட்டாது. கல்விப்பொருளோ அவ்வித அநேக குணாதிசயங்களை யடைவிக்கின்றது. செல்வப்பொருள் தேடுதல் காப்பாற்றுதல் இழத்தல் என்னுமிவற்றா னிடையறாத் துயரத்தையுண்டாக்கி எல்லோரையும் பகைப்பிக்கும். கல்விப் பொருளோ தன்னைப் பொருந்தியுள்ளவர்களுக்கு இம்மையிற் கீர்த்தி

முதலியவற்றைக்கொடுத்து மறுமைக்கண் நற்கதியிற் சேர்க்கின்றது. மாமியும் மருமகளும் ஓரிடத்திலிருக்கலாகாதென வெண்ணினாற்போலச் செல்வப்பொருள் கல்விப்பொருளாகிய இரண்டும் ஒருவர்மாட்டமைந்திருத்தல் அரிதாகின்றன. கல்விப்பொருள் உள்ளவர்மாட்டு உலகத்துள்ளாரனைவரும் அன்புடையவராக இருப்பார். கல்வியுடையவருக்குச் சென்ற சென்ற இடங்களிலெல்லாஞ் சிறப்புண்டு. இது பற்றியே நீதிநூற்காரரும்,

"மன்னனும் மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்—மன்னர்க்குத்
தன்றேச மல்லாற் சிறப்பில்லைக் கற்றோர்க்குச்
சென்றவிட மெல்லாஞ் சிறப்பு."

என்று கூறியிருக்கின்றனர். ஆதலின் செல்வப்பொருளினுங் கல்விப்பொருளே மிக விசேடமுடைத்து.

உயர்ந்த வருணத்தாராயினும் அழகுள்ளவராயினும் கல்வியில்லாதார் முருக்கம்பூவையே நிகர்ப்பர். அழுக்கேறாத புடைவையிலே சாயம் நன்றாகப்பிடிக்கும். அதுபோலஇளமையிலே கற்கும் கல்வி மனதிலே நன்றாகப் பதியும். இதுபற்றியே ஔவையாரும் "இளமையிற் கல்" என்று கூறினார். முதிர்ந்த வயதிலே கற்கும் கல்வி மனதிலே நன்றாகப் பதியமாட்டாது. ஆதலினாலே கல்வியை அவமதியாது அனைவரும் இளமையிலே கற்றல்வேண்டும்.

கல்வியிலே தேர்ச்சியடைய விருப்பமுள்ளவர் கல்வி கற்பிக்குந் திறமையும் நற்குணமுமுடைய ஆசிரியனை அடைந்து சந்தேகவிபரீதமறக் கற்றல் வேண்டும். சந்தேகமாவது பொருள் இதுவோ அதுவோ என்று ஒன்றிலே துணிவுபிறவாமை. விபரீதமாவது ஒன்றை மற்றொன்றாக எண்ணுதல். கல்விகற்றற்குப் பெரும்பாலும் வேண்டியன பொருளுடைமை உதவியுடைமை பிணியின்மை புத்தியுடைமை நல்லாசிரியருடைமை என்பனவாம். ஆசிரியர் மாணாக்கரிடத்தே அதிக அன்புள்ளவராக இருக்கவேண்டும். மாணாக்கரும் ஆசிரியர்மாட்டு மிக்க அன்புடையவராக இருக்கவேண்டும். கல்வியை மிகவும் ஊக்கத்துடன் கற்கவேண்டும். ஒருநாள் ஊக்கமாவும் மற்ற

நாள் ஊக்கமின்றியும் கற்கக்கூடாது. அறிந்துவிட்டோமென்று ஒருதரங்கற்போர் தேர்ச்சியடையார். பலதரமும் கற்பவரே தேர்ச்சியடைவார். இதுபற்றியே திருவள்ளுவரும்,

> "தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
> கற்றனைத் தூறு மறிவு." என்று கூறினர்.

கல்வியை நன்றாகக் கற்கவேண்டும். கற்றால் பின்பு கற்றபடி ஒழுகுதல் வேண்டும். இதுபற்றியே திருவள்ளுவரும்,

> "கற்க கசடறக் கற்பவை கற்றபி
> னிற்க வதற்குத் தக." என்று கூறினர்.

ஆசிரியரிடம் கேட்குமுன் பாடங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ளல் வேண்டும். கல்வியைச் சிறிது கற்றவளவிலே அமையாது மேன்மேலும் கற்க முயலல்வேண்டும். மாணுக்கர்கள் தாங்கேட்டவைகளைப் பலதரமும் ஆயத்தப்படுத்தல்வேண்டும். ஒருசாலைமாணவருடன் அவற்றைக் கேட்டற்கும் விடைகொடுத்தற்கும் பழகல் வேண்டும். ஒரு நூலைப்பலதரமும் பார்த்தாலொழிய அதன்நுட்பம் விளங்காது. யாவராயினும் கற்கவேண்டும் என்று எண்ணுவார்களொழியக் கற்றதை மனதிலே வைத்துக்கொள்ள வேண்டுமென்று எண்ணார். அது எவ்வாறெனில், கையிற்சேர்ந்தபொருளை விடுத்து அரிப்பு அரித்தெடுத்தல்போலாம். கல்வி கற்கும்பொழுது மனம் மாறுபடாது ஒருநெறிக்கட் செல்லவேண்டும். அவ்வாறன்றி வேறு விடயத்திற்செல்லின் அது மனத்திற்பதியாது.

எத்தானத்தினும் வித்தியாதானமே சிறந்தது, ஆன்மசுகத்துக்கேற்ற அன்னவஸ்திரம் முதலியவற்றையும் ஞானத்தையுங் கொடுத்தலின். அன்னவஸ்திரங் கொடுத்தல் ஒருவர்க்கே பயன் படும். கல்வியோவெனின் அப்படி அன்று. ஒருவர் வேறொருவருக்குச் சொல்ல, அவர் இன்னும் இருவர்க்குச் சொல்ல, அவர்களும் இவ்விதமே பலருக்கும் சொல்லுவர். அதனாலே அநேகர் முத்திநூல்களைக் கற்று மோக்ஷத்தை அடைவார்கள். ஆதலினால் எவற்றினுங்கல்வியே சிறப்புடைத் தென்பது பெறப்படுகின்றது.

ச. ஜகநாத ஐயர்.

ஸ்ரீ:

# நுண்பொருண்மாலை.

(முற்றொடர்ச்சி.)

௭௬௪. "அறிவின்...................படை."

நு - லை:—வன்கணதுவே படையென்றது, குற்றியலுகரத்தின்முன்னுடம்படுமெய் விகாரத்தால் வந்தது. "புணர்ப்போ நிலனும்" (௧௭) என்னுங்கோவையாருட் 'புகுந்ததுவே' என்பதுமது. "ஆற்றலதுவேபடை" (௭௬௫) என்பதுமது. 'விண்வத்துக்கொட்கு'மெனக்காட்டினர் நச்சினார்க்கினியார். "வல்சியினெண்கு" (௨௬௪) என்னுங்கோவையாருட் செல்வரிதன்றெனக் காட்டினர் (பேராசிரியர்) இவ்விரண்டுமொற்றின் முன்னுடம்படு மெய்வந்தது. "கன்னின்று" (வெண்பாமாலை) னென்னும்பாட்டு மிதனுட்காண்க.

௭௬௮. "அடற்றகையு..............பெறும்."

நு - லை:—தகை முன்னது தறுகண்மை; பின்னது தோற்றப்பொலிவு. நிலைமக்கள் சாலவுடைத்தென்பதனுள், தளகத்தனில்லாத படைநில்லாதென்பது காண்க.

௭௯௪. "குடிப்பிறந்து................நட்பு."

நு - லை:—வேண்டுமென்பதொருசொன்னீர்மைத்து. உறுப்பினுள் யாது கொடுத்துங் கொளலென்பதனையொக்குங் கொளல்.

௭௯௮. "உள்ளற்க............ நட்பு."

நு - லை:—ஆற்றறுத்தல் - கைவிடுதல். "அமரகத்தாற்றறுக்குங்கல்லாமா"வுமது. (திருக்குறள்-௮௧௪)

௮௦௧. "பழைமை............நட்பு."

நு - லை:—கிழமை உரிமையாயவொருபெயர். கெழுதகையென வருவனவுமது. கீழ்ந்திடுதல் - சிதைத்தல். "ஆண்டிலெடுத்த"

என்னுங் கோவையாருள் (உ௪௯) "பஃறுமணரகீழ்ம்பழன"மென் பதுமது. "மீள்வதுசெல்வதன்"றென்னுங் கோவையாருள் (உ௪௭) மீள்வது செய்த கிழவோனென்றதனாற், மீண்டல் வேறு.

அ0உ. "நட்பிற்..............கடன்."

ந - லை:—உறப்பென்பதிலக்கணையடியாக வந்த குறிப்புச் சொல். "அனிச்சப்பூக்கால்" (திருக்குறள் ௧௧௧௫.) என்பதுமது. வடநூலா ரிலக்கணாமூலத்தொனி யென்பர். வேறின்மை தோன்ற வுறப்பென்றார்.

அ௨௧. "சீரிடங்......நட்பு."

ந - லை:—எறிதற்குப்பட்டடை, யெறிதற்குத் துணையாயபட்டடை. "ஆரம்பரந்"தென்னுங் கோவையாருட், சீரம்பரம் - சீர்த்தவம்பரமென இறந்தகால வினைத்தொகையானது போல ஈண்டுஞ் சீரிடம் வாய்த்தவிடம். பரிபாட்டுட், "புகர்வரி வண்டு-புகர்த்தவரி வண்டு." 'அமர்க்' கட்டு' (திருக்குறள் - ௧0அ௯.) என்பதுமது.

அ௩௯. "பெரிதினிது..............றில்."

ந - லை:—பெரிதினிது - மிகவினிது. புகழ்வார் போன்று பழித்தலென்னு மேதுவலங்காரமுங் காண்க.

அ௯௧. "வலியார்க்கு.........பகை."

ந - லை:—ஓம்பா - ஒழியாது. மேக - விரும்புக. ஒன்றுகடைக் குறைந்தது; ஒன்று இடைக்குறைந்தது. "தத்தந் திரிபே சிறிய வென்ப" (தொல்-எழுத்- அஅ.) என்பதுபோலச் சிங்கநோக்காயீண்டுப் பொதுப்படமெலியார்மேலு முன்னர்ச்சிறப்புவகையால் மெலியார்மேலும் பகைமாட்சி சிங்கநோக்காயிற்று.

அஅஅ. "அரம்பொருத........குடி."

ந - லை:—பொருதென்னுஞ் செயப்பாட்டுவினையெச்சந் தேயுமென்னும் வினைகொண்டது. "ஆகாறளவிட்டிதாயினு"(திருக்குறள்-

௪௭௮) மென்பதற்குரைத்தாங்குரையா தாரத்தின்றொழிலாயினுங் குடிமேலேற்றுதலின் வினைமுதன் வினையாயிற்று என்பது வினவுக.

௯௧௮. "ஆயுமறிவின........முயக்கு."

ஙு - லே:—அணங்கு - காமநெறியாலுயிர்கொள்ளுந்தெய்வமகள். தாக்கு - தீண்டல்; காமத்துள் "தாக்கணங்கு"(௧0௮௨)என்பதுமது.

௯௨௪. "நாணென்னு........தார்க்கு."

ஙு - லே:—நல்லாளெனப் பெண்பாலாக்கியது, சொல்லப்பட்ட சொற்களையெல்லாமாண்பால் பெண்பால் அலிப்பாலென பால்வரையறுத்தோதுதல் வடநூலார்மதமாகலின். இலச்சையென்பதைப் பெண்பாலென்பதுபற்றி நல்லாளென்றாரென்க; அவை : ஸ்திரீலிங்கம், புல்லிங்கம், நபுஞ்சலிங்கமென்பர்.

௯௩௩. "உருளாய........படும்."

ஙு - லே:—பொருளாயம் - பொருளும் பொருள்வருவாயுமென்றதனு லும்மைத்தொகை. உருள் - உருளுங்கவறு. ஆயத்தை இக்காலத்தார் ஆதாயமென வழங்குவர்.

௯௩௬. "அகடாரா........டார்."

ஙு - லே:—மூடப்பட்டார் எழுவாயாகியதால் அல்லலுழப்பரென்பது, பயனில்லாததனைக்கிப்பெயரென்றது எதிர்காலமுற்றுவினைச்சொல்லென்றார்.

௯௪0. "இழத்தொறூஉங்......!..றுயிர்."

ஙு - லே:—தொறு - தான் சார்ந்தவிடத்தைப் பலவாக்கியாண்டாண்டென்பதுபட நிற்பதோரிடைச்சொல். இழத்தொறு முழத்தொறுமென நின்றன விழக்குந்தொறு முழக்குந்தொறுமெனநின்றன. "இறைத்தொறூறுங்கிணறென்பது" மது. "கடந்தொறும்வாரண" மென்னுங் கோவையாருள், (௨௫.) "தொடர்ந்தொறு" மென்பதுமது. (தொடரும்.)

பத்திராசிரியர்.

திருச்சிற்றம்பலம்.

# குதிரையைப்பற்றிய ஆராய்ச்சி.

(முற்றொடர்ச்சி.)

“தெரிதர வகுத்த விங்கிற நான்குஞ் செறிந்தன மிச்சிர மிதன்பே [ண்மை
ருரைசெய்வர் முகமார் புச்சிவால் காலென் றுரைத்தவெட் டுறுப்பினும் வெ
விரவிய தட்ட மங்கலந் தலைவால் வியனுர மென்றவிம் மூன்று
மொருவிய வுறுப்போ ரைந்திலும் வெள்ளை யுள்ளது பஞ்சகல் யாணி.’’

“அணிகிளர் கழுத்தில் வலஞ்சுழித் திருந்தா லறிந்தவ ரதனையே தெய்வ
மணியென விசைப்பர் முகந்தலை நாசி மார்பமிந் நான்கு மிவ்விரண்டு
பணிதரு சுழியு நுதனடுப் பின்னைப் பக்கமு மொவ்வொரு சுழியுந்
துணிதர விருப்ப திலக்கண முளதிச் சுழியில திலக்கண வழுவே.”

“பிரிவுற வுரத்தி லைஞ்சுழி யுளது பேர்சிரீ வற்சமா நுதலி
லிருசுழி யாதன் முச்சுழி யாத லிருக்கினு நன்றது வன்றே
லொருவற நான்கு சுழிவலம் புரியா யுள்ளது நல்லது வன்றி
யிருசுழி முன்னங் கால்களின் மூலத் திருக்கினு நல்லதென் றிசைப்பார்.”

“களநடு விரட்டைச் சுழியுடைப் பரிதன் கருத்தனுக் கறமிடி காட்டு
மளவறு துன்ப மரணமுண் டாக்கு மவைகணைக் காலுள வாகி
லுளபயந் துன்ப நிகளபந் தனமே லுதடுமுற் காலடி கபோலம்
வளர்முளந் தாளிந் நான்கினுஞ் சுழிகள் மன்னினுந் தலைவனை வதைக்கும்”;

“இச்சுழி யுடைய புரவிபந் தியில்யாத் திருக்கினும் பழுதிலை கிடக்க
வச்சமில் பரிக்குப் பிராயநா லெட்டா மவத்தைபத் தாகுமொவ் வொன்றில்
வைச்சது மூன்று வருடமு மிரண்டு மதியமும் பன்னிரு நாளு
நிச்சயித் தளந்தா ரின்னமு மொருசார் நிகழ்த்திடு மிலக்கண மதுகேள்.”

வேறு.

“எவ்வண்ண பேதமிகுந் திருந்தாலும் வெள்ளை கலந்திருந்த தானு
லவ்வண்ணப் பரிநன்று கரும்புரவிக் ககடேனு மகன்மார் பேனுஞ்
செவ்வண்ண மிருக்கினது சயமுளதப் படிவெண்மை சேர்ந்தா லந்த
மைவண்ணப் பரியின்பேர் வாருணமாஞ் சயங்கொடுக்கு மாற்றார் போரில்.’

*

“மகவளிக்கும் பிடர்வெளுப்பு மகிழ்வளிக்கு முரவெளுப்பு மணித்தார்க் கண்டத், தகவெளுப்புப் பொருள்கொடுக்கு முகவெளுப்புச் சயங்கொடுக்கு மதன் பின்பக்கத், தகவெளுப்புச் சுகம்பயக்கு மிடவெளுப்புச் சந்தானந் தழைக்குஞ் செல்வ, மிகவளர்க்குந் தனம்பலதா னியநல்கும் வலப்புறத்து வெள்ளைமாதோ.”

“நற்புறம்வான் முகமூன்றும் வெளுத்தபரி வென்றிதரு நாபி தொட்டு
முற்புறமெல் லாம்பரிதியெனச்சிவந்து மதியெனப்பின் முழுதும் வெள்கும்
பொற்புடைய வயப்பரிக்குப் பகல்விசய மதியெனமுற் புறம்பு வெள்கிப்
பிற்புறமெல் லாங்கதிர்போற் சிவந்தபரிக் கிராவிசயம் பெருக்கு மன்றே.”

“வந்தனவா லிவ்விரண்டு வகைப்பரியும் புரவியடி வைத்தா லொத்த
பந்தெனவு நின்றாலோ மலையெனவு மொலித்தாலோ பகடு சீறும்
வெந்தறுக ணரியெனவும் வேகத்தாற் காற்றெனவு மிதிக்குங் கூத்தாற்
சந்தநட மகனெனவு நடக்கிலரி களிறெனவுந் தகைய வாகி.”

“குலமகள்போற் கவிழ்முகமுங் கருநெய்த லெனக்கண்ணுங் கொண்டு
கார்போ, னிலவியசீர் வண்ணமுங்கார் நெய்தலெனக் கடிமணமுநிறைந்து
நாற்ற, மலாகில்சந் தெரிமணிப்பூ ணலங்கரிக்கி லானுத மகிழ்ச்சியெய்தி
யிலகுவதுத் தமவாசி யென்றுரைப்பர் பரிவேத மெல்லை கண்டோர்.”

“நூறுவிர லுத்தமவாம் பரிக்குயர்வீ ரெட்டுவிர னூறு நீக்கிக்
கூறுவிரன் மத்திமவாம் பரிக்கறுபத் தொன்றதமக் குதிரைக் கென்ப
* வீறில்புக ழாய் †பொருந ரிப்பரியைப் பூசனைசெய் திறைஞ்சிப் பாச
மாறுவரா லெனமணித்தார் சதங்கைசிலம் பணிவித்து மதிக்கோ மாறன்.”

எனக்கூறிய ௧௦௬-ஆஞ் செய்யுள் முதல் ௧௨௦-ஆஞ் செய்யுள் வரை காண்க.

---

*“ஈறில் புகழாய் பொருநரிப் பரியை” என்பதற்கு “முடிவில்லாத கீர்த்தியையுடையபாண்டியராசனே, அரசர் இக்குதிரைகளையெனப்பொருள்” கொள்க. பொருநரிப்பரியை யென்பதற்குச் சிலேடையாக “பொருகின்ற நரியாகிய குதிரையை” யென உண்மைதோன்ற அமைத்துக்கூறினுரென்க. பொருநர்-அரசர் என்பதனைச், சூடாமணி நிகண்டில் பதினொராவது ரகரவெதுகை-௨௮-ஆஞ்செய்யுளிற் காண்க. “ஈறில் புகழாய்ப் பொருநரிப் பரியை” என்னும் பாடத்தை, “ஈறில்புகழாயவொருநரிப்பரியை” எனப்பாடங்கூறி, ஒருநர் ஈறு இல் புகழ் ஆய இப்பரியை எனப்பிரித்துக்கூட்டி - வாங்குமொருவர் முடிவில்லாத புகழமைந்த இக்குதிரையையென வுரைசெய்திருக்கின்றனர். இப்பாடமும்உரையும் பொருந்தாமை காண்க.

௬௬-ஆவது கவியிற் குதிரையின்சாரி இருவகையென்றார். ௭௭-ஆவது கவியிற் சாரியின் விகற்பம் பதினெட்டென்றார். புறப்பொருள் வெண்பாமாலையினுஞ் சாரி பதினெட்டு என்றார். அவைகளை விரித்துரைத்திலர்.

திருவாதவூரடிகள் புராணம், குதிரையிட்டசருக்கத்தில், வாலடியிற் சந்திரசுழி, அண்டாவர்த்த சுழிகளும், உடம்பின் பக்கத்தில், கௌவகசுழி காகாவர்த்தசுழிகளும், முன்வளையச்சுழி, கேதாரிச்சுழிகளும் கேசாவர்த்த சுழியும், பட்டைச்சுழியும் * இருத்தல் கூடாதென்றும்;

தலையிலிரண்டு சுழியும், நாபியின்பின் நான்குசுழியும், மார்பிலிரண்டுசுழியும், நெற்றியிலொருசுழியும், உதட்டிலொரு சுழியும், ஆகிய இப்பத்துச் சுழிகளும் குறையாமலிருக்கவேண்டு மென்றும்;

நரி, வெருகு, காகம், பேய், ஓரி, நாய், பன்றி இவ்வாறினுடைய சத்தமில்லாதிருக்கவேண்டுமென்றும், சமுத்திரமும் மேகமும் சங்கும் இடபமும் மிருதங்கமும்போலச் சத்தமுடைத்தாயிருக்கவேண்டுமென்றும்;

புலி, கரடி, கழுதை, செந்நாய், பூனை, நரி, காகம், புகை இவற்றின் நிறமில்லாதிருக்கவேண்டுமென்றும்;

முத்து, சந்திரன், நீலமணி, தாமரைப்பூவின்மகரந்தம், பொன், காயாமலர், செவ்வரத்தமலர், பச்சைக்கிளி இவற்றின்நிறம் பொருந்தியிருக்கவேண்டுமென்றும்;

மாகாளனும் சாரங்கனும் கங்காநீலனும் வெள்ளவழகனும் கொங்காளனும் சன்னசாம்பனும் குங்குமச்சேரனும் கரியானும் நீலனும் சாரனும் வள்ளானும் உரஞ்சிவந்தானும் நல்லானும் பொல்லானும் கருங்கற் சாம்பனும், ஆகிய இப் ‡ பதினைந்து நிறங்களையுடைய குதிரை யுயர்ந்தசாதிக் குதிரை என்றும;

* இக்குற்றமுள்ளசுழிகளை விரித்துக்கூறவில்லை.
‡ இப்பதினைந்து நிறத்தையும் விரித்துக்கூறவில்லை.

கொம்புபோல நீண்டசெவியும் முறுகியசெவியும் மூன்றுகால் விளர்த்து ஒருகால் கறுத்திருப்பதாகிய நஞ்சபாதமும், மூன்றுகால் கறுத்து ஒருகால் விளர்த்திருப்பதாகிய கொள்ளிக்காலும், வெள்ளிய கண்ணும், நீலகண்டமும், பீசமின்மையும், ஒன்றற்கொன்று குறைவாய்ப் பெருத்த பீசமும், முகம், வால், நான்குகால்களில் சுழியின்மையும், கழுத்தடியில் மார்க்கண்ட மிரட்டையாகப் பொருந்தாமையும் குற்றமென்றுங் கூறுவர்.

உத்தமவிலக்கண மமைந்த குதிரையை நம்பிராவெனென்பர். சீவகசிந்தாமணி, மண்மகளிலம்பகம், ௬கூ-ஆஞ் செய்யுட் குறிப்புரையிற்காண்க.

மாளவதேசத்திடத்தனவாகிய குதிரைகள் அஞ்சாத வாண்மையுடையனவாய்த் தாமரை நிறத்தனவாய் வெண்குளம்பையுடையனவாய் இருக்குமென்றும்;

சிந்துவின் கரையனவாகிய குதிரைகள் பறையொலிபோல் முழங்குவனவாய், நாவலின் கனிபோலுங் கோலத்தனவாயிருக்கும் என்றும்;

பாரசூரவம் பல்லவம் என்னும் பதியிற்பிறந்த குதிரைகள் வீரவாற்றலுடையனவாய் மதுநிறத்தனவாய், கதியால் விண்புகுவனவாய் இருக்கும் என்றும் ;

மாராட்டதேசத்திடத்தனவாகிய குதிரைகள் மயிற்கழுத்துப்போலும் நிறத்தனவாயிருக்கும், கப்பலில் வந்திறங்கிய குதிரைகள் கிளிபோலு நிறத்தனவாய்ப், பவளக்குளம்புடையனவாயிருக்குமென்பர்; அவ்விலம்பகத்தில்,

"தறுக ணாண்மைய தாமரை நிறத்தன தகைசான்
மறுவில் *வான்குளம் புடையன மாளவத் தகத்த
பறையி னுலவ படுசினை நாவலின் கனிபோற்
குறைவில் கோலத்த குளிர்புனற் சிந்துவின் கரைய."

---

* வான் - வெண்மை.

"பார சூரவம் பல்லவ மெனும்பதிப் பிறந்த
வீர வாற்றல விளைகடுங் தேறலி னிறத்த
பாரிற் றேர்செலிற் பழிபெரி துடைத்தென நாணிச்
சோரும் வார்புய றளங்கவின் புகுவன தூரகம்."

"பீலி மாமயி லெருத்தெனப் பெருவனப் புடைய
மாலை மாரட்டத் தகத்தன வளரிளங் கிளியே
போலு மேனிய பொருகடற் கலத்தின்வந் திழிந்த
கோல நீர்ப்பவ ளக்குளம் புடையன குதிரை."

மாலை - ஒழுங்கு, மாரட்டம் - மகாராஷ்ட்ரம்.

எனக்கூறிய ௫௮, ௫௯, ௬௦-ஆஞ்செய்யுட்களிற் காண்க.

போரிற்செல்லுங் குதிரைகள் பறந்துசெல்லுஞ் செலவிலே தருக்கினவாய்ப், போரிலே கறங்குபோலத் திரிவனவாய்க், கவரியை யணிந்த நெற்றியையுடையனவாய், நூலோர் பிறந்தவிடமறிகவென்று துடையிலே எழுதின வெழுத்தையுடையனவா யிருப்பனவென்பர். அவ்விலம்பகத்தில்,

"பறந்திய றருக்கின பரவை ஞாட்பினுட்
கறங்கெனத் திரிவன கவரி நெற்றிய
பிறந்துழி யறிகெனப் பெரிய நூலவர்
குறங்கெழுத் துடையன குதிரை யென்பவே."

என்றுகூறிய, ௧௧௭-ஆஞ் செய்யுளிற்காண்க.

குதிரையைப் பறக்கச்செய்யு மந்திரமும், வேண்டுமிடத்தே நிறுத்தச்செய்யு மந்திரமும் ஆகிய வீரமந்திரமிரண்டையும் அதன் செவியிற் கூறுவதுண்டென்பர்! காந்தருவதத்தையா ரிலம்பகத்தில்,

"தம்பியைச் சீவக ஞேக்கிச் சாமரை
வெம்பரி மான்செவி வீர மந்திரம்
மிம்பர் நம்மிடர் கெடவிரண்டும் வல்லையாய்
நம்பிநீ மொழிகென நயந்து கூறினன்."

எனக்கூறிய, ௩௦௦-ஆஞ்செய்யுளிற் காண்க.

வெல்லக்கட்டியுடனே கலந்த அரிசியும், வெந்த காணமுமுணவாகக் கொடுப்பர் என்பர்; விமலையாரிலம்பகத்தில், "கட்டியுமரிசியும் புழுக்குங் காணமும், * புட்டில்வாய்ச்செறித்தனர்புரவிக்கு" எனக் கூறிய, ருO-வது செய்யுளிற் காண்க.

இனி அரசர்க்குரிய பரியிலக்கணமாமாறு; மாதர் மனம்போல மனத்தையுடையதாய், வாழைமடல்போலவளர்ந்த செவியையுடையதாய், நான்கு கால்களும் பிடரியும் முகமும் முதுகும், வெண்ணிறமுடையதாய், எண்பத்திரண்டு விரலுயரமுள்ளதா யிருப்பதென்பர்; †மாதர் மனமென மிக்க மனத்தது, வாழைமடலென வளர்ந்தசெவியது, நாலுதாளுமெருத்துமுகனும், வெந்நுமுன்னும்வெண்மையுடையதா, யெண்பத்திருவிரலுயரமுயர்ந்தது, பண்புடையரசர்க்காவது பரியே. எனப்பிங்கல நிகண்டிற் கூறியது காண்க.

சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர்,
சைவநூற்பரிசோதகர், மதுரைத் தமிழ்ச்சங்கம்.

* புட்டில் - குதிரைக்கு உணவுகட்டுங் கருவி.

† "மாதர்மனமெனமிக்கமனத்தது" என்னும்பாடத்தைமாற்றி, "மாதர் மணமென மிக்க மணத்தது" என அச்சிட்டிருக்கின்றனர். சூடாமணிநிகண்டில் "மாதர்தம் மனத்தையொத்த மனத்ததாய்" எனக்கூறுதலானும் திருவிளையாடற்புராணத்தில், "குங்குமங்கருப்புரங்கொழுந்திண் காரகில் - பங்கமான்மதமெனக்கமழும்பாலதாய்" எனக்கூறுதலாலும் அது பாடமன்றென்க.

திருச்சிற்றம்பலம்.

# பெரியபுராண அரும்பத விளக்கம்.

---:o:---

[பழைய ஏட்டினின்று எடுக்கப்பட்டது.]

(முற்றேடர்ச்சி.)

(உ௯0) அஞ்சலியோடு குவித்தகையைத் தலைமேற்கொண்டு நின்று வணங்கி "நீர் கோயிலுள்ளீரே" என்ற சுந்தரமூர்த்தி நாயனுருக்கு ஊன்றுகோலைக் கொடுத்திணக்கமற்ற மொழியால் "உள்ளோம் போகீர்" என்று அந்நியர்போலக் கூறினர்.

(உ௯௬) மூலமறிவரியாராய சிவபெருமான் கண்ணையளித்துக் காமாட்சியம்மையாருடைய முலைச்சுவட்டுக் கோலத்தைத் தரிசிப்பித்தலும்.

(உ௯௧) பார்வதி தேவியாருடைய முலைச்சுவட்டையும் வளைத் தழும்பையும் அணிந்த இளம்பிறைபொருந்திய கொன்றைப்பூமலிந்த நெடிய சடையையுடையவரை ஸ்தோத்திரஞ்செய்து அருளதுவாக.

(உ௯௩) வன்னிப் பத்திரத்தோடு வில்வத்தையும்.

(உ௯௪) சிறந்தநாடாகிய சோழநாட்டை.

(உ௯௫) உரவுநீர் - பரந்த நீர்.

(௩0௩) வன்றொண்டரானவர் திருவாரூரில் (இரவும் பகலும் மயங்கின) மாலைக்காலத்திற் புகுந்து நெருங்கிய சடையையுடைய தூவாயரை முன்னரே வணங்க வந்தணைந்தார்.

(௩0௫) விரவுவார் திருத்தொண்டருடன்கூடி வந்தடைகின்ற திருத்தொண்டரோடு கூடி, இடபத்தையுயர்த்திய சிவபெருமானுடைய திருமூலஸ்தானத்தே சமயாறிந்துவந்து உவமையற்ற திருவத்த யாமத்திலே வணங்கவந்தடைந்தார்.

(௩0௬) சிவனடியார் எதிரே வர அவருடைய முகத்தைப்பார்த்துக் குற்றமற்ற இசையோடு "குருகுபாய" என்று கோத்தெடுத்து அங்கியரைப்போல் விளுவித் துக்கத்தால் திருப்பதிகத்தை விரும்புகின்ற கைக்கிளையாற் பாடிக் கலந்தடைவார்.

(௩0௮) தாழ்ந்தகருத்தினை நிரப்பி - ஒருகண்ணில்லாமையால் தாழ்ந்த கருத்தினை முற்றுவித்து, கண்ணைத்தாருமென்று அழுதார்.

(௩0௯) வாயாற் பருகற்கரிய இனிய அமுதத்தை.

(௩௧0) அடிமையுந் திருத்தோழமையுமாகுந்திறத்தோடு.

(௩௧௧) நம்பியாரூரர் விரும்பின வேதனையை நீக்கவிரும்பிக் கிருபா நோக்கஞ் செய்தருளி.

(௩௧௩) விட்டுணுவும் பிரமாவுந் தம் முறைகூறற்கு இருக்கும் வாயிலானது கழியப்புறத்தே வந்து.

(௩௧௪). நங்கையாகிய பரவையாரானவர் தம்மைச் சுந்தரமூர்த்தி நாயனார் பிரிந்துபோனபின் இருக்கின்ற அழகிய மாளிகையின் கண்ணே தனிமைமிகத்தளருபவர்க்கு நாளெல்லாம் இராப்பகலாய்ப் பகல் இரவாய்க் கழிய மிக்கவிருப்பம் மேற்படப் புலர்வார் சிலநாள் நீங்கிய பின்னர். "கங்குல்பகலாய்ப்பகல்கங்குலாக" என்றது, இராக் காலத்திற்குரிய புணர்ச்சி நினைவு அயர்ச்சி முதலியன பகற்காலத்தினும், பகற்காலத்திற்குரிய விழிப்பு காமவின்ப நீக்கம், புறத்துச்செல்லுதல் முதலியன இராக்காலத்தும் இவர்மாட்டு நிகழ்கின்றமையானென்க.

(௩௧௫) மெய்ம்மைவார்த்தையைத் தாம் அச்சுந்தரமூர்த்திநாயனார் மாட்டே அனுப்பினோர் வந்துகூறத் தம்மை அறியாத கோபத்தால்; தம்மையறியாத கோபமென்றது, தம்மையும் கோபத்தையும் வேறுபிரித்தற்கரிய கோபமென்ற கருத்திற்று; எனவே, கோபமயமாயினர் என்பது தாற்பரியம்.

(௩௧௬) மிருதுவான பூஞ்சயனத்தில் நித்திரையுஞ்செய்யார், அம்மட்டோ விழித்து மினிதாக அமரார். அழகிய பூந்தவிசின்மேலு

மிரார். அம்மட்டோ ! நிற்கவும்மாட்டார். செல்லவும் மாட்டார், அம் மட்டோ; புறத்தே போதலையும் ஒழியார், மன்மதனது பூம்பாண மாகிய மழையைக் கழியார், மறவார், அம்மட்டோ நினையார், என் செய்வார்; எனும்மையும் ஊடே உருக்குவிக்கும் புலவியோ, பிரிவோ யாமறியேம், இரண்டினிடையே அகப்பட்டார். மறவார் நினையார் என்பதை "நினைத்ததும் மறந்ததுமிலாத நெஞ்சினுள்" என்பதுபோற் கொள்க.

(௩௧௭) கையறவு - வருத்தம். பிறைக்கண்ணி - இளம்பிறை யாகிய கண்ணி. சென்ற பெருமையையுடைய பரிசனங்கள் உட் புகப் பெறாது புறத்தே நின்றார்.

(௩௧௮) செயற்கை முழுதையும் ஒன்றும் ஒழியாவண்ணம் அறிந்து அவ்விடத்துள்ளோராய பெண்கள் தாள.

(௩௧௯) உலகியல்பைக் கற்றமாந்தர்.

(௩௨௧) பேதமிலைமை நீதியினால் - ஊடலுக்குரிய ஒழுக்கநீதி யால்.

(௩௨௩) அருகுசூழ்ந்தார் துயின்று திருவர்த்தயாமப் பூசையு முடிந்து.

(௩௨௪) பழையவினையால் இப்பிறப்பிறப்பிற்கு மூலமாயினு ளுடைய பக்கத்தையடையுமாறு.

(௩௨௫) அடியாருடைய வருத்தத்தைத்தரியாதவர் அடிமைக் கொண்ட தோழருடைய குறையை முடியாதிருக்கவல்லரா? முழு தையுமீன்ற உமையினுடைய அழகியதளிர்போலும் கையில்பொருந் திய வளைத்தழும்பும் முலைச்சுவடுமுடையார் அடியாராகிய நம்பியா ரூரர் காணும்படியால்.

(௩௨௬) அவயவங்கள்நடுங்கி, மயிர்கள் உரோமாஞ்சங்கொள்ள. அம்பிகையை இடப்பக்கத்திலுடையோருடைய செந்தாமரை மலர் போன்ற பாதங்களின் கீழ். அம்பிகாவல்லவர் - அம்பிகைக்குவலப் பக்கத்தினர்; வலவர் வல்லவர் என விரித்தல் விகாரம்பெற்று நின்

*

றது. இனி, வல்லவன் என்பதற்குப் புருஷன் எனப்பொருள்கொண்டு அம்பிகைக்கு நாயகன்என்று கூறினுமமையும். இங்ஙனமன்றி வல்லவர் என்பதில் வலம் என்பதற்கு இடமெனப் பொருள்கொண்டு இடம் இடப்பக்கமென்றல் போலியுரை என மறுக்க.

(௩௨௭) நாளை தொடங்கும் குற்றத்திலகப்பட்டு வருந்துமென்னை இன்னும் உமக்கு எடுத்தாளவேண்டுமென்று.

(௩௨௯) தலைவர் தேவரீரே; நானிங்கே தேவரீருக்கே அடியேன், ஆனால் தேவரீர் அடியேனுக்குத் தாயினும் பார்க்க நல்ல தோழனுமாகும். அடியேனுக்குத்தலைவர் தேவரீராயின், பொருந்திய அறிவுமிழந்து அழிவேனுடைய அயர்வை நோக்கி அவ்வளவும் போய் இவ்விரவிலேயே பரவைபொருந்திய புலவியைத்தீர்த்துத் தாருமென்று வேண்ட.

(௩௩0) அன்பையே விரும்பும் ஆன்மநாயகர் அடியார்வேண்டியதையே விரும்பி முன்னரே நின்று விண்ணப்பஞ்செய்த நம்பியினுடைய முகத்தைப்பார்த்து.

(௩௩௧). முல்லையரும்பையொத்த வெள்ளிய பற்களையுடைய பரவையாரது முகில்படியும் மாடத்தே தாம் செல்லுமாறு நில்லாது மிக நெருங்கி எம்பெருமானே எழுந்தருளிப் புலவியை நீக்குமென வணங்கினர்.

(௩௩௩) தேவாசிரிய மண்டபத்திற் காவலாக இருக்கும் தேவருளெல்லாம் சேவைசெய்துபோவாருள் வேண்டுவோர்போத ஒழிந்தோர்புறத்தே ஒழிந்துவிட நீங்காத அணுக்கச் சேவையிலுள்ளோராகிய நந்தி பிருங்கி முதலியோர்களும் பூதகணத்தியர்களும் அழியாத முனிவர்களும் யோகிகள் முதலாயினோர்களும் முன்னரே ஒழிய.

(௩௩௪) உவமையில்லாத அன்பர்விடுந் தூதராகிய சிவபெருமான்.

(௩௩௫) விட்டுணுவும் பிரமாவுங்காணாத சிவனுடைய மலர்போன்ற பாதங்களைப் பொருந்திவந்து வழிபடுங்காலமிதுவேயென்று

அவ்விருவரையு மழைத்தாற்போலக் கடலானது உண்டாக்கின நஞ்சையுண்டகாளகண்டருடையபாததாமரைகளிற் சிலம்புகளொலிப்ப.

(தொடரும்)

ஜி. சதாசிவம் பிள்ளை.

உ

# புத்தகக்குறிப்பு.

(1) ஹிந்துமத தூஷணை பரிகாரமும், (2) மனிதன்வமிசாவளியினுண்மையும்:—இப்பெயர்கள் கொண்ட இரண்டு சிறந்த நூல்கள், இந்நகர்ப் பிரபல வக்கீல்களிலொருவரும், தியஸாபிகல் ஸொஸைட்டிப் பிரஸிடெண்டுமாகிய ஸ்ரீமாந்-ப. நாராயணையரவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவை, இப்பரதகண்டத்து சநாதனமதத்துக்கென்றே தம் முடல் பொருளாவிகளை அர்ப்பித்துழைத்துவரும் அனிபெஸண்டம்மையாரவர்களால் இயற்றப்பெற்றவைகளாம். இவற்றுள் ஹிந்துமத தூஷணையின் பரிகாரத்திலே விக்கிரகாராதனம், பலதெய்வக்கொள்கை முதலிய வைதிகமதசம்பந்தமான விஷயங்களில் அறிவிலிகள் சிலரால் நிகழ்த்தப்பெறும் தூஷணைகளைச் சுருதியுக்திகளைக்கொண்டு பரிகரித்து, தத்துவநுணுக்கங்கள் விளக்கப்படுகின்றன. இது, நம்மவர்களெல்லாம் பொதுவாக வாங்கிப் படித்தற்குரியதாதலோடு, நம் பெண்டிர் பிள்ளைகளுக்குச் சிறப்பாக வேண்டத்தக்கதென்னலாம். இதன் மொழிபெயர்ப்பு எளிய தமிழ்நடையில் அமைந்துளது. விலை அணா நான்கே. இனி அடுத்த மனிதவமிசாவளியினுண்மை, ஷை அம்மையாரால் சென்னையில், 1903-ம்௵ செய்யப்பட்ட நான்கு உபந்யாஸங்களடங்கியது. இவ்வுபந்யாஸக் கருத்துக்கள், நம் புராண இதிகாசங்களிற் குறிக்கப்படும் ககோள பூகோளச் செய்திகள் முதலிய எண்ணிறந்த விஷயங்களி னுற்பத்திக் கிரமம், முடிவு முதலியவற்றின் தத்துவ ரகசியங்களைத் தியஸாபிகல் சங்கத்தாரது கொள்கைகளுடன் கலந்து கூறு

வது. இதனிற் பற்பல நுணுக்க விஷயங்கள் லோகானுபவத்தின் வன்மையாலும், எண்ணிறந்த சாஸ்திர ஆராய்ச்சித் திறமையாலும், இவ்வம்மையாரால் கூறப்படுதல் காணலாம். இப்புத்தக விலை அணா எட்டு. வேண்டியவர்கள்:—இம் மொழிபெயர்ப்பாசிரியர்க்கு எழுதிப்பெற்றுக்கொள்க.

ஸ்ரீவேதாந்ததேசிகர் வைபவம்:—ஸ்ரீவைஷ்ணவ சமயாசாரிய கூடஸ்தரில் சிறந்தவருளொருவரான இப்பெரியார்சரித்திரம் மணிப் பிரவாள ரூபத்திலும், வேறுவிதமாகவும் வெளியிடப்பட்டுளதாயினும்,தற்காலத்துக்கேற்ற இனிய செந்தமிழ்நடையில் சிலகாலத்துக்குமுன் தக்க பண்டிதரொருவரால் எழுதப்பட்டிருப்பது தெரிந்து பெருமகிழ்ச்சி யடைந்தோம். அப்பெரியார் ஸ்ரீவேதாந்ததேசிகர் என்று பிரபலமாக வழங்கும் ஸ்ரீவேங்கடநாதாசாரியரேயாவர். இம் மகானுடைய சரித்திரத்தைப் பல அதிகாரங்களாக வகுத்துக் கொண்டு, அநேக நூல்களை ஆராய்ந்து, சென்னையில்வசிக்கும் தில்லையம்பூர் பண்டிதர் ஸ்ரீ உ. வே. வேங்கடராமையங்காரவர்கள் விரிவும் விளக்கமும்பெற எழுதியிருக்கிறார்கள். தேசிகர் உண்மையில் வடநூற்கடலை நிலைகண்டுணர்ந்த ஆசாரியர் என்பது மட்டுமன்று. தமிழினும் பல பிரபந்தங்களியற்றியருளினவர். இதனை நாலாயிரப் பிரபந்தங்களிற் சில பகுதிகட்கு இவரெழுதியருளிய உரைகளாலும் தேசிகப்பிரபந்தம் என்னும் தமிழ்ப்பிரபந்தத்தாலும் நன்கறியலாம். இம்மகானுடைய வாலாறு முழுமையும், நன்கு தெரிந்து மகிழும்படி இனிய செந்தமிழ்நடையில் எழுதிய ஐயங்காரவர்கட்குப் பொதுவாகத் தமிழ்நாட்டாரும், சிறப்பாக ஸ்ரீ வைஷ்ணவர்களும் நன்றிபாராட்டல் கடமையாம். இதன் விலை அணா எட்டு.

பத்திராசிரியர்.

விலாசம்:—

ஸ்ரீ: தி. வேங்கடராம ஐயங்காரவர்கள்.
தமிழ்ப்பண்டிதர், 27. கிருஷ்ணன்கோயிற்றெரு,
மண்ணடி, சென்னை.

# நெல்.

போது:—இவ்வுலகை ரக்ஷிப்பது தான்ய வகைகளே. தான்ய வகைகளில் மிகச்சிறந்ததும் தென்னிந்தியாவில் தொன்றுதொட்டு மிகுதியாக விளைவதும் சரீரபோஷணைக்கு மிகவும் ஏற்றதும் இந்த நெல்லேயாம்.

ஆதியில் நெல்விளைவது இந்தியாவுக்குமட்டுமே உரிமையாயிருந்தது. பின்பு இந்தியாவிலிருந்துதான் ஜப்பான், அமெரிக்கா, ஆஸ்திரேலியா, இங்கிலாண்டு முதலிய அந்நியநாடுகட்குப் பரவுவதாயிற்று. ஆயினும், தற்காலம் நம் இந்தியரைப் பார்க்கினும் அவ் அந்நிய நாட்டார் இவ்விஷயத்தில் கண்ணுங்கருத்துமாக உழைத்து மிகத்தேர்ச்சியடைந்துள்ளார்கள். நம் நாட்டாரோ ஊன்றிக்கவனியாமல் மேற்போக்காகவே நெல் சாகுபடி செய்கின்றனர். உழுவதும், விதைப்பதும் களைஎடுப்பதும் தண்ணீர்கட்டுவதும் காப்பதுமாகிய இவ்வைந்து வகைத்தொழில்களும் சாதாரணமாகச் செய்து வருகின்றார்களன்றி நன்கு கவனித்துச் செய்வதில்லை.

> "ஏரினு நன்றா லெருவிடுதல் கட்டபின்
> னீரினு நன்றதன் காப்பு."

என்ற திருக்குறளுரையில் பரிமேலழகரும் இவ்வைந்துவகைத் தொழிலைக்கூறினர். தமிழ்ப்புராணங்களில் நாட்டுவளங்கூறுமிடத்து மருதநிலவருணனையில் நெல்விளைவின் பெருக்கமும் விளைவிக்குந் தன்மையும் பலவாறாக எடுத்துக்கூறக் காண்கிறோம்.

---

* இவ்வியாசம், மதுரை டிஸ்திரிக்கட்டு அக்கரிக்கல்ஜரால் சபையாரால் திறக்கப்பட்ட கால் நடைக்காட்சி வருஷோத்சவக்கூட்டத்தில், டிஸ்டிரிக்கட்டு மாஜிஸ்டிரேட் கனம்-பிரையண்ட், எம். ஏ., ஐ. சி. எஸ்., துரையவர்கள் அக்கிராசனத்தின்கீழ் வாசிக்கப்பெற்றது.

பண்டைக்காலத்தில் கால இயல்பாலும் நிலவளத்தாலும் உழைப்புவகையாலும் இத்தானியம் மிக வியக்கத்தக்கவாறு நம் நாட்டில் விளைந்து வந்தது. புராணங்களில் நெல் கரும்பைப்போலிருந்ததென்பர். "நெற்கரும்பெனக் கரும்பெலா நெடுங்கமுகென்ன" எனவும், "கரும்பல்ல நெல்லென்ன" எனவும் வருவனவாம். இதுமட்டோ! சங்கநூல்களில் ஒன்றாகிய மதுரைக்காஞ்சியில் (247) "களிறுமாய்க்குங்கதிர்க் கழனி" என்று கூறுவர். யானைகள் நடுவேவந்தால் அவை மறையும்படி யானையுயரத்தினும் மிக்குயர்ந்துள்ள நெற்பயிரையுடைய வயல் என்பது இதன்பொருள். இவ்வாறு சிறப்புறப் பரிபாலிக்கப்பட்டு வந்த இந்தத்தானியத்தின் பெருமையோ கடவுளோடொக்கக் கூறத்தக்கது. புறநானூறு (186)-வது கவியில், "நெல்லுமுயிரன்றே நீருமுயிரன்றே" என்றவிடத்து, "உயிரையாக்குவன நெல்லும் நீரும்" என்பர் நச்சினார்க்கினியர். இவ்வாறு நம்முன்னோர்களாற் புகழ்ந்து போற்றப்பட்ட நெல் விவசாயத்தைப்பற்றி நன்றாக ஆராய்ந்து நாளுக்குநாள் அபிவிர்த்தியாகச் செய்வது தேசக்ஷேமத்திற்கு இன்றியமையாததென்பது எல்லாரும் ஒப்புக்கொள்ளவேண்டிய விஷயமேயாம்.

நெல்வகை:—நம் நாடே நெல்விளைவில் பிரசித்திபெற்றதாயினும் வகைகள் அதிகப்பட்டிருக்கவில்லை. இவ்வுலகத்தில் தற்போது 1400-வகை நெல் இருப்பதாக விவசாயமுறை நூல்களிற்றேர்ந்த பண்டிதர்கள் எழுதியிருக்கிறார்கள். இலங்கைத்தீவில் 160-வகையும் ஜப்பானில் 580-வகையும் இருக்கின்றனவாம். நம் இராஜதானியில் எங்காவது ஓரிடத்தில் எல்லாவகை நெல்களையும் சேர்த்துவைத்து அந்தந்த நெல்லினையும் முறைகளையும் எழுதி வெளியிட்டால் மிகவும் அனுகூலமாயிருக்கும். தஞ்சைஜில்லா விவசாயசங்கத்தார் நம் சென்னை ராஜதானியிற் கிடைத்த 163-வகை நெல்சேர்த்து வைத்திருப்பதாகத் தெரிகிறது. ரோமபுரிப் பொருட்காட்சிச்சாலையில் பலதேயங்களிலிருந்து தருவித்த 347-வகைநெல் இருப்பதாக அறிகிறோம்.

பெயர்வகை.—இதன்பெயர் பெரும்பாலும் காரணம்பற்றிவந்தனவேயாம். சிறுபான்மை இடுகுறியாகவுமிருக்கின்றன. பெயர்கள் சிலவருமாறு.

குறுவை.

அறுபதாங்குறுவை
கருங்குறுவை
செங்குறுவை
வாற்குறுவை
கோணக்குறுவை
மொட்டைக்குறுவை
அன்னதானக்குறுவை

கார்.

செங்கார்
கருங்கார்
மணற்கார்
கருத்தக்கார்
சண்டிக்கார்
சிறுமணியன்
மிளகி
பெருநெல்
செம்பாளை
குத்தாளை
காட்டுக்குத்தாளை

சம்பா.

வெற்றிலைச்சம்பா
பக்கிரிச்சம்பா
சிவப்புச்சம்பா
கம்பன்சம்பா
வாசனைச்சம்பா
மல்லிச்சம்பா
சின்னச்சம்பா
கிச்சிலிச்சம்பா
ஈர்க்கஞ்சம்பா
சீரகச்சம்பா
கட்டைச்சம்பா
முத்துச்சம்பா
பனிக்காட்டுச்சம்பா
கொத்துமல்லிச்சம்பா
பொன்கம்பிச்சம்பா
கருடன்சம்பா
மிளகுசம்பா
சடைச்சம்பா
கைவிரிச்சம்பா
தங்கச்சம்பா
வாடஞ்சம்பா

முதலிய பலபெயருண்டு.

**நிலம்:**—நெல்விளைவுக்குரிய நிலம் நீர்வளமிக்க மருதநிலமேயென்பது நம் முன்னோர்கொள்கை. தற்கால அனுபவத்திலே இன்ன நிலந்தான் நெற்பயிருக்கு ஏற்றதென்று ஒரு வரையறை செய்யக்கூ

டாததாயிருக்கிறது. எல்லா நிலங்களிலும் நெல் சாகுபடியாகின்றது. ஜலமும் உரமும் இருந்தாற்போதும். களரிலும் விளைவிக்கலாம். கல் நிறைந்த தரையிலும் விளைவிக்கலாம். நெற்பயிரின்வேர் வெகுநுட்பமானது. ஆதலால் அவ்வேர் மண்ணுக்குள் தாராளமாகப்பட நும்படி மண் நயமாயிருக்கவேண்டும். அஃதாவது இளக்கமுள்ளதாகவேண்டும். கடினப்பட்டிருந்தால் வேர் அதனையூடுருவிச் செல்லாதாகையால் வளர்ச்சியும் பலனுங்குறையும். குறுவை சண்டிக்கார் சடைச்சம்பா முதலியன முத்துப்பேட்டை வகையராவிடங்களில் களரான நிலத்தில் நன்றாகவிளைகின்றன. நம் மதுரை ஜில்லாவின் பலபாகங்களில் களரானநிலத்தில் வெள்ளைக்கட்டை, உவருண்டான் முதலியவகை நெல்விளைகின்றன. "உவருண்டான்" என்றபெயரே அது உவர்நிலத்தில் விளைவதென்பதைக் காட்டுகின்றதல்லவா? "எந்நாளு முவர்நிலத்தி னென்முளைவித் திடினும்விளைவெய்திடாது" என்பார் வில்லிபுத்தூரார். இவர்விளைவெய்திடாதென்றது சம்பாமுதலிய விலையுயர்ந்த நெல்லைக்குறிப்பிடுங்காற் பொருந்துமேயன்றி உவருண்டான் முதலிய நெல்லைக்குறிப்பிட்டால் பொருத்தமுறாது.

மழை:—"மழையின்றி மாநிலத்தார்க்கில்லை" என்றபடி நெற்பயிருக்கு மழையின் உதவியே முக்கிய ஆதாரம். மற்றப்பயிர்கள் எல்லாவற்றினும் நெற்பயிருக்கு ஜலம் அதிகம்வேண்டும். ஆனதுபற்றியே கிணற்றிறைவைப்புன்செய்களில் பெரும்பாலும் நெல் சாகுபடி செய்யப்படுவதில்லை. காவிரி தாமிரபர்ணிபோன்ற ஜீவநதிப் பாய்ச்சலுள்ளவிடங்களில் தான் நெல்விளைவு அதிகம். பல இடங்களில் மழைகாலத்துவரும் ஜலத்தைக் குளங்களிற்கட்டிவைத்து நீர்பாய்ச்சி விளைவிக்கப்படுகிறது. மழை அதிகமாகப்பெய்கிற மலைப்புறநாடுகளிலோ புன்செய்ப்பயிராகவே நெல்விளைகிறது. மலையாளம் இலாகா பாலக்காடுமுதலிய இடங்களிலும் இமயமலைச்சாரற் பிரதேசங்களிலும் நெல்லை விதைத்துவிட்டால் பின்பு நீர்பாய்ச்சவேண்டுமென்ற சங்கடமில்லாமல் மழையின் உதவியால் தானே விளைந்துவிடுகிறது. இவ்விடங்களில் உழவர்கட்குச் சங்கடமேயில்லை. நெல்விளைவுக்கு ஆதாரமாகிய மழையே இதன்கெடுதிக்கும் ஆதாரமாகும். விதைத்தவுடன் மழைபெய்தால் விதை நன்றாய்முளையாது. பூ உண்

டாகும் சமயம் மழைபெய்தால் தாது ஜலத்திற்போய்விடும். நெல் மணி திரட்சியின்றிப் பதரேயதிகப்படும். கதிரறுக்கும்போது மழை பெய்தால் நெல் உதிர்ந்துபோகும். அறுவடைக்கு ஆளுங்கிடையாது; களம் சேர்க்கக் கஷ்டமதிகம். ஆகவே வேண்டும்போது பெய்தும் வேண்டாக்கால் பெய்யாமலும் மலையாளம் இமயமலை இப்பக்கங்களில் மழையே நெற்பயிரை ரக்ஷிக்கவேண்டியிருக்கிறது. இதனாலன்றோ, "கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே - யெடுப்பதூஉ மெல்லா மழை" என்றருளினார் செந்நாப்போதார். இக்குறளில், "கெடுப்பதூஉம்" என்பதற்குப் பரிமேலழகர், "பூமியின்கண் வாழ்வாரைப் பெய்யாது நின்று கெடுப்பதூஉம்" எனப்பொருள்கூறியுள்ளார். ஆனால் வேண்டும்போது பெய்தும் வேண்டாக்கால் பெய்யாமலும் நின்று உலகை ரட்சிக்கவேண்டியிருக்கிறது மழையேயாதலின், "கெடுப்பதூஉம்" எனற்கு "பெய்யாது நின்றும், அதிகமாகப் பெய்தும் கெடுப்பதூஉம்" எனப்பொருள் கூறுதலே சிறப்புடைத்தாம்.

பட்டம்:—ஒவ்வொருமாகாணங்களிலும் மழைபெய்யும் பருவ காலத்துக்கேற்ப இன்னகாலந்தான் நெல்விதைப்புக்கு ஏற்றதென்று கொள்வார்கள். நம் நாடுகளில் ஆனி, ஆடி மாதங்களே முதற்றரமான பட்டமாம். ஆவணி மாதம் இரண்டாந்தரமே. ஆனி, ஆடி மாதங்களில் நன்றாக உழுது புழுதியாக்கி விதைத்துவிட்டால் ஒரு மாதம்வரை மழையில்லாதிருந்து பிந்திப்பெய்தாலும் முன்விதைத்த நெல் அனைத்து முளைத்துவிடும். காலம் தவறிய விதைப்புப் பயன்படாது. இதனாற்றான், "பட்டம் தப்பினால் நட்டம்" என்று பழமொழி வழங்குவதாயிற்று. பயிருக்கு உழவு, உரம், நீர் இவைகளைப் போலவே பட்டமும் அவசியம் வேண்டியதொன்றேயாம். இதன் அருமையுணர்ந்த ஔவையாரென்ற மூதாட்டியார் "பருவத்தே பயிர்செய்" என்றருளினார்.

உழவு:—கிருஷித்தொழிலில் முதன்மையானது உழவு தொழிலேயாம். சரியானபடி உழவுசெய்துள்ள நிலம் அதிகப்பலனைக்கொடுக்கும். அநேக இடங்களில் 4-அங்குல ஆழம் உழுதால் போதுமென்று நினைக்கிறார்கள். இது பிசகு. கடப்பை, கர்நூல், பல்லாரி,

மைசூர் முதலிய நாடுகளில் குறைந்தது ஆறு அங்குலம்வரை உழுகிறார்கள். இத்தலிதேயத்திலோ 12-அங்குலம்வரை உழுகிறார்கள். நம்முன்னோர்கள் ஆழமாக உழவேண்டுமென்று நன்கு தெரிந்திருப்பதை, "அகல உழுவதை ஆழ உழு" என்ற பழமொழியால் நன்கு தெரியலாம். ஆழமாக உழுதால் மண் குழம்பாயிளகியிருக்கும். இத்துடன் எருமுதலிய உரமும் கலந்திருக்குமானால் மிகவும் சிலாக்கியமே. கடினமான மண் ஆயினும் வருஷாவருஷம் தழையும் உழவும் அதிகப்பட்டால் மிருதுவாகும். மண்மிருதுவானால் நெற்பயிரின் வேர் தாராளமாகச் செல்லும். நீர்வற்றிக்காய்ந்த காலத்தும் காய்ச்சலைத் தாங்கும்படி அடியிலுள்ள ஈரம் பயிருக்கு உணவாகும். ஆழமாக உழாதநிலத்தில் அடிமண் கடினமாயிருப்பதால் பயிரின் வேர் அதிக ஆழத்திற்போகாது. அப்போது கொஞ்சம் நீர் குறைந்து காய்ச்சல் ஏற்பட்டால் சீக்கிரத்திற் பயிர்கருகிப்போகும். நன்செய் நிலத்திற்கு 8-உழவுவேண்டுமென்கிறார்கள். நன்செய்நிலம் சேறாகியிருப்பதால் உழவுக்கு எருமைக்கடாக்களே ஏற்றனவென்பார்கள். எருதுகள் பலமுள்ளவையானால் மட்டுமே இவ்வுழவு செவ்வையாக நடக்கும். தூங்கலான மாடுகளைக்கொண்டு உழுவது பயன்படாது. வியவசாயிகட்கு உழவுகாலத்திற்முன் சிரத்தையதிகம் வேண்டும். இதுபற்றியல்லவா, "உழுகிறகாலத்தில் ஊர்வழிபோனவன் அறுக்கிற காலத்தில் ஆள் தேடிப் பயனில்லை"என்று பழமொழி வழங்குவதாயிற்று. நம்மை ஆதரித்துவரும் காருண்யகவர்ன்மெண்டாரவர்கள் ஏற்படுத்திய அக்கரிக்கல்ஜ்ஜரல் (Agricultural) முறையை நன்றாய் அறிந்து ஆங்கிலேயர் கண்டுபிடித்த புதிய ஏர்களால் உழுவது அதிகசிரமமின்றிப் பயனுதவும்.

உரம்:—நிலத்தின் சத்தினாலேயே நெல்விளைகின்றதால் ஒருதரம் விளைந்தபின்பு அந்நிலத்தின்சத்து குறைகின்றது. ஆனதால் மறுதரம் விளைவதற்கு அந்நிலத்திற் சத்துண்டாகும்படி உரம்போடவேண்டியது மிகஅவசியம். நம் நாட்டிற் சாதாரணமாக ஆட்டெரு மாட்டெரு கொழிஞ்சி ஆவிரை முதலிய தழைகள் சாம்பல் முதலியவற்றை யுபயோகப்படுத்துகிறோம். இவைகளிலெல்லாம் எருவே மிகச்சிறந்த உரமாகும். மாட்டுத்தொழுவங்களினருகே காலேந்து

அடி பள்ளந்தோண்டித் தினமும் விழுகிற சாணி குப்பை கூளம் சாம்பல் முதலிய கழிவுபதார்த்தங்களை அப்பள்ளத்தில் போட்டுவர வேண்டும். இவ்வாறு பலமாதவரை சேர்ந்தபின் வேண்டும்போது நன்செய்க்கு உரமாகப்போட அதனுற்சத்து அதிகமுண்டு. ஆடு கிடைமறிப்பது அதன் மூத்திரத்தின் உபயோகத்தைக்கருதியே. ஆட்டு எருவைவிட அதன் மூத்திரமே உபயோகமதிகம். மழைவருவதற்கு முந்தியே ஆடு கிடைமறிக்கவேண்டும். மழை வந்துவிட்டால் தரை சேறாகிவிடும். அப்போது கிடைமறித்தால் முடியாது. உழவுக்குப்பின் கொழிஞ்சிமுதலிய பலவகைத் தழைகளையும் வயலில் போட்டு மிதித்துவைக்கவேண்டும். இவைகளெல்லாம் மண்ணின்கடினத்தை நீக்கி இளகச்செய்கின்றதுடன் மண்ணுக்குச்சத்தும் கொடுக்கின்றன. எலும்புத்தூள் பிண்ணாக்கு முதலியனவும் சிரேஷ்டமே.

ஜப்பானியர் சுண்ணாம்பை உரமாக உபயோகிப்பதுண்டு. இது மிகவுங் கெடுதியைத் தரும். நாளடைவில் மண்ணையிறுகச்செய்து விளைவைக் குறைத்துவிடும். நம் நாட்டிலிந்த வழக்கமில்லாததுடன் தழை எருமுதலியவைகளையே உபயோகப்படுத்துவது ஆதிமுதல் வழக்கம். மாங்கனீஸ் சத்து நெல்விளைவை ஜப்பானியர் மிகவிருத்தி செய்கின்றார்கள். சீமையில் வண்ணான் சலவைசெய்த கழிவுபதார்த்தங்களை இந்தச்சத்துநெல்லுக்கு உரமாகப்போடுகிறார்கள். இந்த நூதன உரம் மாங்கனீஸ் ஸல்பேட் மாங்கனீஸ் குளோரைட் இருவிதமாகும். இன்னும் அவித்த எலும்பு, எலும்புப்பொடி, எலும்புச் சாம்பல் பொடாஸியம் பாஸ்பேட் முதலியபலவும் அவர்கள் உபயோகிக்கிறார்கள்.

பர்மா ஜப்பான் இடங்களில் உரம்போடுகிறமுறையை நாம் கையாளுவதேயில்லை. அவர்கள் போடும் உரத்தின் பலத்தாற்றான் புட்டரிசி நெல் என்னும் மிகச்சத்துள்ள நெல் அவ்விடங்களில் விளைகின்றது. அந்த நெல்லரிசி மிகுந்த சத்தைக்கொடுக்கிறது. சென்னையில் நுதுவானபெண்களுக்கு இதைவேகவைத்துக்கொடுத்தால் தேகபலம் அதிகப்படும் என்று பெரும்பாலும் உபயோகிக்கிறார்கள். நம் நாட்டில் உழுந்தைத்திரித்து மாவாக்கிக் களிக்கிண்டிப்போடுவார்கள்.

உரம்போடுவதின் நன்மையறிந்தல்லவா திருவள்ளுவர் "ஏரினும் நன்றால் எருவிடுதல்" என்று கூறியருளினர்.

விதையும் விதைப்பும்:—"விரையொன்றுபோடச் சுரையொன்று முளைக்குமா" என்பது பழமொழி. இதனால் விதை எவ்வளவு சிறந்ததாக இருக்கிறதோ அதற்குத்தக்கபடியே பலனுண்டு. நம் நாட்டில் முதலில்வரும் தலையடி நெல்லையே விதைக்கு எடுத்துக்காய வைப்பது சகசம். ஆயினும் இவ்விஷயமாகக் கவனிக்கவேண்டியன பலவிஷயமுண்டு. நல்ல நெல்லுடன் மட்டைநெல் கலந்துவருவது நிதர்சனமே. இதனால் விலைகுறைந்து நஷ்டமுண்டாகும். இதற்குக் காரணம் நெல்லடிக்குங் களங்கள் விசாலமில்லாததால் பலவகைநெல் ஒன்றோடொன்று கலந்துவிடும். அவ்விதையை விதைப்பதால் கலந்தேவளர்கின்றது. தவிரவும் நல்ல நெல் ஆறுமாதத்தில் விளையும். மட்டைநெல்களே மூன்றுமாதமுதல் கதிராகும். இப்படியான கதிர்கள் உதிர்ந்து பூமியில் தங்கி அடுத்தவருஷம் நல்ல நெல்லுடன்கூட முளைக்கும். இக்கெடுதியை நீக்கவே முந்தி முதிர்ந்த கதிர்களைப்பிடுங்கிவிடுவதுண்டு. இதற்கு மட்டைபொறுக்கல் என்றுபெயர். சில ஜில்லாக்களில் நல்ல நெற்கதிரை விதைக்காகத்தனியே பிடுங்கியெடுத்து வேண்டுமளவு சேர்த்துவைத்து விதைக்கு உபயோகப்படுத்துவார்கள். இப்படிச் சிலவருஷம் செய்தால் மட்டைகலப்பது தொலையும். இவ்வாறு செய்வது முதலிரண்டு மூன்று வருஷங்கட்குச் சிரமமேயாயினும் பின்பு இதனால் லாபம் அதிகமாம். விலையதிகமாக விற்கலாம். உணவிற்கும் பொருத்தமாம். இவ்வாறு மட்டை நீக்கினும் விதைநெல் மிகமுற்றாமல் கொஞ்சம் பசுங்காயாயிருக்கும்போதே அறுத்து இரண்டு மூன்று காய்ச்சல்போட்டும் பதமாக எடுத்துவைக்கவேண்டும். காய்ச்சல்போடுவதில் கவனம் அதிகம் வேண்டும். உமியைப்பிரித்துப்பார்த்தால் அரிசியின் ஒருபக்கம் பால் சுருங்கியிருக்கவேண்டும். இதற்குப்பால் ஒதுங்கும் பக்குவமென்று பெயர். அதிகமாய்க்காய்ந்தால் அரிசி வெடிப்பாகி முளைக்கும் சத்தியைப்பெறாது. ஈரமாயிருந்தால் மடித்துப்போம். இவ்வாறு மிகக்காயாமலும் ஈரமில்லாமலும் பக்குவம்பார்த்து எடுத்துக் காற்றோட்டமுள்ள இடத்தில் அந்துவிழாதபடி பந்தோபஸ்துச்செய்யவேண்டும்.

"ஆயிரநெல்லுக்கோரந்து":— என்றபடி அந்துவிழுமேயானால் நெல் ஒன்றுக்குமுதவாதுபோகும். நெல்லுடன் வேப்பிலையையும் புங்க இலையையும் கலந்துவைத்தால் அந்துவராது. நெல்லைக் கோட்டையின்மேல் ஒரு கலயத்தில் ஜலம்விட்டுவைத்தால் அந்துமுழுதும் அந்த ஜலத்திலவிழுந்து மடியும். இவ்வாறு பாதுகாத்துவரவேண்டும். அதிகக்கொழுமையான நிலத்திலும் கொழுமையற்ற நிலத்திலும் விளையும் நெல் விதைக்குதவாதென்றும் நடுத்தரமான நிலத்தில்விளையும் நெல்லே விதைக்குபயோகமானதென்றும் ஜப்பானியர் கருதுகின்றனர்.

விதையைக் கவனிப்பதுபோலவே விதைப்பைப்பற்றிக்கவனிக்கவேண்டியனவும் பலவுண்டு. மிகநெருக்கமில்லாமலும் மிக இடைவெளியின்றியும் விதைக்கவேண்டும். விதையை நனைத்து முளைகிளம்பச்செய்து விதைப்பதுமுண்டு. முளைதோன்றியவுடன் விதைத்துவிடவேண்டும். முளைசற்று அதிகம் வெளிபபட்டால் எடுப்பதிலும் விதைப்பதிலும் முனைமுறிவுபடும். நம் நாடுகளில் கையினாலே விதைப்பதைத்தவிர வேறுகருவிகளால் விதைக்கும் வழக்கத்தைக் காணவில்லை. பெரும்பாலும் நெருக்கமாகவே விதைக்கின்றார்கள். நந்தியா, கர்நூல் முதலியவிடங்களில் "கோர்று" என்னுமொருவித கலப்பையால் சால்சாலாக விதைக்கிறார்கள். ஒரு ஏக்கராவுக்கு 20 படி விதையே போதுமானதாகவிருக்கிறது. கர்நூலில் 6-அங்குலம் சந்துவிட்டு விதைக்கிறார்கள். சீனாவிலோ செடி 1-க்கு 6-அங்குல தூரமும் வரிசை 1-க்கு 13 முதல் 18-அங்குல தூரமுமிருக்கும். செங்கற்பட்டில் இக்கலப்பையால் 4-அங்குலதூரத்தில் விதையிடும்படி செய்துவைத்திருக்கிறார்கள். நிலத்தை மிகவும் கொழுமைப்படுத்தும் அமெரிக்காவிலோ செடி 1-க்கு 5-அங்குலதூரமும் வரிசை 1-க்கு 18-அங்குல தூரமுமிருக்கும்படி விதைக்கிறார்கள். நிலத்தின் கொழுமைக்குத்தக்கபடி செடிகள் தூரமாக இருப்பதைக்கவனிக்கவேண்டும். சீனா, ஜப்பான்தேசங்களில் விதையை உப்பு ஜலத்திற் கொட்டி மிதக்கிறவைகளை யெடுத்துவிட்டு அமிழ்ந்த நெல்லையே விதைப்பது எப்போதும் வழக்கம். ஒரு பக்காப்படி ஜலத்துக்கு 10-பலம் உப்புவீதங்கலந்து வேண்டிய அளவு விதையைப்போட்டு

விதைப்பதைத் தள்ளவேண்டுமென்று ரசாயனசாஸ்திரமூலமாகக் கண்டிருக்கிறார்கள். ஜப்பானியர் இவ்வாறு செய்யாமல் விதைப்பதேயில்லை. மேலும் தாய்ச்செடியில் விளைந்தநெல் விதை 1-க்கு 17-கதிர்கள் தோன்றும்படி விளைத்ததென்றும், விளைக்கதிரில்வந்த நடுராசிநெல்விதை 1-க்கு 21-கதிர் தோன்றும்படி விளைத்ததாகவும், கணுக்களில் தோன்றியநெல் விதைக்கு உதவாதென்றும் பதினாறுவருஷம் பரீட்சைசெய்து கண்டிருப்பதாக ஜப்பானியர் கூறுகின்றனர். நம் நாட்டிலோ இவ்வாறான பரீட்சையாராய்ச்சியே கிடையாது. நாமும் நம்நாட்டின் சீதோஷ்ணமுதலியவற்றைக் கவனித்து வியவசாய விஷயமான ஆராய்ச்சியும் பரீட்சையும் செய்யவேண்டியது மிகமுக்கியம். எந்த வர்த்தகமும் வியவசாயத்துக்கு ஈடாகாது. வர்த்தகத்தில் ஒன்றுக்குக்கால் அரையதிகம் கிடைப்பது துர்லபம். அதிகமாகக்கண்டால் ஒன்றுக்கு இரண்டுபங்குகூடக் கிடையாது. "ஒன்றிரண்டாம் வாணிகமில்" என்பதுநம்மவர் கொள்கை. நெல் வியவசாயத்திலோ இவ்விஷயம் மிகவும் வியக்கத்தக்கதாயிருக்கிறது. அமெரிக்காவில் ஒரு நெற்கதிரில் 160-நெல் இருக்கின்றன. எந்தத்தொழிலிலும் ஒன்றுக்கு 160-பங்கு இலாபம் காண்பது அரிதேயென்று சொல்லவும் வேண்டுமோ?

**நாற்றும் நடுகையும்:**—கைவிதைப்பாக விதைத்துப் பயிராக்குவதிலும் நாற்றுவளர்த்து நடுவதே சிலாக்கியமென்பது எல்லாருக்குந் தெரியும். 10-ஏக்கர் நிலம் நடுகைபோடுவதற்கு ஒரு ஏக்கர்நிலம் நாற்றுப்பாவுவது கோதாவரி முதலிய வடதேசவழக்கம். மதுரை திருநெல்வேலி முதலிய இடங்களில் 15-ஏக்கர் வரையில் நட ஒருஏக்கரே நாற்றுப்பாவுகிறார்கள். நாற்றங்கால்வயலை நன்றாக உழுது கருஞ்சேறாக்கியே நெல்லைநனைத்து வைத்த தொண்ணூறுநாழிகைக்குமேல் முளையதிகம் தோன்றுமுன் விதைக்கவேண்டும். நாற்றங்கால் பகலில் நீர்வடிந்து காய்ந்து இரவில் நீர் நிறைந்து இருத்தல் நலம். ஆஸ்திரேலியாவில் ஏக்கராவுக்கு 3-படி விதையும் சீனதேசத்தில் 4-படிவிதையும் அமெரிக்காவில் 10-படிவிதையும் விதைக்கிறார்கள். திருநெல்வேலி முதலிய தென்பாகங்களில் ஒரு ஏக்கருக்கு அறுபதுபடி விதைவரை விதைக்கிறார்கள். ஆனால் நன்றாகத்தான் விளைகிறது.

ஆயினும் சாஸ்திரிலம் வைத்திருப்பவர்கள் ஒரு ஏக்கர் நிலமாவது ஒவ்வொருபோகத்திலும் பரீட்சைக்காக வைத்து விதைகுறைவாகவும்மற்றும் பலவகையாகவும் பரீட்சித்துப்பார்க்கவேண்டும். நாற்றங்காலில் அடர்த்தியாகாமல் கலக்கமாகவே விதைக்கவேண்டும். அப்போதுதான் நாற்றுப் பலமாயிருக்கும். நெருங்கிவந்தால் ஊசிபோலாகும். நெல்வகைக்குத் தக்கபடி விதைத்த நாற்பதுநாள் முதல் அறுபது நாளைக்குள் நாற்றைப்பிடுங்கி நடவேண்டும். நம் நாட்டில் பலநெற்பயிரை ஒன்றாகச்சேர்த்து நடுகிறார்கள். இப்படி நடுவதின் காரணம் ஒரு செடிபோனாலும் ஒருசெடி முளைக்குமென்பதே. இது தக்கதன்று. பலசெடிகள் சேர்ந்து வளர்வதில் வேர்நெருங்கி ஊசிபோல வருவதால் பலன் குறையும். தனித்தனி நாற்றைநடுவதே சிலாக்கியம். இப்படிச்செய்தால் பயிர்விரலளவுபருமனாகும். கிளைகள் அதிகமாகும். கதிர் நன்றாயிருக்கும். நெல்லும் திரட்சியாகும். இப்படி நடுமுன்னமே பரம்படிப்பதும்மிக நல்லது. பரம்படிப்பதால் நிலம் சமதளப்பட்டு எங்கும் ஓரே அளவாக நீர்நிற்கும். இதனாற்றான் "பரம்படியாதநெல்வெள்ளாமை பாழ்வெள்ளாமை" என்பார்கள்.

நீர்பாய்ச்சல்:—நடுகை போட்டபின்பு பகலில் காயவிட்டு இரவில் நீர் நிரப்பிவரவேண்டும். களை பிடுங்கியபின்பு நமது நாடுகளில் இரண்டு அங்குல அளவு நீர் கட்டிவரவேண்டியது. அமெரிக்கர்கள் 6 அங்குலம் ஜலம்நிறைப்பர். நமக்கு அவ்வளவு வேண்டியதில்லையாயினும் இரண்டு அங்குலத்துக்காவது எப்போதும் நீர் இருந்துவரவேண்டும். கதிர்தோன்றிப் பால்பிடிக்கும்போது கட்டாயம் நீர் கட்டவேண்டும். அப்போது காய்ந்தால் சாவியாகும். பால் பிடித்தபின்பு காய்ச்சல் வந்தாலும் தோஷமில்லை. மற்றப்பயிர்களைவிட நெல்லுக்கு ஜலம் அதிகம் வேண்டுமென்பதே நம்மவர் கொள்கை. ஔவையார் அரசனை வாழ்த்தவேண்டியபோது "வரம்புயர" என்று வாழ்த்தி, வரம்புயர நீருயரும், நீருயர நெல்லுயரும், நெல்லுயரக் குடியுயரும், குடியுயரக் கோனுயரும், கோனுயரக் கோமான் உயர்வான், ஆதலால் வரம்புயர என்றதே ராஜவாழ்த்தாகும் என்றுபொருள்கூறினாராம். இதனால் வரம்பு செவ்வையாகப்போட்டு நீர் கட்டிவரவேண்டுமென்பது தொன்றுதொட்டு நமது கொள்கை. கால்

வாய், குளம் முதலிய பாசனங்களில் இரண்டு அங்குலநீர் போதுமானதாயினும் கிணற்றிறவைகளில் சற்று அதிகமாகவே நீர் கட்டவேண்டும். கிணற்றுநீர்ப் பாசனங்களில் உரம் அதிகமாகப்போடவேண்டும். ஆற்றுநீர்ப் பாசனங்களில் புதுவெள்ளத்தில் வண்டல்கலந்துவரும். காவிரிப்பாசனத்தில் புதுவெள்ளம் வந்தபோது வயல் நிறையக்கட்டிவைத்து வடித்துவிட்டால் வயலில் வண்டல்படிந்துறைவது தெரியும். இஃதென்ன ஆச்சரியம்! நீர்கலங்கி மண்கலந்துவருவதே நிதர்சனமாகும். கதிரறுப்புக்கு இரண்டுவாரத்துக்கு முன் முதல் அறுப்புவரை நீர்கட்டாமல் நிலத்தைக் காயவைக்கவேண்டும். காய்ந்தால்தான் ஜனங்கள்நின்று அறுவடை வேலைநடத்த அனுகூலப்படும்.

களையெடுப்பு:—"களை பிடுங்காதபயிர் காற்பயிர்" என்பது பழமொழி. நாற்றுநட்டு 15-நாளைக்குமேல் முதற்றரம் களையெடுக்கவேண்டும். அதன்பின் 30-நாளைக்குமேல் மறுபடி இரண்டாந்தரம் களையெடுக்கவேண்டும். சிலவிடங்களில் மூன்றுந்தரமும் களையெடுப்பதுண்டு. வயலிற்பாயும் நீருடன் களைக்குரிய விதைகள் வந்து சேர்ந்தும், பட்சிகளாலும் மற்றும் பலகாரணங்களாலும் களைச்செடிகள் முளைக்கின்றன. களையைப் பிடுங்காதுவிட்டால் நெற்பயிருக்குரிய நீரையும் உரத்தையும், களைப்பயிர் சாப்பிடுவதால், நெல்லுக்குவேண்டிய நீரும் உரமுங்குறையும். ஒருவனுக்குப்போட்ட உணவை வேறு ஒருவனுஞ்சேர்ந்து சாப்பிட்டால் ஆகாரபோஷணை குறைவது இயல்புதானே. இதுமட்டுமல்ல நெல்வேர் செல்லத்தக்க இடங்களில் களைவேர் ஊடுருவிப்போவதால் நெல்வேர் தாராளமாகச்செல்ல இடமில்லாதுபோகும். இவ்வகைக்காரணங்களால் களை வளரவளரக் களைவதே சிலாக்கியமாகும். நமக்குணவாகும் நெல் முதலிய தானியப்பயிர்கட்குச் சனியன்போலவரும் இச்செடிகட்கு நம் முதியோர்கள் களையென்று பெயரிட்டது மிக அருமையாயிருக்கிறது. களையென்றால் நீக்கிவிடு, பிடுங்கு என்றுபொருளாம். பிடுங்கியெறியவேண்டிய இச்செடிகட்கு இப்பெயர்வைத்த நம்மவர் புத்திகூர்மை வியக்கத்தக்கதொன்றல்லவா? தமிழ்ப்புராணங்களில் களையெடுப்பைப்பற்றி மிக விஸ்தாரமாகவும் வேடிக்கையாகவும் சொல்

லியிருக்கிறார்கள். அவ்விடங்களில் படிக்கப்படிக்க மிக இனிமை தோன்றும். கொட்டைக்கிராந்தி, நீர்முள்ளி, பிரமதண்டி, ஆரை, நாய்க்கடுகு, கோரை, நீர்மேல் நெருப்பு, கொடிப்பாசி, வேப்பம்பாசி, துளிர்ப்பாசி முதலியன வயல்களிற்றோன்றுங் களைகளாம்.

கதிரறுப்பு:—கதிர் நெல்லில் பால்பிடித்து முற்ற பயிர் நிலை கொள்ளாது சாயும். அறுக்கும்படியான காலத்தில் மிகவும் சாக்கிரதைவேண்டும் தாமதப்பட்டால் நஷ்டமாம். அமெரிக்கரும் ஐரோப்பியரும் யந்திரங்களைக்கொண்டே அறுவடைசெய்கிறார்கள். அவ்வாறு நாம் இங்கே செய்யமுடியாது. அந்நாடுகளில் ஒருவயல் சுமார் 5-ஏக்கர்முதல் 20-ஏக்கர்வரையிருக்கும். இதனாலும், புழுதியாகவே அவர்கள் விதைப்பதாலும் அவர்கட்கு அவ்வாறு செய்ய இயலும். சிறுவயலும் சேற்றுப்பயிருமாகவிருக்கும் நமது நாடுகளில் ஜனங்களே அறுவடை செய்யவேண்டும். இப்படி அறுக்கும் அரிவாளுக்குப் பன்னரிவாள் என்று பெயர். இப்பக்கங்களில் இந்த அரிவாள் ஒருஅடி நீளம் வளைவாயிருக்கிறது. அநேகவிடங்களில் இரண்டு அடிநீளமுண்டு. நீளம் அதிகப்பட்டிருப்பதே நல்லது. மிகவும் கூர்மையாக இருக்கவேண்டும். வடதேசங்களில் கதிரறுப்பவர்கள் அரிவாளுடன் அதைக்கூர்மைப்படுத்தும்படி தீட்டத்தக்க சாணைக்கல்லும் எப்போதுங்கொண்டுபோய் அப்போதப்போது தீட்டிக்கொள்கிறார்களாம். இப்பக்கங்களில், அப்பழக்கமில்லை. கூர்மையாக விருப்பதற்கேற்ப அறுவடை சீக்கிரமாகும். ஆள்மானம் அதிகமாகாது. நம் நாட்டார்கள் அரிவாள் கூர்மையாகவும் நீளம் அதிகமாகவுமிருக்கும்படி சீர்திருத்தவேண்டியது முதன்மையானது.

களமும் நெல் சேர்ப்பதும்:—கதிர்களைக்கொண்டுவந்து சேர்த்து நெல் சேர்க்க இடம் விசாலமாக அமைக்கவேண்டும். நம்நாடுகளில் போதுமான இடம் களமாகவில்லை. கொஞ்ச இடத்தில் பலர் பலவகைநெற்கதிரைக் கொண்டுவந்துசேர்த்து வேலைநடத்துவதால் ஒரு சாதி நெல்லுடன் வேறுசாதி நெல் கலந்துவிடவும் பதர்போகும். தூற்றுதற்குப்போதுமான இடம் வாய்க்காமையால் ஒருவர்பொலி தூற்றுவதில் வரும் குப்பையும் பதரும் மற்றவர் பொலிநெல்லுடன் சேரும்படியாகவும் நேரிடுகிறது. பலஜாதிநெல் கலக்காமல் பாதுகாப்

பது குடித்தனத்தாருக்கு மிக நல்லது. விதைநெல்லில் இதுமிக அவசியம் கவனிக்கவேண்டும். மற்றநெல்லிலும் ஒரேஜாதியாயிருந்தால் விலையேறும். பலஜாதிகலந்தால் விலை குறையும். ஒவ்வொரு கிராமங்களிலும் போதுமானபடி நெல்லடிக்குங்களம் அமைத்துத் தரும்படி நமதுகருணை தங்கிய கவர்ன்மெண்டார் கவனிக்கவேண்டும். நாமும் அவர்களிடம் பிரார்த்திக்கவேண்டும். ஜமீந்தார்கள் பிரபுக்கள் தாங்களே தங்கள் நிலங்களில் களத்துக்குப்போதுமான இடம் விட்டு ஏற்பாடு செய்யவேண்டும். இன்னும்வேண்டிய வகைகளிலெல்லாம் ஊன்றியோசித்து வியவசாய முறைநூல்களை யங்கங்கே மாணக்கர்கள் கற்கும்படி நாமே ஏற்பாடு செய்யவேண்டும். நிலம் அதிகமுடையவர்கள் மிகவும் இந்த முறைகளையனுசரித்து வருவது அவசியம். நாம்வியவசாய விதிகளைக்கவனியாமலே வீட்டிலிருந்துகொண்டு பண்ணையாளர்கள் வேலைசெய்துகொடுப்பதைப் பெற்றுவந்தால் தக்கபடி லாபங்கிட்டுவதரிதாகும்.

## முடிவுரை.

இன்னும் ஆராய்ச்சிவகையாலும் அனுபவவகையாலும் பலவகையில் நெல் சாகுபடியை விருத்திபடுத்தவேண்டும். நிலம் அதிகமுள்ள மிராசுதார்களே இவ்விஷயத்தில் கவலையெடுத்துக்கொண்டு தங்கள் தங்கள் குடியானவர்களுக்குங் கற்பித்துவருவது உத்தமம். திருநெல்வேலிஜில்லா சிவகிரிஜமீனில் சூப்ரிண்டெண்டு வேலைபார்த்த மகா-ள-ள-ஸ்ரீ அ. ராமராவ் அவர்கள் இவ்விஷயத்தில் ஆய்ந்துஉழைத்து வியவசாயம் நடத்தியதில் 376-ஏக்கர் நிலத்தில் 1306-ம் பசலியில் 1694-கோட்டைநெல் விளைந்தது. (ஒரு கோட்டையென்பது பட்டணம் பக்காவுக்கு 126-படி) 1313-ம் பசலியில் 2222-கோட்டை விளைந்தது. 306-ம் பசலிமுதல் 313-ம் பசலிவரை விளைவு அதிகரித்தே வந்தது. 8-வருஷத்துக்குள் 528-கோட்டை அதிகம் விளைந்தது. இக்காட்சி நம் வியவசாயிகட்கு ஒரு பிரதமபாடசாலைபோலிருக்கின்றதல்லவா? ஜப்பான்தேசத்து நெற்பயிரில் சரிபாதி எடை வைக்கோலும் சரிபாதி எடை நெல்லுமிருக்கிறதாகவும், அமெரிக்காவில் இரண்டுபங்கு எடை வைக்கோலும் ஒருபங்கு எடை

நெல்லுமிருப்பதாகவும், கடப்பை திருநெல்வேலி முதலிய சில இடங்களில் 4-பங்கு எடை வைக்கோலும், ஒருபங்கு எடை நெல்லுமிருப்பதாகவும், தஞ்சைஜில்லாவில் எட்டுப்பங்கு வைக்கோலும், ஒருபங்கு நெல்லுமிருப்பதாகவும் மற்றும்பல அரியவிஷயங்களும் அக்கிரிகல்ஜ்ஜரல் இன்ஸ்பெக்டர் ஸ்ரீமத்-ஜி. இராஜகோபாலநாயுடு அவர்கள் தெரிவிக்கிறார்கள். தற்காலத்தில் அவர்கள் இவ்விஷயத்தில் மிகப்பாடுபட்டுத் தேர்ச்சிபெற்றுள்ளார்கள். நாமும் இவ்வாறே முயற்சிசெய்தால் மேன்மை அடைவது நிச்சயம். நாடெங்கும் வாழக்கேடொன்றுமில்லை. எல்லாம்வல்ல இறைவன் திருவருளைக்கொண்டு நமது டிஸ்டிரிக்கட்டு (Agricultural Association) என்னும் வியவசாயசங்கமானது நாளுக்குநாள் விருத்தியடைந்து நம் நாடே எல்லா நாடுகளினும் சிறந்த ஒப்பற்ற பலவளங்களும் ஒருங்கே நிறையப்பெற்ற ஒரு நாடாகுக.

முற்றிற்று.

---

இங்ஙனம்,

எம். கே. எம். அப்துல்காதிறு ராவுத்தர்,
Committee Member of the Madura
District Agricultural Association, Madura.

| | | | |
|---|---|---|---|
| ஆக மேற்காட்டிய விவரப்படி சந்தா வரவு ரூ ... | 63 | 0 | 0 |
| செந்தமிழ்ச் சந்தா வரவு ரூ ... | 40 | 4 | 0 |
| ஆபீஸ் அச்சுக்கூலி வரவு ரூ ... | 158 | 10 | 6 |
| பைண்டாபீசு வரவு ரூ ... | 6 | 4 | 0 |
| புஸ்தக விற்பனை வரவு ரூ ... | 50 | 13 | 0 |
| சங்கம் காலிமனை வாடகை வரவு ரூ | 20 | 0 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| போஸ்டேஜ் செலவு ரூ | 13—0—0 | | | |
| தந்திச்சார்ஜ் ரூ | 3—10—0 | | | |
| ஆக போஸ்டேஜ் தந்திச்செலவு ரூ ... | | 16 | 10 | 0 |
| நிலவரி செலுத்தியது ரூ ... | | 3 | 12 | 0 |
| சென்ற ஞூத்தில் நடந்தேறிய ஆங்கிலப் பரீக்ஷையில் மெற்றிக் வகுப்பில் 2-வது பரிசாகத் தேறிய R. M. அனந்தராமனுக்கு ரொக்கப்பரிசு ரூ | ...25—0—0 | | | |
| 1909ஞூ மேமீ நடந்தேறிய சங்க உற்சவச் செலவு ரூ | 183-13-11 | | | |
| ஆபீசு ஸ்டேஷனரிவகையறுவும் சில்லரைச் செலவும் ரூ | ...3—10—8 | | | |
| மணியார்டர் கமிஷன் செலவு ரூ... | 0—9—0 | | | |
| சங்கப்பதிப்பு திருப்பணிமாலை புஸ்தகத்திற்கு காப்பிரைட் ரிஜிஸ்டர் கட்டணம் ரூ | 2—0—0 | | | |
| ஆக மேற்காட்டிய விவரப்படி மிசலேனியஸ செலவு ரூ ... | | 215 | 1 | 7 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | பம்பாய் Gresham Publishing Co-க்கு Gardeners Assistant புஸ்தகத்திற்கு கிரயம்ரூ 52-க்கு இதுவரை செல்லாகியது ரூ 12-போக இம்மாதத்திலும் செலுத்தியது ரூ ... | 5 | 0 | 0 |
| | | | | கல்கத்தா H. E. Hooper-இடம்வாங்கிய E. Britanica புஸ்தக கிரயத்திற்காக 45-முதல் 48-வரை 4-வாயிதாவுக்குச்செல்... | 48 | 0 | 0 |
| ஆக மொத்தம் வரவு ரூ ... | 2887 | 14 | 10 | ஆக மொத்தம் செலவு ரூ ... | 1141 | 1 | 10 |
| | | | | போக பாக்கியிருப்பு ரூ ... | 1746 | 13 | 0 |
| ஆக மொத்தம் வரவு ரூ ... | 2887 | 14 | 10 | ஆக மொத்தம் ... ... | 2887 | 14 | 10 |

மதுரைத்தமிழ்ச்சங்கம்,
30—6—09.

எஸ். சாமிநாதையர்,
காரியதரிசி.

மதுரைத் தமிழ்ச்சங்கத்து

## 1909-ளு ஜூன்மீ" 1௳ முதல் 30௳ முடிவுவரையுள்ள வரவு செலவு கணக்கு.

| வரவு. | தொகை. ரூ. | அ. | ப. | செலவு. | தொகை. ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|---|
| சென்றமேமீ"த்தின் கடைசித்தேதியில் நின்ற பாக்கித்தொகை | 1746 | 13 | 0 | சங்கச்சிப்பந்தி சம்பளம் | 3 | 0 | |
| 1909-ளு ஜூன்மீ"த்திற்கு புதுக்கோட்டைமாதச்சந்தா வரவு | 50 | 0 | 0 | பயின்டிங்டிபார்ட்மென்ட் சில்லரைச்செலவு | 44 | 0 | 0 |
| செந்தமிழ்ச் சந்தா வரவு | 10 | 3 | 0 | பிரின்டிங் ஸ்டேஷனரி ... 62—1—4 | | | |
| ஆபீசு அச்சுக்கூலி வரவு | 127 | 0 | 0 | பிரின்டிங் ரயில்வேசாஜு ... 4—9—0 | | | |
| பயிண்டாபீசுக்கூலி வரவு | 12 | 9 | 0 | ஆபீசு எஞ்சின்சம்பந்தமாயஎண்ணெய்ச்செலவுரூ ... 8--11—9 | | | |
| புஸ்தகவிற்பனைவரவு | 116 | 8 | 0 | டை டிபார்ட்மென்ட் சில்லரைச்செலவு ... 33--14—9 | | | |
| (காகிதங்கள்) புஸ்தகங்கள் சையிட்டுப்பேபர் உபயோகத்திற்கு பயிண்டர் எடுத்துக்கொண்டவகையில் கிரயம் ரூ ... 0—7—0 | | | | ஆக பிரஸ்டிபாட்மெண்ட்செலவு | 109 | 4 | 10 |
| | | | | போஸ்டேஜ் செலவு | 28 | 4 | 0 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பயிண்டர் பாலசுந்தரமிடம் அபராதமும் கெட்டுப்போன கத்திக்கிரயமும் சேர்த்து வரவுரூ ... | 0—8—0 | | | | மாரமத்துவகையில் செலவு | | 1 | 10 | 0 |
| சௌமிய-ஹு ஆனிமீ த்திற்கு சங்கம் காலிமனை வாடகை ரூ ... | 20—0—0 | | | | செந்தமிழ்க்கலாசாலை வைத்திருக்கும் பங்களாவிற்கு 1908ஹு டிசம்பர் மீ முதல் 1909-ஹு மார்ச்சுமீ வரைமீ 4-க்குவாடகைசெலுத்தியது | | 72 | 0 | 0 |
| அட்வர்டையிஸ்மெண்ட் வரவு | 7-15—0 | | | | லைபிரேரிக்கு வாங்கிய புஸ்தகங்கள் கிரயம் | | 0 | 12 | 0 |
| ஆக மேற்காட்டிய விவரப்படி மிசலேனியஸ் வரவு | | 28 | 14 | 0 | ஆபீசு உபயோகத்திற்கு லெட்டர்பிரஸ் புஸ்தகம் பைல்வகையரு வாங்கியது கிரயம் | 4—2--11 | | | |
| | | | | | வண்டிவாடகைச் செலவு | 0–12—9 | | | |
| | | | | | மணியாடர் கமிஷன் செலவு | 0—1—0 | | | |
| | | | | | சங்கப்பதிப்புப்புஸ்தகங்களைத்திருநெல்வேலி கிருஷ்ணராயரவர்களுக்கு அனுப்பியதில்ரயில்சார்ஜும், அவர் லைபிரேரிக்கு அனுப்பிய புஸ்தகங்களுக்கும் ரயில்சார்ஜும் | 0–12—0 | | | |
| | | | | | ஆகமேற்காட்டிய விவரப்படிமிஸலேனியஸ் செலவு | | 5 | 12 | 8 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | Bombay Gresham Publishing Co. க்கு Gardener's Assistant புஸ்தகத்திற்குக்கிரயம் ரூ 52-க்கு இதுவரை செல்லாகியது ரூ 17-போக இம்மாதத்திலும் செல்லாகியது | 5 | 0 | 0 |
| | | | | 1908,1909-இரண்டுவருடங்களுக்குப் பதக்கங்கள் தயார்செய்துகொடுத்தவகையில் முறையே செல்லவேண்டிய தொகை ரூ 168—2—0+248—7—0 இருவகையிலும்கூடிய தொகை416—9—0-க்குநாளதுமீ சென்னை டி. ஆர். டாக்கர் அண்டு ஸன்ஸுக்குச்செல்லாக்கியது ரூ | 200 | 0 | 0 |
| ஆக மொத்தம் | 2091 | 15 | 0 | ஆக மொத்தம் | 469 | 11 | 6 |
| | | | | போக இருப்பு ரூ | 1622 | 3 | 6 |
| ஆக மொத்தம் | 2091 | 15 | 0 | ஆக மொத்தம் | 2091 | 15 | 0 |

S. SWAMINATHA AIYER.

*Secretary.* 22—8—09.

மதுரைத் தமிழ்ச்சங்கத்து

## 1909—ஞு ஜூலைமீ 1உ முதல் 31உ முடிவுவரையுள்ளவரவு செலவு கணக்கு.

| வரவு. | தொகை. ரூ | அ. | ப. | செலவு. | தொகை. ரூ | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|---|
| சென்ற ஜூன்மீ த்தின் கடைசித் தேதியில்நின்ற பாக்கித்தொகை | 1622 | 3 | 6 | 1909-ஞு மார்ச்சுமீ முதல் மேமீ முடியமீ 3-க்கு சங்கச்சிப்பந்தி சம்பளம் | 1235 | 5 | 3 |
| 1909-ஞு ஜூலைமீ த்திற்குப் புதுக்கோட்டை மாதச்சந்தா வரவு 50—0—0 | | | | கலாசாலை உபயோகத்திற்கு வாங்கிய புஸ்தகங்கள் | 6 | 0 | 0 |
| 1909-ஞு எப்பிரல்மீ முதல் ஜூன் மீ முடிய மீ 3-க்கு மீ 1-க்கு ரூ 225-வீதம் இராமநாதபுரம் சமஸ்தானம் தேவஸ்தானம் ஐவேஜிலிருந்து வரவு 675—0—0 | | | | பைண்டிங் ஸ்டேஷனரி 3—13—0 | | | |
| | | | | பைண்டிங் ரயில்வேசார்ஜ் 0—4—0 | | | |
| ஆக மேற்காட்டிய விவரப்படி சந்தா வரவு | 725 | 0 | 0 | பைண்டிங் டிபார்ட்மென்ட் சில்லரைச்செலவு 25—14—5 | | | |
| செந்தமிழ்ச்சந்தா வரவு | 31 | 2 | 0 | ஆக பைண்டிங் டிபார்ட்மென்ட் செலவு | 29 | 15 | 5 |
| ஆபீசு அச்சுக்கூலி வரவு | 100 | 4 | 3 | பிரிண்டிங் ஸ்டேஷனரி 23—9—4 | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| பைண்டாபீசு வரவு | | 22 | 6 | 6 |
| புஸ்தக விற்பனை வரவு | | 167 | 10 | 6 |
| காகிதநஷ்டக்கிரய வரவு | 2—2—0 | | | |
| சங்கம் காலிமனை வாடகை வரவு (சௌமிய௵ ஆடிமீ˚ த்திற்கு) | 20—0—0 | | | |
| ஆக மேற்காட்டியவிவரப்படி மிஸலேனியஸ் வரவு | | 22 | 2 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| ஆபீசு எஞ்சின் சம்பந்தமாய் எண்ணெய்ச் செலவு | 18—15—0 | | | |
| ஷை டிபார்ட்மெண்ட் சில்லரைச் செலவு | 7—3—7 | | | |
| ஆக பிரஸ் டிபார்ட்மெண்ட் செலவு | | 49 | 11 | 11 |
| போஸ்டேஜ் செலவு | | 12 | 15 | 0 |
| மராமத்துவகையில் செலவு | | 0 | 2 | 0 |
| லேட் மாணிக்கஞ்செட்டியார் பங்களாவிற்கு கீலக-௵ தைமீ˚ முதல் சௌமிய-௵ வைகாசிமீ˚ முடிய மீ˚ 5-க்கு வாடகை செலுத்தியது | | 100 | 0 | 0 |
| லைபிரேரிக்கு வாங்கிய புஸ்தகங்கள் | | 25 | 4 | 0 |
| காகிதம் வகையறாச்செலவு | 0—11—0 | | | |
| மணியார்டர் கமிஷன் செலவு | 0—1—0 | | | |
| வண்டிவாடகைச்செலவு | 0—6—6 | | | |
| இன்டெம்னிடி பாண்டின்மீது கோர்ட்டில் வாங்குகிற தேவஸ்தானம் தொகைகட்குப் பத்திரம்ரெஜிஸ்டர் வக்காலத்து வகையறாச்செலவு | 9—3—0 | | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | ஆக மேற்காட்டியவிபரப்படி மிஸலேனியஸ் செலவு | 10 | 5 | 6 |
| | | | | Bombay Gresham Publishing Co.க்கு Gardner's Assistant புஸ்தகத்திற்கு கிரயம் ரூ. 52-க்கு இதுவரைசெல்லாக்கியது ரூ. 22-போக இம்மாதத்திலும் செல்லாக்கியது | 5 | 0 | 0 |
| | | | | ஆக மொத்தம்... | 1474 | 11 | 1 |
| ஆக மொத்தம் ... | 2690 | 12 | 9 | போக பாக்கியிருப்பு ... | 1216 | 1 | 8 |
| ஆக மொத்தம் ... | 2690 | 12 | 9 | ஆக மொத்தம் ... | 2690 | 12 | 9 |

S. SWAMINATHA AIYER,
*Secretary.* 22—8—09.